விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Email:kalyanmalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 12 ஞாயிற்றுக்கிழமை (25.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 127

## கொரோனா 4 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற் 15

## 1 இலட்சத்தை தாண்டிய கொரோனா தொற்றாளர்கள்

### நேற்றும் +895 பேர் பாதிப்பு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத் தைத் தாண்டியது.
நாட்டில் மேலும் +895 பேர் நேற்று கொரோனாவால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப் 15

# அனைவரும் இணைந்து யாழில் கொரோனாவை கட்டுப்படுத்துவோம்



### யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவிப்பு

*(யாழ்ப்பாணம்)*
அனைவரும் ஒன்றிணைந்து யாழ்.மாவட்டத்தில் கொரோனாவை கட்டுப்படுத்துவோம் என யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.
மேலும் தென்னிந்திய மீனவர்களுடன் யாழ்.மீனவர்கள் தொடர்புகளை பேண வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.
(3ஆம் பக்கம் பார்க்க)

## ஈஸ்டர் தாக்குதல் இதுவரை 702 பேர் கைது

(கொழும்பு)
கடந்த 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர் பாக இதுவரை 702 15

## தீக்காயத்துக்குள்ளான 8 மாத கர்ப்பிணி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
தீக்காயங்களுடன் யாழ்ப் பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட 8 மாதம் நிரம்பிய கர்ப்பிணிப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.
பெண் மண ணை ணைய் 15

### தகாத வார்த்தைகளால் தாயை திட்டியதால்
## தந்தையை அடித்துக் கொன்ற மகன்
### திருநெல்வேலி கலாசாலை வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
தகாத வார்த்தைகளால் தாயைத் திட்டியதால் ஆத்திர மடைந்த மகன் தந்தையை அடித்து படுகொலை செய்துள்ளார்.
திருநெல்வேலி கலாசாலை வீதியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
சம்பவத்தில் 5 பிள்ளைகளின் தந்தையான இராசமணி இரத்தினசிங்கம் (வயது-52) என்பவரே உயிரிழந்தார்.
நேற்று முன்தினம் இரவு வீட்டுக்கு மதுபோதையில் சென்றகுடும்பத்தலைவர் மனைவியுடன் 15

## ரிஷாட் மீண்டும் கைது



(கொழும்பு)
முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனும் அவரது சகோதர ரான ரியாஜ் பதியுதீனும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தி னால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.
ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் மேற்கொள் 15



## புலிகளை முறையாக பாதுகாக்க வேண்டும்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)
எமது நாட்டில் புலிகளை முறையாகப் பாதுகாக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கருத்து வெளியிட்டுள்ளார். 15

### வடக்கில் நேற்று 11 பேருக்கு கொரோனா
## யாழ்.சிறைக் கைதிகள் 7 பேர் இராணுவச் சிப்பாய்கள் 3 பேர்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் 8 பேர் உட்பட வடக்கில் 11 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
இதன்படி யாழ். 15

### அரியாலை நாவலடி குளத்தில்
## குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - அரியாலை நாவலடி குளம் ஒன்றில் குளிக் கச் சென்றவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அதே இடத்தைச் சேர்ந்த பிரதீபன் என்ப 15

### ரிஷாட் கைதில்
## ராஜபக்ஷ அரசின் கொரூரமான இராணுவ முகம் வெளிப்படுகின்றதா?

(கொழும்பு)
அகில இலங்கை 15

## பொலிகண்டி ஆலடியில் வெடிபொருட்கள் மீட்பு



(கரணவாய்)
வடமராட்சி பொலிகண்டி ஆலடி பகுதியில் புலிகள் உடையதாக இருக்க லாம் என சந்தேகிக்கப்படும் வெடி பொருட்கள் சில இராணுவத் தினரால் மீட்கப்பட்டுள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Maths Personal class**

யாழ்.பல்கலைக்கழக பட்டதாரியினால் வீடுகளுக்கு வந்து தனியாகவோ குழுவாகவோ தரம் 6 - 11 வரையான மாணவர்களுக்கு கணித பாடம் கற்பிக்கப்படும். (6695)

தொடர்பு
076 724 0044

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1964 ஆம் ஆண்டு, கனடா, இலங்கை இரட்டைப் பிரஜா உரிமை உள்ள விவாகரத்துப் பெற்ற பிள்ளைகளற்ற யாழில் அரச சேவையில் MBBS Doctor ஆக பணிபுரிபவர்க்கு, வயது 30 - 40 இற்கு இடைப்பட்ட மணமகள் தேவை.

தொடர்பு (6702)
072 619 2526


# காலை வணக்கம் தெரிவிக்கவில்லை ஆசிரியை அடித்ததில் மாணவனின் கண் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் பிரபல பாடசாலையொன்றின் 9 ஆம் தரத்தில் கல்வி கற்றுவரும் 14 வயது மாணவன் ஒருவர் ஆசிரியை தாக்கியதில் அடி காயங்களுடன் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பாடசாலை விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றுவரும் மாணவன் வகுப்பறை தலைவராக இருந்து வருவதாகவும், கடந்த 20 ஆம் திகதி வகுப்பறைக்கு பாடத்திற்கான ஆசிரியை வரும்போது அவருக்கு எழுந்து நின்று காலை வணக்கம் தெரிவிக்கவில்லை என அந்த ஆசிரியை பிரம்பினால் அடித்துள்ளார்.

இதன்போது பிரம்பு மாணவனின் கண்ணில் குத்தி காயமேற்பட்டுள்ளதுடன், மாணவன் கண்ணில் ஏற்பட்ட வலி காரணமாக அழமுற்பட்டபோது வகுப்பறைக்கு இடையூறு செய்யாது இருக்குமாறு மாணவனை ஆசிரியை அச்சுறுத்தி கதிரையில் அமர்த்தியுள்ளார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட மாணவன் அடிகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ்.பொலிஸ் நிலையத்தில் தாயார் வழங்கிய முறைப்பாட்டிற்கமைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-03,18,33)


யாழ். **கலாலயா** பயிற்சியகம்

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

2020 A/L, 2021 O/L எடுத்த மாணவிகளே! வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே! மற்றும் ஆர்வம் உள்ள மகளிரே!

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- *கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான் Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS *(முக அழகுக்கலை)* Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்* 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS *(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

இம்முறை A/L, O/L எடுத்த மாணவிகளுக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்
02.05.2021 ஞாயிறு காலை 10.00மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்
05.05.2021 புதன் காலை 10.00 மணி

(C-2038) -இயக்குநர்- Guru



**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?**

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (6701)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 . 10 . 1947 | 24 . 04 . 2021 |

## திரு. பரமநாதர் தர்மராஜா

நாவற்குழி கோவிலாகண்டியைப் பிறப்பிடமாகவும் முருகேசர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும், தற்போது கோகுலவீதி கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட பரமநாதர் தர்மராஜா அவர்கள் 24.04.2021 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்ற பரமநாதர் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலம் சென்ற வன்னியசிங்கம் மங்கையற்கரசி அவர்களின் அன்பு மருமகனும், காலம் சென்ற சுவர்ணராணி அவர்களின் அன்புக் கணவரும், நிரூபன், நிரஜா, நித்ஜா ஆகியோரின் அன்புத்தந்தையும், சுபசுரியரினின் அன்பு மாமனாரும், காலம் சென்ற செல்வராசா , பாலசுப்பிரமணியம், அன்னபூரணம் ஆகியோரின் அன்பு சகோதரரும், கிருஷ்ணகுலசிங்கம், காலம் சென்றவர்களான இந்திராணி, தவபாலசிங்கம், சிவானந்தசிங்கம், தேவராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.04.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இல.28, கோகுலவீதி கோண்டாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
077 1435795, 076 4344254

(C-2037) தகவல் குடும்பத்தினர்


மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் கிளை

**தற்போது யாழ். நகரிலும்!**

இல. 125, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

எமது சேவைகள்

- மகப்பேறு தொடர்பான சிகிச்சைகள்
- கருவள சிகிச்சை ( Subfertility )
- பல் வைத்திய சிகிச்சை
- சிறுவர்களுக்கான மருத்துவ சேவைகள்
- பொது சத்திர சிகிச்சைகள்
- சகல விதமான இரத்த பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்
- ஏனைய மருத்துவ ஆலோசனைகள்
- மருந்தக வசதிகள் ( Pharmacy )
- நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஆய்வுகூட வசதிகள்

எமது மருத்துவர் குழு

- Dr.N. சரவணபவா
  Obstetrician & Gynecologist (VOG)
- Dr.S. ரகுராமன்
  MBBS, MD (Obs&Gyn), MRCOG (UK)
  Obstetrician & Gynecologist (VOG)
- Dr.M. சிவகுமார்
  MBBS, MS, FRCS (UK), General Surgeon
- Dr.S. மதிவாணன்
  MBBS, MD Surgery, MRCS Fellowship in Vascular Surgery (UK)
  General Surgery with Vascular Interest
  General Surgeon
- Dr.S. சுதர்ஷன்
  MBBS (SL), MD (Orthopedics), MRCS (UK)
  Orthopedic Surgeon
- Dr.S.T. சர்மா
  MBBS, MD, MRCS, General Surgeon
- Dr.P. சஜீவன்
  MBBS, MRCS (Edinburgh), MD Surgery
  Pediatric Surgeon
- Dr.S. மகாதேவன்
  MBBS, MD (CEY.), General Physician

(6657)

☎- 021 222 4443

பரிசோதனை மாதிரிகள் உங்களின் வீட்டிற்கே வந்து பெற்றுக்கொள்ளப்படும்.
( Mobile Sample Collection )

கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் மூளாய் ( வ / து )
குடும்ப மருத்துவ நிறுவனம் ஒருங்கிணைந்த மருத்துவ சேவைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சமஷ்டி ஆட்சி ஏற்படலாம்

## சுசில் பிரேமஜயந்த ஆரூடம்

(கொழும்பு)

**ஸ்ரீலங்காவில் சமஷ்டி ஆட்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான சுசில் பிரேமஜயந்த ஆரூடம் வெளியிட்டுள்ளார்.**



இருப்பினும் ஒருபோதும் தனிநாடொன்று உருவாகாது என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிலர் இலங்கை இரண்டாகப் பிரிவாகின்றதாகவும் தனிநாடு உருவாகின்றது என்றும் விமர்சனங்களை வெளியிட ஆரம்பித்துள்ளனர்.

13 ஆவது திருத் தமானது நாட்டில் 9 மாகா ணங்களாகப் பிரிக்கப்படுகின் றது. அதில் ஒன்றாகிலும் பிரிக் கப்பட்டால் நாடு சமஷ்டியாகும் என்பதை ஜே.ஆர்.ஜயவர்தன கூறியிருந்தார்.

பிரிவாவதற்கான சந்தர்ப்பம் இருக்கின்றது. ஆளுநர் நீக்கப்பட்டால் அதற்கான வாய்ப்பு உள்ளது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்திற்கமையவே ஆளுநர்கள் நியமிக்கப்படுகின்றனர். அதனால் மாகாண சபைகளுக்கு நிறைவேற்றதிகாரம் இல்லை. அதனை பாராளுமன்றத்தின் ஊடாக குறைக்கவும் முடியும்.

மாகாணங்களுக்கு புறம்பான நீதிமன்றங்கள் இல்லை. மாவட்ட நீதிமன்றங்கள் நாட்டின் ஒட்டுமொத்த நீதிமன்றக் கட்டமைப்பிற்குள் தான் இருக்கின்றன.

ஆகவே மாகாண சபை முறை வரும்போது அன்று கைகளை உயர்த்தியவர்கள் இன்று நாடு பிரிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

எதிர்க்கட்சியினர் தெரிவிப்பதுபோல கொழும்பு போர்ட் சிட்டி திட்டம் சீனக் காலணியாகாது, தனிநாடாகவும் மாறாது.

தற்போது நாட்டில் அமுலில் உள்ள சட்டங்களில் 7 சட்டங்களைத் தவிர 57 சட்டங்கள் அந்தத்திட்டமுள்ள பகுதியில் அமுலாகும் எனத் தெரிவித்தார். (நி-4)

## அநாவசிய வருகை வேண்டாம்

### கதிர்காம ஆலய நிர்வாகம்

(கொழும்பு)

அத்தியாவசிய யாத்திரை மற்றும் வழிபாடுகளுக்காக மாத்திரம் கதிர்காமம் புனித ஸ்தலத்திற்குள் பிரவேசிக்குமாறு ஆலய நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது. (நி-4)

## 72 மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை

### சரத் வீரசேகர

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ஆகியோர் விசாரணைக்காக 72 மணி நேரம் தடுத்து வைக்கப்படவுள்ளனர் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலை நடத்தியவர்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் றியாஜ் பதியுதீன் ஆகியோர் நேற்றுக் காலை கொழும்பில் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் அவர்களை விசாரணைக்காக 72 மணி நேரம் தடுத்து வைக்க சி.ஐ.டிக்கு அனுமதி உள்ளது என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் விதிகளின் கீழ் குறித்த இருவரும்கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி-4)

## இரண்டாம் கட்ட தடுப்பூசி மே மாதம் 3 ஆம் திகதி

(நல்லூர்)

வடக்கு மாகாணத்தில் இரண்டாம் கட்ட தடுப்பூசி எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்று வரும் மாவட்ட கொரோனா செயலணி கூட்டத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-4-33)

## 13 ஆவது திருத்தத்தையும் மாகாண சபையையும் பாதுகாக்க வேண்டும்-சுரேஷ் பிறேமச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

பதின்மூன்றாவது திருத்தத்தையும் மாகாண சபையையும் பாதுகாக்க வேண்டும். அதற்கு தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்ற ரெலோவின் கருத்தை வரவேற்கின்றோம் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலைவர். சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.



மாகாண சபை முறைமையைக் காப்பதற்கு தமிழ்த் தரப்புகள் ஒன்றிணைய வேண்டும் என்று அண்மையில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பேச்சாளர் ஊடக அறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அவரது அறிக்கையை வரவேற்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் நேற்று ஊடகங்களுக்கு அறிக்கையொன்றினை அனுப்பி வைத்துள்ளார். அதில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மௌனிக்கப்பட, இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்குக் கிடைத்த அர்ப்ப சொற்ப சலுகையான மாகாண சபை உரிமைகளைப் பறிக்கின்ற அதேசமயம், புதிய அரசியல் சாசனத்தினூடாக மாகாண சபை முறைமையை இல்லாமல் செய்கின்ற ஒரு கருத்தும் நிலவுகின்றது.

மாகாண சபை முறைமையை இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடாக கொண்டு வந்தது என்ற அடிப்படையில், பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் என்றும் உடனடியாக மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதையும் இந்தியா இலங்கைக்கு தொடர்ந்தும் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது.

இந்தச் சூழ்நிலையில், மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொள்ளாத தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய பல தரப்புகள் நையில் இருப்பவற்றைக் கோட்டை விட்டு விடக்கூடாது என்ற அடிப்படையில் மாகாண சபையைக் காப்பாற்ற முற்படுவது வரவேற்கத்தக்கது.

மாகாண சபைக்கான அதிகாரங்கள் போதாதென்பதை நாம் அதன் ஆரம்ப காலத்திலிருந்தே கூறி வருகின்றோம். சமஷ்டி அரசியலமைப்புமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதிலும் தமிழ் மக்களுக்கான சுயாட்சி உருவாக்கப்பட வேண்டும் என்பதிலும் எமக்கும் மாற்றுக் கருத்து கிடையாது.

ஆனால், இன்றைய காலகட்டத்தில், சிங்கள பௌத்த மேலாதிக்கமானது தமிழர்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கி, எந்தவித அதிகாரமுமற்ற ஒரு சிறுபான்மையினராக வாழ வேண்டும் என்ற ஒரு நிலையில், உள்ளவற்றைக் காப்பாற்ற வேண்டியது அவசியமாகின்றது. எனவே இன்றைய காலத்தின் தேவை கருதி, அவசிய அவசரம் கருதி வெறுமனே அறிக்கையோடு மட்டும் நிற்காமல் ரெலோ இதய சுத்தியுடன் முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு நாம் பக்கபலமாக இருப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம் என அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார். (நி-4)

## அனைவரும் இணைந்து கொரோனாவை கட்டுப்படுத்துவோம்



(கொழும்பு)

அனைவரும் இணைந்து யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்றினைக் கட்டுப்படுத்துவோம் என மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்ற விசேட கொரோனா தடுப்பு செயலணி கூட்டத்தில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மீனவர்கள் தயவு செய்து தென்னிந்திய மீனவர்களோடு தொடர்புகளை பேணாதீர்கள்.

அவ்வாறு தொடர்பினை பேணிக்கொள்வதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா தீவிரமடையக் கூடிய நிலை காணப்படுகின்றது. அத்தோடு இந்தியாவில் தற்பொழுது நிலைமை தீவிரமாக அதிகரித்து காணப்படுகின்றது.

அந்த வைரஸ் இங்கு பரவினால் தொற்று தீவிரமடையும். எனவே அந்த விடயம் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தற்போது மழை பெய்து அதன் காரணமாக யாழ்ப்பாண குடாநாட்டில் டெங்கு தொற்று சற்று அதிகமாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அது தொடர்பில் நாங்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தயாராக இருக்கின்றோம். எனினும் பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினர், முப்படையினர், பொலிஸார் ஆகியோருடன் இணைந்து யாழ்.மாவட்டத்தில் கொரோனாவினை கட்டுப்படுத்துவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டினை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் என அவர் தெரிவித்தார். (நி-18-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யங்லயன்ஸ், கருணாகரன், பொம்மேர்ஸ் அடுத்த சுற்றுக்கு தகுதி





F.A கிண்ணத்திற்கான வடமராட்சி அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்ட தொடர் கருணாகரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் யங்லயன்ஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை ரேஞ்சஸ் அணிமோதியது. ஆட்ட நேரத்தில் இரு அணிகளும் ஒவ்வொரு கோல்களைப் பதிவு செய்தன. இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் யங்லயன்ஸ் அணி 5.4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளது.

இன்னொரு ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் கருணாகரன் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் கருணாகரன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

மற்றொரு ஆட்டத்தில் கரவெட்டி சுடரொளி அணியை எதிர்த்து வதிரி பொம்மேர்ஸ் அணி மோதவிருந்தது. இதில் சுடரொளி அணி வராமையினால், பொம்மேர்ஸ் அணி அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. (4-6-90)

## வவுனியா வடக்கு பிறீமியர் லீக் ராஜராஜ சோழன் அணி சம்பியன்




வவுனியா வடக்கு பிறீமியர் லீக் துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா புளியங்குளம் புரட்சி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் எல்லாளன் மற்றும் ராஜராஜ சோழன் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற எல்லாளன் அணி களத்தடுப்பை தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜராஜ சோழன் அணித் தலைவர் இல்காம் மற்றும் துஷ்யந்தராஜ் ஆகியோரின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் மூன்று இலக்குகளை மாத்திரம் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றனர். அவ்வணி சார்பில் துஷ்யந்தராஜ் அதிரடியாக துடுப்பெடுத்தாடி 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

101 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய எல்லாளன் அணி 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 59 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். இதனால் ராஜராஜ சோழன் அணி 41 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. இதில் தொடராட்ட நாயகனாக ராஜராஜ சோழன் அணியின் அணித் தலைவர் இல்காம், ஆட்டநாயகனாக ராஜராஜ சோழன் அணி வீரர் துஸ்யந்தராஜ், சிறந்த களத்தடுப்பாளராக பண்டாரவன்னியன் அணி வீராங்கனை கோகிலாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

பண்டார வன்னியன், எல்லாளன், ராவணன், ராஜராஜ சோழன் ஆகிய நான்கு அணிகள் பங்குபற்றிய குறித்த வெற்றிக் கிண்ணப் போட்டிகளில் இவ்வருடம் முதல் முறையாக பெண்களும் இணைத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-6-90)




## 2 ஆவது இருபது-20 போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தியது சிம்பாவே

ஹராரே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 118 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

கமுன்ஹாகாம்வே 34 சக்காப்வா 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில், மொஹமட் ஹஸ்னெய்ன் மற்றும் டேனிஷ் அஸிஸ் ஆகியோர் தலா 2, பஹீம் அஷ்ரப், ஹர்சாட் இக்பால், ஹரிஸ் ரவூப் மற்றும் உஸ்மான் காதிர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 119 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 19.5 ஓவர்கள் நிறைவில் 99 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் சிம்பாவே அணி 19 ஓட்டங்களால் சிறப்பான வெற்றியை பதிவு செய்தது.

பாபர் அசாம் 41, டேனிஷ் அஸிஸ் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில், லூக் ஜோங்வே 4, ரியான் பர்ல் 2, பிளெஸிங் முஸ்ரபானி மற்றும் ரிச்சர்ட்ன்கார்வா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக லூக் ஜோங்வே தெரிவு செய்யப்பட்டார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று அடையாளம் காணப்படும் பகுதிகளுக்கு உடனடியாக பயணக்கட்டுப்பாடுகளை விதியுங்கள்

## பல்வேறு வகையான வைரஸ்க்கள் எந்த நேரத்திலும் நாட்டை தாக்கலாம்

### –அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை–

(கொழும்பு)

கொரோனா தொற்று பரவல் காரணமாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட பகுதிகளை கண்டுபிடிக்க அரசாங்கமும் சுகாதார அதிகாரிகளும் உடனடி கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை தொற்று அடையாளம் காணப்படும் பகுதிகளுக்கு பயணக் கட்டுப்பாடுகள் தாமதமின்றி விதிக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த விடயம் குறித்து கருத்து தெரிவித்த அச்சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஷெனல் பெர்னாண்டோ, தற்போது பல்வேறு வகையான வைரஸ் வகைகள் உலகில் வேகமாக பரவி வருகின்றன. அண்டை நாடான இந்தியா ஏற்கனவே அதிக ஆபத்தை எதிர்கொண் டுள்ளது.

புத்தாண்டு காலப்பகுதியில் மக்களின் கவனக்குறைவான நடத்தை காரணமாக உலக ளாவிய தொற்று எந்த நேரத்திலும் இலங்கையை பாதிக்கலாம்.

இதன் காரணமாக, நாளாந்தம் அடையாளம் காணப்படும் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன்படி, தற்போது ஆபத்தில் உள்ள நாட்டில், கொரோனாவை கட்டுப்படுத்த, அரசியல் தலைவர்கள், சுகாதாரத் துறையினர் மற்றும் பொது மக்களின் பங்களிப்பு ஆகியவை அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

## மூவாயிரம் பணியாளர்கள் தபால் சேவையில் இணைப்பு

(கொழும்பு)

தபால் திணைக்களத்திற்கு புதிதாக 3 ஆயிரம் பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார். இவர்கள் மாகாண மட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டதாக தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தகவல் வெளியிட்டுள்ள அவர்,

கனிஷ்ட தபால் சேவைக்கர்க நாளாந்த கொடுப்பனவின் அடிப்படையிலேயே புதிதாக ஊழியர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். நிலவும் வெற்றிடத்திற்கமைய அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தபால் விநியோகம், அலுவலக உதவியாளர்கள் போன்ற பணிகளுக்காகவே இவர்கள் தபால் திணைக்களத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார். (நி-4)





நடிகர் விவேக் நினைவாக விஜய் ரசிகர்கள் மற்றும் காந்திஜி ஸ்டார் சுப்பர் கிங்ஸ் இணைந்து பாடசாலைகளில் மர நடுகையினை மேற்கொண்டு வருகின்றனர். இதில் முதற்கட்டமாக நேற்று உயரப்புலம் மகா வித்தியாலயம், ஆறுகால் மடம் வைத்தியலிங்கம் வித்தியாலயம், கொக்குவில் இராமகிஷ்ணா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் மர நடுகை மேற்கொள்ளப்பட்டது.


# மரண அறிவித்தல்



## திருமதி. கந்தசாமி இரத்தினம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இரத்தினம் 24.04.2021 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் இராசம்மா (அராலி) ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசையா, குணரத்தினம், தங்கம்மா, அன்னம்மா, சீவரத்தினம், இராசரத்தினம் மற்றும் ஞானரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சர்வாம்பிகைதேவி(கனடா), கமலேஸ்வரன் (லண்டன்), சிவனேஸ்வரன் (கொழும்பு/யாழ்ப்பாணம்), நிர்மலாதேவி(சுவிஸ்), லலிதாதேவி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் ஜெயலட்சுமி, பத்மலோஷனி, விஜயசுந்தரம், மோகனஶ்ரீதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும், கோபிநாத், ஆதி, பபின், சதுர்ஷன், சாயினி, நிதுஷன், சரணியன், கிரிஷன், கேசவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சார்விக் மற்றும் தீரன் ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(6700)


தகவல்:
[illegible]
077 768 4407


# நுவரெலியாவிற்கு சுற்றுலா செல்வதை தவிர்க்கவும்

(கொழும்பு)

நாட்டின் எந்தவொரு பகுதியிலிருந்தும் நுவரெலியா நகருக்கு செல்வதை பொது மக்கள் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் வசந்த காலக் கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் இருந்து உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் பாரிய அளவில் நுவரெலியாவிற்கு பயணித்துள்ளனர்.



அவ்வாறு நுவரெலியாவிற்கு பயணித்தவர்கள் மற்றும் நுவரெலியா மாவட்டத்தை சேர்ந்தவர்களும் நேற்று முன்தினம் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இலங்கை உட்பட 5 நாடுகளுக்கு பயணத்தடை விதித்தது சவுதிஅரேபியா

(கொழும்பு)

இலங்கை உட்பட மேலும் சில நாடுகளுக்கு சவுதி அரேபியா பயணத்தடை விதித்துள்ளதாக சவுதி அரேபிய விமானப் போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது குறித்து சவுதி அரேபிய விமானப் போக்குவரத்து அதிகாரசபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் ஏனைய நாடுகளுக்கு பயணித்துள்ள சவுதி அரேபிய பிரஜைகள் மீண்டும் நாடு திரும்புவதற்கு 72 மணித்தியால கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே கொரோனா வைரஸ் மூன்றாம் அலை எச்சரிக்கை காரணமாக முன்னதாக கனடா, ஓமான், பிரித்தானியா ஆகிய நாடுகள் ஆசிய நாடுகள் சிலவற்றுக்கு பயணத்தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனி, ஞாயிறு விடுமுறை

(கரணவாய்)

வடமராட்சி சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்க ஆளுமைக்குட்பட்ட அங்கத்தவர்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதி மேதினப் பொது விடுமுறை வழங்கப்பட்டுள்ளது எனவும் மறுநாள் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமைபோன்று பொது விடுமுறை தினமாகும் எனவும் வடமராட்சி சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது. (5-4-60)

## மின்சார சபைக்கு காணியை குத்தகைக்கு வழங்கியது நகர சபை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான காணியை இலங்கை மின்சார சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்க நகரசபை உறுப்பினர்கள் இணக்கம் காட்டியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே உறுப்பினர்கள் காணி வழங்க சம்மதித்தனர்.

இலங்கை மின்சார சபையினர் சாவகச்சேரி நகர சபையிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக உதய சூரியன் கிராமத்தில் நகர சபையின் பழைய கொல்களம் அமைந்திருந்த காணியை 99 வருட குத்தகைக்கு வழங்க இணங்கியுள்ளனர்.

தற்போது சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற மின்சார சபையானது நகரசபையினர் காணி வழங்கத் தவறும் பட்சத்தில் கொடிகாமம் பகுதிக்கு நகரும் சூழ்நிலை காணப்படுவதாகவும் உதய சூரியன் கிராமத்தில் இவ்வாறான திணைக்களங்களைக் கொண்டுவருவதன் ஊடாக கிராமத்தை அபிவிருத்தி செய்து சிறந்த நிலைக்கு கொண்டுவர முடியும் எனவும் நகரசபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். (5-4-30)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பன்னிரு திருமுறைத் திரட்டு திருப்புகழுடன் முப்பது தொகுதிகளுக்கான நூல் வெளியீடு நாளை திங்கட்கிழமை நண்பகல் 12.45 மணியளவில் அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஆலய முன்னாள் தலைவர் வே. இரகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவநெறிக் கலாநிதி கலாபூஷணம் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் கலந்து கொள்வார். (5-4-6)

(கிளிநொச்சி)

திருமதி. சு. வள்ளியம்மையின் அகரம் எனது சிகரம் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அக்கராயன் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் த. வரதராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பா. ஜெயகரன் மற்றும் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ. வேழமாலிகிதன் ஆகியோர் கலந்து கொள்வர். (5-4-6)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்கள் சங் கத்தின் நம்பிக்கை நிதியத்தின் தொழிற்கல்வி பயிற்சி நிலை யம் கல்லூரிக்கு அண்மையில் உள்ள, இலக்கம் 55, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள கட்டடத்தில் கல்லூரி அதிபர் ஆர். செந்தில்மாறனால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

## விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை மறுதினம் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி இராமநாதபுரம் வயலூர் முருகன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ. தே.கௌரிசங்கரக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

## எழுத்தாளர் அமைப்பு அங்குரார்ப்பணம்

(நல்லூர்)

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கீழ் மாவட்ட கலாசார திணைக்களத்தினரால் யாழ்ப்பாண மாவட்ட எழுத்தாளர் அமைப்பினை உருவாக்குதல் தொடர்பான அங்குரார்ப்பண நிகழ்வு அரசாங்க அதிபர் க. மகேசன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ்ப்பாண மாவட்டத்தில் பத்தொன்பது பதிவு செய்யப்பட்ட எழுத்தாளர் சங்கங்கள் உள்ளன.

அரசாங்கத்தினால் பல்வேறு கௌரவங்கள் எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே இவ் ஆண்டுக்கான புதிய நிர்வாகத்தினை தெரிவு செய்து எதிர்காலத்திலும் சிறந்த படைப்புக்களை உருவாக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் எழுத்தாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், குறிப்பாக நூல்களை வெளியிடுதல், விற்பனை செய்தல் மற்றும் ஊக்கப்படிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன், வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள், பிரதேச மட்ட எழுத்தாளர் சங்க பிரதிநிதிகள், எழுத்தாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-4-18-33)



இணுவில் மஞ்சத்தடி ஸ்ரீ அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படம்: ரவிசாந்)



கோண்டாவில் துர்க்கா இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது. (படம்: ரவிசாந்)

## தபாலகத்திற்கு கட்டடம் அமைத்து தருமாறு சமூக மட்ட அமைப்புக்கள் கோரிக்கை

(வரணி)

வரணியில் அமைந்துள்ள உப அஞ்சல் அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறு அப்பகுதி சமூக அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இவ்விடயம் தொடர்பாக மேலும் குறிப்பிடுகையில், வரணி உப அஞ்சல் அலுவலகமானது கொடிகாமம் பிரதான தபாலகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. வரணிப் பிரதேசத்தில் உள்ள ஒன்பது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் சேர்ந்த மக்களுக்கும் சேவையை வழங்கி வருகின்றது.

தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் மின்சாரக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல், முதியோருக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளல் போன்ற பல்வேறு தேவைகளைப் பெற்றுக்கொள்ள உப அஞ்சல் அலுவலகத்திற்குச் செல்கின்றனர்.

அத்தோடு நாற்பது வருடங்களுக்கு மேலாக நிரந்தரக் கட்டடம் இல்லாமல் தனியார் வீடு ஒன்றில் இயங்கி வருவதாக்வும் தெரிவிக்கின்றனர்.

எனவே வரணி உப அஞ்சல் அலுவலகத்திற்குப் பொருத்தமான இடத்தில் நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறு சமூக மட்ட அமைப்புக்களும் ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

1988. யாழிந்து. விசாகம். QA Software Engineer. சுன்னாகம். பதிவு: 4196. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriage Service.com, 076 664 9401. (C-1323)

## மணமகன் தேவை

1986. யாழிந்து. விசாகம். Development Officer. யாழ்ப்பாணம். பதிவு: 4140. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriage Service.com, 076 664 9401. (C-1324)

## மணமகன் தேவை

1993. யாழிந்து. பூரட்டாதி. Senior Executive. யாழ்ப்பாணம். பதிவு: 5736. தரகர்கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriage Service.com, 076 664 9401 (C-1325)

## மணமகள் தேவை

1996. யாழிந்து. புனர்பூசம். Software Engineer. மீசாலை. பதிவு: 4915. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService. com, 076 664 9401. (C-1326)

## மணமகள் தேவை

1992. யாழிந்து. மகம். Doctor சுன்னாகம். பதிவு: 5522. தரகர்கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService. com, 076 664 9401. (C-1327)

## மணமகள் தேவை

1989. யாழிந்து. ரோகினி. Doctor. மானிப்பாய். பதிவு: 5701. தரகர்கூலி இல்லை. Unlimited குறிப்புகள்., பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService. com, 076 664 9401. (C-1328)

## மாடு பார்க்க வேலையாள் தேவை

புத்தளம் நகருக்கு அருகில் 15 முதல் 20 வரையான மாடுகள் பராம ரிக்க, பால் கறக்க, புல்லு வளர்ப்பதில், தீவனம் கொடுப்பதில் அனுபவமுள்ள வேலையாள் தேவ்வை. தங்குமிட வசதி உண்டு. சிறு குடும்பமாக சருவது விரும்பத்தக்கது. அனுபவம் உள்ளவர்க்கு முன் னுரிமை வழங்கப்படும். பால் தரும் மாடுகள் 5 முதல் 10 வரை மட்டுமே. (C-1329)

தொடர்பு:-
**077 731 9426**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1990 இல் பிறந்த கிரக பாவம் 33 1/2. சுவாதி நட்சத்திரத்தில் பிறந்த மணமனுக்கு பொருத்தமான மணமகள் தேவை

**தொடர்பு: 077 163 9557**
**077 653 2446** (6855)

# பேருந்துகள் தொடர்பில் பயணிகள் முறையிடலாம்



(கொழும்பு)

அரச மற்றும் தனியார் பேருந்துகளில் பயணிகள் ஆசன அடிப்படையில் மாத்திரம் பயணம் செய்ய வேண்டும். பேருந்துகளில் சமூக இடைவெளியைப் பேணுவது அத்தியாவசியமாகும்.

அத்துடன் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை பின்பற்றாத பேருந்து சாரதி, நடத்துநருக்கு எதிராக பயணிகள் முறைப்பாடு செய்யலாம் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பொது போக்குவரத்து சேவையின் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரச மற்றும் தனியார் பேருந்துகளில் ஆசன அடிப்படையில் மாத்திரம் பயணிகளை ஏற்றுமாறு குறிப்பிட்டுள்ளோம்.

அரச பேருந்துகளில் ஆசன எண்ணிக்கையின் அடிப்படையில் பயணிகள் பயணம் செய்வதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கைகளை தனியார் பேருந்துகளிலும் செயற்படுத்த தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

கொவிட்-19 வைரஸ் தொற்று பொது போக்குவரத்து சேவை ஊடாக தீவிரமாக பரவலடைவதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது.

சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை பின்பற்றாத சாரதி, பேருந்து நடத்துநர் தொடர்பில் பொதுமக்கள் வீதி போக்குவரத்து அதிகார சபை, போக்குவரத்து பொலிஸாருக்கு முறைப்பாடளிக்கலாம் என அவர் தெரிவித்தார். (நி-4)

## வேலையாள் தேவை

கொழும்பு-12 இயங்கி வ்ரும் யாழ். ரைஸ் & கறி உணவகத்திற்கு முன் அனுபவம் உள்ள சமையல் வேலையாள் மற்றும் சமையலறை பணியாளர் தேவைப்படு கின்றனர். தகுந்த வருமானம் மற்றும் சிறந்த வசதிகள் செய்து தரப்படும்.

தங்கள் பெயர் மற்றும் தொலைபேசி எண் என்பவற்றை 077 707 8893 இற்கு SMS அனுப்புங்கள் திருப்பி அழைக்கப்படும். அல்லது armourpub@gmail.com இற்கு E-mail அனுப்புங்கள். (6631)

# வேலை வாய்ப்பு
## Samugam Media

- Translator
- Content Writer
- Area Reporter
- Social Media Executivate
- Video Editor
- News Presenter

திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்
(குறைந்தது 2 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்)

**Contact No:- +94 76 245 5533**
**+94 77 149 7888**
**Mail ID:- hr.samugam@gmail.com** (6689)

# கடனட்டைகளுடன் இரகசிய எண்களை வைத்திருக்க வேண்டாம்

(கொழும்பு)

உடுதும்பர மற்றும் அயகமவில் ஆகிய பிரதேசங்களில் கடனட்டைகள் திருடப்பட்ட இரண்டு சம்பவங்கள் இடம் பெற்றன.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகள் இடம் பெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உடுதும்பர பகுதியில் திருடப்பட்ட கடனட்டையில் இருந்து 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பணமும் மற்றும் அயகம பிரதேசத்தில் திருடப்பட்ட கடனட்டையில் இருந்து சுமார் 4 இலட்சம் ரூபாய் பணமும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

குறித்த கடனட்டைகளுடன் இரகசிய எண்ணையும் வைத்திருந்த காரணத்தால் சந்தேக நபர்களால் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன்படி கடனட்டைகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுமாறும் அதனுடன் இரகசிய எண்ணை வைத்துக்கொள்ள வேண்டாம் எனவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (நி-8)

வலம்புரி
021 221 7603, 021 567 1532

## தொலைந்து விட்டது

கலைமணி வீதி கட்டைப்பிராயில் வசித்துவரும் பொன்னத்துரை - பத்மநாதன் ஆகிய எனது அடையாள அட்டை இல - 194901500366. சாரதி அனுமதிப்பத்திரம் இல-A011372617 ஆகியன கடந்த 10.04.2021 அன்று கல்வியங்காடு மீன் சந்தையினுள் தொலைந்துவிட்டது. இவற்றை கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்து உதவுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். சன்மானம் வழங்கப்படும். (6699)

**தொ.இல.:- 077 666 9503, 077 429 3526**

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 8 1/2 செவ் 10 சூரி 5 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: **HNDA**, கம்பனி (சுவிஸ்)
எதிர்பார்ப்பு: ஆங்கிலம் பேசக்கூடிய வெளிநாடு செல்லும் பெண்
தொ.இ: **B/507**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 25 செவ் 2 சூரி 3 இல் உயரம்:5'10"
தகைமை/தொழில்: **B.Sc,MSC (U.K)**
எதிர்பார்ப்பு: சிவந்த மெல்லிய உயர் தொழில், திருமணம் செய்து கூட்டிக்கொள்ளலாம்
தொ.இ: **B/519**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 25 செவ் 10 சூரி 1 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: சுப்பர் மார்க்கெட்டில் வேலை செய்கிறார்
எதிர்பார்ப்பு: அமைதியான குடும்பப்பாங்கான பெண்
தொ.இ: **B/525**

பிறப்பு: 1973 இந்து நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 11 3/4 செவ் 11 சூரி 1 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: நிரந்தர அலுவலக பணியாளர்
எதிர்பார்ப்பு: வேலையற்ற வேலையுள்ள பெண்
தொ.இ: **B/527**

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 13 1/2 செவ் 9 சூரி 11 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: **B.com**
எதிர்பார்ப்பு: **B.Sc** பட்டதாரி, உள்நாடு, வெளிநாடு உயர்பதவி
தொ.இ: **G/4252**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 27 1/4 செவ் 2 சூரி 12 இல் உயரம்: 5'
தகைமை/தொழில்: **HND IT,Work - Project Supportry Officer**
எதிர்பார்ப்பு: பரம்பரைச் சைவம், உள்நாடு, வெளிநாடு
தொ.இ: **G/4262**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 77 செவ் 3 சூரி 7 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: வைத்திய இறுதியாண்டு மாணவி
எதிர்பார்ப்பு: லண்டன், அவுஸ்திரேலியா மட்டும்
தொ.இ: **G/4276**

பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 12 செவ் 4 சூரி 10 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: **B.A** ஆசிரியை
எதிர்பார்ப்பு: தகுந்தவரன், உள்நாடு மட்டும்
தொ.இ: **G/4342**

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01

Baby Cheramy

செல்லக்குட்டிகளின் உலகம்

அன்பின் தொடக்கத்திற்கு,
அன்புடன்

# உலகை வெல்லும் குழந்தையை சிறுபராயத்திலிருந்தே செதுக்கிடுங்கள்.



சிரேஷ்ட மனநல மருத்துவர்
மனோதத்துவ நிபுணர்
வைத்தியர் சமிந்த சிரிவர்தன
M.B.B.S. (Colombo)
P.G.D.C. (Colombo)
Dlp. in Psy.
H.C.G.C.


பெற்றோருக்கு என்றும் உலகமாகத் திகழ்வது தமது குழந்தை மட்டுமே. ஆகையால் தான், குழந்தை பிறக்க முன்னரே தம்மை தயார்படுத்திக் கொள்வதற்காக அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்கின்றார்கள். குழந்தை பிறந்த பின்னரும் அவர்களுக்காகவே அனேகமான நேரத்தினை செலவிடுகின்றார்கள். எனினும், ஏதேனும் ஒரு சிறு குறை அல்லது சிறு தவறு குழந்தையின் எதிர்காலத்தை முற்றாக மாற்றலாமென்பதனையும் நினைவில் கொள்ளுங்கள். குழந்தை வளர்ப்பு முறையானது உரிய வகையில் அமையாவிடின், குழந்தையின் எதிர்காலம் விழலுக்கிறைத்த நீர் போலாகிவிடும். ஆகவே, புரிந்துணர்வும் பொறுப்பும் மிக்க பெற்றோராக குழந்தையின் ஆற்றல் விருத்தியில் அக்கறை செலுத்துங்கள். இப்பதிவு குழந்தையின் வளமான எதிர்காலத்திற்காக நிதமும் கனவுகாணும் ஒவ்வொரு பெற்றோருக்குமானது,

## குழந்தையின் ஆற்றல் விருத்தி என்றால் என்ன?

பிறக்கும் போது குழந்தையின் ஆற்றல்கள் அபிவிருத்தியற்ற நிலையில் காணப்படும். (உ.ம் பால் குடிக்கும் திறன் மற்றும் எதையேனும் பற்றிக் கொள்ளும் ஆற்றல் போன்ற சில திறமைகளை மட்டுமே அவதானிக்க கூடியதாகவிருக்கும்) எனினும், குழந்தையின் ஆற்றல்கள் மேலும் விருத்தியடைய வேண்டியது மிகவும் அவசியமானதாகும். குழந்தை இவ்வுலகில் பிறக்கும் போது விருத்தியடைந்த நிலையிலான ஆற்றல்களைக் கொண்டிருப்பதில்லை.
உதாரணம்:

- மொழி அறிவு இல்லை அல்லது தனது தேவைகளை வெளிப்படுத்தத் தெரியாது
- நடத்தல், எழுதுதல் மற்றும் நீந்துதல் போன்ற திறன்கள் விருத்தியடையாதிருத்தல்
- சிறுநீர் கழித்தல் மற்றும் மலம் கழித்தல் போன்றவற்றை அவர்களால் கட்டுப்படுத்த முடியாது
- மதிநுட்பம் மிக்க வகையில் சிந்திக்கவும் இயலாது (கணிதம், விவாதம் மற்றும் தேர்வு செய்யும் திறன்)
- சுற்றுப்புறம் மற்றும் நபர்களை இணங்காணத் தெரியாது
- கலாசார பண்பாடுகளை புரிந்து கொள்ள இயலாமை

வயதில் மூத்தவர்கள் என்கின்ற வகையில் எமக்குள் விருத்தியடைந்திருக்கும் ஆற்றல்களை சிறு பராயத்திலிருந்தே குழந்தைகளுக்கு கற்பித்து வழிநடத்துவதே திறன் விருத்தியாகும் அல்லது சிறுவர்கள், பெரியவர்களின் பண்பினை பேணும் வகையில் வழிநடத்துவதே திறன் விருத்தியாகும்.




பொதுவாக குழந்தை வளரும் பருவத்தில் சில வருடங்களில் குழந்தையின் ஆற்றல்கள் விருத்தியடைய ஆரம்பிக்கும். அந்த வகையில் ஆற்றல் விருத்தியினை 5 அம்சங்களாக நோக்கலாம்.

**1. உடல் உளத் துறை**
உடல் வளர்ச்சி, நடத்தல், ஓடுதல், பாய்தல் மற்றும் உயர ஏறுதல் போன்ற செயற்பாடுகளில் அபிவிருத்தி.

**2. அறிவாற்றல் துறை**
ஆய்வு செய்தல், விவாதித்தல், ஒப்பிடுதல், நினைவாற்றல், தீர்வு காணல் மற்றும் சட்டதிட்டங்களை அறிந்து கொள்ளுதல் போன்ற காரணிகளை கற்றறிந்து கொள்ளல்.

**3. உணர்ந்து அறியும் துறை**
சோகத்தைக் கட்டுப்படுத்தல், கோபத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் சகிப்புத் தன்மை.

**4. மனநிலை அபிவிருத்தி**
கருத்துகளை தெரிவித்தல், தமது எண்ணங்களை வெளிப்படுத்துதல், முடிவெடுத்தல், அவசியமான அல்லது சரியான சந்தர்பத்தில் எதிர்ப்பினைத் தெரிவித்தல் மற்றும் முன்னிலை வகித்தல்.

**5. மொழி அபிவிருத்தி**
சொற்களைப் பயில்தல், புரிந்து கொள்ளுதல், கருத்துகளைத் தெரிவித்தல் மற்றும் கருத்துகளை எழுதுதல்.

மேற்குறிப்பிட்ட அம்சங்களே சிறந்த ஆளுமையினைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான காரணிகளாகும்.

## ஆளுமை என்பது யாது?

மேற்குறிப்பிட்ட அம்சங்களில் சிறந்து விளங்கும் ஒருவரை "ஆளுமை" என இனங்காண முடியும். பிறந்த குழந்தையால் மேற்குறிப்பிட்ட அம்சங்களில் சிறந்து விளங்க இயலாது. வளர்கின்ற போது பயில்கின்ற விடயங்கள், பெறுகின்ற அனுபவங்கள் என்பனவற்றின் அடிப்படையில் நாளடைவில் குழந்தையானது ஆளுமையின் அம்சங்களை உள்வாங்க ஆரம்பிக்கின்றது. இவ்வாறு 18 வருட அனுபவம் மற்றும் அறிவு என்பவற்றின் அடிப்படையில் தான் நிலையான தன்மையுடன் ஆற்றல்களை வெளிப்படுத்த ஆரம்பிக்கின்றார்கள்.

## சிறுவயதில் ஆளுமைக்கான அம்சங்களை உரிய முறையில் புகட்டாவிடின், வளர்ந்த பின்னர் எவ்வாறான குணாதிசயங்கள் வெளிப்படும்?

- முடிவெடுக்கும் திறன் குறையும்
- குழப்பங்களை தீர்க்கும் ஆற்றல் இல்லாதிருக்கும்
- முறையற்ற வகையில் செயற்படுதல்
- இலக்கு நோக்கி செயற்படாமை
- தொடர்ச்சியாக செயற்பட இயலாமை
- ஒற்றை நோக்கில் செயற்பட இயலாமை
- நாணம் கொள்ளும் தன்மை
- கோபம், சோகம் போன்றவற்றை கட்டுப்படுத்த இயலாமை
- விரைவில் ஆத்திரமடைதல்
- உணர்ச்சிவசப்படுதல்
- தன்னிலை அறியாமை
- சுய கட்டுப்பாட்டினை இழத்தல் (உதாரணம் : போதைப்பொருள் பாவனை)

**0-5 வயது வரையான ஆரம்ப காலகட்டத்தில் தான் ஆளுமையானது விருத்தியடைய ஆரம்பிக்கும், அத்துடன் வளர்ந்த பின்னர் திகழும் ஆளுமையின் அடித்தளமும் அதுவே ஆகும்.**

## குழந்தையின் திறன் விருத்திக் காலத்தில் பெற்றோர் செய்ய வேண்டிய மற்றும் தவிர்க்க வேண்டிய விடங்கள்



மற்றய குழந்தைகளுடன் தமது குழந்தையை ஒப்பீடு செய்யாது, உற்சாகமளித்து அவர்களின் தன்நம்பிக்கையினைக் கட்டியெழுப்ப வேண்டும்.



சிறுவயது முதலே அவர்களின் செயற்பாடுகளை அவர்களே சுயமாக செய்வதற்கு பழக்குங்கள். (உ.ம: உணவு உண்ணுதல், தனியாக உறங்குதல், பாதணிகளை அணிதல் போன்றவற்றிற்கு உதவுவதுடன், அவர்களாகவே அவற்றை சுயமாக செய்வதற்கு பழக்குங்கள்)



குழந்தைகளின் ஆக்கத்திறன் மிக்க செயற்பாடுகளுக்கு சுதந்திரமளிக்க வேண்டும். உ.ம: சுவரில் சித்திரம் வரைதல் போன்ற புத்தாக்க சிந்தனைகள் மற்றும் அவர்களின் கேள்விகளை செவிமடுத்து பதிலளிக்கவும் வேண்டும்.



குழந்தையை அழைக்கும் போது அன்பு மற்றும் மதிப்பு மிக்க சொற்களை பயன்படுத்துவதுடன், நற் சொற்களை பயன்படுத்தி உரையாட வேண்டும். (செல்லம், தங்கம், நீங்கள், வாங்க, போங்க)



குழந்தைக்கு புறச்சூழல் அனுபவத்தினை வழங்குங்கள். (நடப்பதற்கு, ஓடுவதற்கு, பாய்வதற்கு, படியேறுவதற்கு, மண்ணை தொட்டுணர்வதற்கு)

"மூத்தவர்களின் உடைந்து போன ஆளுமையினை கட்டியெழுப்புவதனை விடவும், இலகுவானது குழந்தையின் ஆளுமையினைக் கட்டியெழுப்புவது"

- பிரெட்ரிக் டக்லஸ் -

அம்மா, அப்பா மற்றும் பேபி செரமியின் தூய அன்பு
Baby Cheramy
58 வருட தூய நம்பிக்கை
(C-1330)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமலையில் தீவிரமடையும் தொற்று

# தீவிர சிகிச்சைப் பிரிவில் நோயாளர்களை அனுமதிப்பது இடைநிறுத்தம்

(திருமலை)

திருகோணமலை பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் நோயாளர்களை அனுமதிப்பது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றிய 5 தாதியர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டமையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்களை பார்வையிடுவதற்கும் மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வீ.பிரேமானந்த் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முற்பகல் வரை 17 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)




உலக பூமி தினத்தை முன்னிட்டு எழுதுளிர்" அமைப்பினால் யாழ்ப்பாணம் செட்டித்தெரு மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன. (படம்: சிவசாந்தன்)

## பேருந்துகள் அதிகளவான பயணிகளை ஏற்றுவதாக மக்கள் குற்றச்சாட்டு

(நெளுக்குளம்)

வவுனியாவில் சுகாதார நடைமுறைகளை பேணாமல் அதிகமான பயணிகள் பேருந்துகளில் ஏற்றப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கொவிட்-19 தொடர்பாக இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது இக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. குறிப்பாக பேருந்துகளில் அதிகமான பயணிகள் ஏற்றிச் செல்லப்படுவதுடன், எந்தவித சுகாதார நடைமுறைகளும் பின்பற்றப்படுவதில்லை. அதனைக் கண்காணிப்பதற்கும் சரியான திட்டங்கள் வகுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே பொலிஸார் ஊடாக பேருந்துகளை கண்காணிப்பதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

குறித்த செயற்பாட்டினால் பாடசாலை மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்து சேவைகளில் பேருந்துகளின் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு பயணிகளை ஏற்றுவது தொடர்பாக பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் கவனம் செலுத்த வேண்டும் என அரச அதிபர் இதன்போது தெரிவித்தார். (5-6-299)



கோப்பாய் பிரதேச தேசோதய சபையின் அனுசரணையுடன் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை தேசோதய தலைவர் மயில்வாகன் தலைமையில். கோப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இதில் விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் செல்வி. என். ராதிகா கலந்து கொண்டார். (படம்: கனகராஜா)

## மத வழிபாட்டுத் தலங்களில் இறுக்கமான நடைமுறைகள்

(கொழும்பு)

மத வழிபாட்டுத்தலங்களில் சுகாதார ஒழுங்கு விதிகளை பின்பற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியன இந்த விடயம் தொடர்பான அறிவிப்புகளை விடுத்துள்ளன.

கட்டுப்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமைய, அனைத்து ஆலயங்களிலும் ஒரு தடவையில் 50-க்கும் மேற்படாத பக்தர்களுடன் கிரியைகளை நடத்த வேண்டும் எனவும், திருவிழாக்கள் மற்றும் திருமண நிகழ்வுகள் தொடர்பில் பிரதேசத்திற்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகரின் அனுமதியை பெறுதல் அவசியம் எனவும் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பேணுதல் உள்ளிட்ட சுகாதார ஒழுங்கு விதிகளை பின்பற்றுவதை ஆலய அறங்காவலர் சபையினர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என இந்து சமய , கலாசார அலுவல்கள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

### சந்தை செயற்பாடுகளை

## இராணுவத்தினர் மூலம் நடத்த வேண்டிவரும் எச்சரிக்கிறார் வவுனியா அரச அதிபர்

(நெளுக்குளம்)

சுகாதார நடைமுறைகள் பேணி சந்தைச் செயற்பாடுகளை மேற்கொள்ளாவிடின் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் நடத்த வேண்டி வரும் என வவுனியா மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொவிட்-19 தாக்கம் மற்றும் அது தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள், தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று வவுனியா மாவட்டசெயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சந்தை வியாபாரிகள் மிகவும் கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும். வெளிமாவட்டங்களில் இருந்தும் வியாபாரிகள் இங்கு வருகின்றனர்.

எனவே அந்த இடத்தில் ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

அப்படி நடக்கும் பட்சத்தில் தினச்சந்தை செயற்பாடுகளை விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு மாற்ற வேண்டி ஏற்படும்.

அங்கும் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாதவிடத்து கமநல திணைக்களங்களூடாக இராணுவத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டு விவசாயிகளின் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே உங்களது ஏனைய உறுப்பினர்களிற்கு கொவிட் தொடர்பான உண்மை நிலையினை எடுத்துச்சொல்லி உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். கடந்த காலங்களில் ஏற்பட்ட இடர்பாடுகளிற்கு இடமளிக்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (5-6-299)

# பாரவூர்தி புதைந்ததனால் தடைப்பட்டது போக்குவரத்து



(நெளுக்குளம்)

வவுனியாவில் இருந்து பூந்தோட்டம் செல்லும் பிரதான வீதியில் பாரவூர்தி ஒன்று புதைந்ததினால் நேற்றுக் காலை பல மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டது.

வவுனியாவில் இருந்து பூந்தோட்ட நகரிற்கு செல்லும் பிரதான வீதியிலுள்ள பாலத்தில் திருத்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் நேற்று காலை பொருட்களை ஏற்றிச் சென்ற பாரவூர்தி குறித்த வீதியில் புதைந்ததினால் பல மணி நேரம் அவ்வீதி போக்குவரத்து தடைப்பட்டது.

இதனால் மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (5-4-299)



வவுனியாவில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொவிட்-19 தாக்கம் மற்றும் அது தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள், தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மகேந்திரன், கொவிட் தடுப்பு செயலணியின் இணைப்பாளர் மேஜர் ஜெனரல் மகேஸ் பண்டார, பிரதி பொலிஸ்மா அதிபர் லால் செனவிரத்ன, சுகாதார வைத்திய அதிகாரிகள், பொலிஸார், வர்த்தகர் சங்கம், போக்குவரத்து தரப்பினர், திணைக்கள தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (படம்: சதீஷ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

25.04.2021
சித்திரை 12, ஞாயிற்றுக்கிழமை,
திரியோதசி பிற்பகல் 2.25 மணிவரை
அத்தம் பின்னிரவு 12.46 மணிவரை
சுபநேரம் 9.00-10.30 மணிவரை
இராகுகாலம் 4.30-6.00 மணிவரை
சந்திராஷ்டமம்- சதயம், பூரட்டாதி
அமிர்தசித்தம் வளவன்

**மேஷம்** – சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**ரிஷபம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்** – மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்** – பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** – வார்த்தைகளில் நிதானம் தேவை, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி** – பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** – மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுப விரயங்கள் கூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** – பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர்களின் சந்திப்பால் குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு** – தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** – ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** – கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**மீனம்** – கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

சேமிப்பே உங்கள் முதல் செலவாக இருக்கட்டும்

# கொவிட் உயர் இடர் வலயங்களாக மூன்று மாவட்டங்கள் பிரகடனம்

(கொழும்பு)

**கொழும்பு, கம்பஹா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்கள் அதிக ஆபத்துள்ள மாவட்டங்களாக மாறிவிட்டன. அவை கொவிட் உயர் இடர் வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

குறித்த மாவட்டங்களில் இருந்து தினமும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அச்சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், "இலங்கையின் தற்போதைய நிலைமை மிகவும் ஆபத்தானது.

மேற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களின் சில பகுதிகளிலும் இலங்கையின் பிற பகுதிகளிலும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் விரைவான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த சூழ்நிலைகளில் உயிர்களையும் ஆரோக்கியத்தையும் பாதுகாக்க பொது மக்களுக்கு 100 சதவீத பொறுப்பு உள்ளது.

நாட்டில் மொத்தமாக கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை நெருங்கி உள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாத்திரம் 969 புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இதுவரை 634 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மக்களின் உரிமைகளை வெளிக்காட்டும் நிகழ்வுகளை நிறுத்துவது ஜனநாயக விரோதம்

## மே தின நிகழ்வு குறித்து விமல் வீரவன்ச

(கொழும்பு)

அரசுக்குள் இருக்கின்ற வேற்றுமைகளை ஜனாதிபதியும், பிரதமரும் உடன் களைய வேண்டும். இல்லையேல் அரசை எவராலும் காப்பாற்ற முடியாது என ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று முன்தினம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மே தின நிகழ்வுகளை அரசு தடுத்து நிறுத்தியமை ஜனநாயக விரோதமாகும். இலங்கையில் கொரோனாவைக் காரணம் காட்டி மே தினம் அன்று எந்த நிகழ்வுகளையும் நடத்தவேண்டாம் என்று இராணுவத்தளபதி ஊடாக ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும் ஒன்றை மட்டும் கவனத்தில் கொள்ளவேண்டும். இது மக்கள் ஆணையுடன் அமைக்கப்பட்ட அரசு. எனவே மக்களின் உரிமைகளை வெளிக்காட்டும் நிகழ்வுகளை அடியோடு நிறுத்துவது ஜனநாயக விரோதம்.

சுகாதார விதிகளைக் கடைப்பிடித்துக் கொண்டு நிகழ்வுகளை பெரும் எடுப்பில் அல்லாமல் ஒரு கட்டமைப்புக்குள் நடத்தலாம் என்று அரசு அறிவித்திருக்கலாம்.

அரசுக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளுக்கு அந்த முக்கிய புள்ளிதான் காரணம். பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நாம் புறக்கணித்ததில் நியாயம் உண்டு. இந்த நிலையில் மே தின நிகழ்வுகளை நாம் எவ்வாறு நடத்துவது என்று ஆலோசித்துக்கொண்டிருந்த நிலையில் அந்த நிகழ்வுகள் அனைத்தையும் நடத்துவதற்கு அரசு தடை விதித்துள்ளது. அரசுக்குள் இருக்கின்ற வேற்றுமைகளை ஜனாதிபதியும், பிரதமரும் உடன் களைய வேண்டும். இல்லையேல் அரசை எவராலும் காப்பாற்ற முடியாது" என விமல் வீரவன்ச தெரிவித்தார். (நி-4)


# இரண்டாம் ஆண்டு நினைவுகள்

திருமதி. தவராஜா சகுந்தலாதேவி

திதி: 02.05.2021



மலர்வு: 15.09.1940
உதிர்வு: 25.04.2019

அம்மா!
எங்கள் ஆன்மாவின் ஒளியே!
நிஜம் தொலைத்து,
வாழ்வெனும் பாலையில்
அன்பின் நிழல்தேடி அலைகின்றோம்
காண்போமா அம்மா?
உங்கள் அன்பெனும்
புன்னகையின் ஆறுதலை...
எம் வாழ்வில்.

"ராஜாஸ் வாசம்"
[illegible] வீதி, வட்டுக்கோட்டை.

அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(6603)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் பட்டித்தோட்டம் சாந்தோம் வயோதிபர் இல்லத்திற்கு மன்னார் கார்கில்ஸ் புட்சிட்டியினால் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சலவை இயந்திரங்கள் இரண்டு வழங்கப்பட்டன.

(படம்:-ஜோசப்நயன்)

# வீட்டுத்திட்ட கொடுப்பனவுகளைப் படிப்படியாக வழங்குமாறு பிரதமருக்கு சந்திரகுமார் எம்.பி.கடிதம்

(அக்கராயன்)

**வடக்கில் வீட்டுத்திட்டங்களைப் பூர்த்தி செய்ய 7500 மில்லியன் நிதி தேவையாகவுள்ளது. அந்நிதியை படிப்படியாக விடுவித்து உதவுமாறு பிரதமருக்கு முன்னாள் எம்.பி. சந்திரகுமார் கடிதம் எழுதியுள்ளார்.**

கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு வடக்கு மாகாணத்திற்கு மட்டும் 7512.814 மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுகிறது. எனவே இந்நிதியினை படிப்படியாக விடுவித்து மக்களை நெருக்கடியிலிருந்து மீட்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

குறித்த கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது, வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் கடந்த காலத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கான பணம் முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம் என சில கட்டங்கள் வழங்கப்பட்ட நிலையில் மிகுதிக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.



இதனால் வீட்டுத் திட்டப் பயனாளிகளான பொது மக்கள் கடும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். வீட்டுத்திட்டங் கள் மூலம் வீடுகளை பெற்ற வர்கள் அதனைப் பூர்த்தி செய்ய முடியாது அரை குறையான கட்டுமானங்களுடன் உள்ளனர். அவர்கள் தற்போது வாழ்கின்ற தற்காலிக வீடுகள் மிகவும் மோசனமான நிலையில் காணப்படுகிறது. எனவே மேற்படி நிலைமைகளை கருத்தில் கொண்டு படிப்படியாக வீட்டுத்திட்ட நிதியை விடுவித்து மக்களை நெருக்கடிக்குள் இருந்து மீட்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (5-6-350)

# வவுனியாவின் பல பகுதிகளில் பி.சி.ஆர்.பரிசோதனைகள்

(நெளுக்குளம்)

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள வியாபார நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களிடம் நேற்று பி.சி. ஆர்.பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

வவுனியாவில் நேற்று முன்தினம் 12 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் பல்வேறு பகுதிகளிலும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வவுனியாவில் நேற்று முன்தினம் தொற்று உறுதி செய்யப்பட்ட நபர் ஒருவர் பூந்தோட்டம் தொடர்புகளை பேணியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து பூந்தோட்டம் சந்தியிலுள்ள வியாபார நிலையங்களில் கடமைபுரியும் ஊழியர்களிற்கு எழுமாறான முறையில் பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் நேற்றுக் காலை பெறப்பட்டன.

இதேவேளை மாஸ்க் அணியாமல் சென்றவர்களிடமும் பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன. (5-4-299)

# பொங்கல் விழாவை நடத்துவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம்

## சுகாதார வைத்திய அதிகாரி

(கண்டாவளை)

வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல் விழாவினை சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடத்துவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என தொற்று நோயியல் வைத்திய அதிகாரி வி.விஜிதரன் தெரிவித்துள்ளார்.

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தினை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்துவதற்கு அனைவரது ஒத்துழைப்பு மற்றும் ஒருமைப்பாடு மிக அவசியம் என மாவட்ட தொற்று நோயியில் வைத்திய அதிகாரி வைத்தியர் வி.விஜிதரன் தெரிவித்துள்ளார். பொங்கல் விழா தொடர்பான ஆலோச னைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொங்கல் விழா வின் போது முகக் கவசம் அணிதல், கை கழுவுதல், தொற்று நீக்கம் செய்தல் மற்றும் சமூக இடைவெளிகளைப் பேணுதல் ஆகியன அவசியம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஆலயத்தின் உள் , வெளி வீதிகளின் அளவினைக் கொண்டு அவை குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

ஆலயத்தினுள் பிரவேசிப்பவர்கள் தொடர்பில் அவர்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியன பதிவு செய்யப்பட வேண்டும். குடும்பமாக வரும் அடியவர்கள் வீட்டிலிருந்து இவற்றை தாளில் எழுதிக்கொண்டு வந்து பதிவு செய்வதன் மூலம் கடமையை இலகுபடுத்துவதுடன் அவ் விப ரங்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் உள் அனுமதிக்கப்படுவர்.

ஆலயத்திற்கு உள்வரும் பாதை மற்றும் வெளியேறும் பாதை தனித்தனியாக அமைக்கப்பட்டு கடுமையாக கண்காணிக்கப்படும்.

காவடி எடுத்தல் முதலான நேர்த்திக் கடன்கள் தற்போதைய நிலையில் தடை செய்யப்பட்டுள்ளது. அடியவர்கள் ஆலய வழிபாட்டிற்கு மட்டும் அனுமதிக்கப்படுவர்.

மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்ப்பதற்காக கடைகளை பிரதான வீதிவரை தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலய சூழலில் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் சுகாதார துறையினருடன் தொடர்புகளைப் பேணுதல், தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளல் முக்கியமானதென அவர் மேலும் தெரிவித்தார். (5-4-315)



கடந்த மார்ச் மாதம் தலைமன்னார் பியர் பகுதியில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மன்னார் மாவட்டத்தை சேர்ந்த கனடா வாழ் புலம் பெயர் நண்பர்கள் அமைப்பின் நிதி உதவியில் கற்றல் உபகரணங்கள் மற்றும் மருத்துவ தேவைக்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வு அமைப்பின் மன்னார் இணைப்பாளர் ஜீட் தலைமையில் நேற்று தலைமன்னார் பியர் பாடசாலையில் இடம்பெற்றது. (படம்:-ஜோசப்நயன்)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மயில்வாகனம் காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.



இவர்களிடமிருந்து 28 போர்தல் கசிப்பும் 85 லீற்றர் கோடாவும் மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கின்சிலிகெரத் தெரிவித்துள்ளார். (5-4-316)



வவுனியா பிரதேச செயலகத்தில் சமூகசேவைகள் பிரிவுக்கான புதிய கட்டடத் தொகுதி நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் மற்றும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் இணைப்பு செயலாளர் கி.தினேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா இடங்களிலும்.எல்லா மனிதர்களிடமும் உண்மையாக நடந்துகொண்டால் உங்கள் உணர்ச்சிகள் இயற்கையிலேயே சமமாக இருக்கும் ~பரத்வி

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## பொதுசுகாதார பரிசோதகர்களுக்கு அவசரக் கடிதம்

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அன்பு வணக்கம்.

கொரோனாக் காலத்தில் உங்களின் ஒப்பற்ற சேவைக்கு தலைசாய்த்து நன்றி கூறிக் கொள்கின்றோம்.

கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்காக நாடு முடக்கப்படும் போதெல்லாம் அரச உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவன உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை கிடைக்கின்றது.

அதனால் அவர்கள் தங்கள் குடும்பத்தோடு ஒன்றாக இருக்கும் வாய்ப்பு உளது.

ஆனால் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட மருத்துவத் துறையினர் அனைவரும் ஓய்வு உறக்கமின்றி பணி ஆற்றுவதென்பது உண்மையில் போற்றுதற்குரியது என்ற வகையில், மருத்துவத் துறைக்கு எம் நன்றிகள்.

இவை ஒருபுறமிருக்க, பொது சுகாதாரப் பரிசோதகர்களாகிய உங்கள் தொடர்பில் நம் மக்கள் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்கள் ஏராளம் என்பதை நீங்கள் அறியாமல் இருக்கலாம்.

கொரோனாத் தொற்று ஏற்படுவதற்கு முன்னதாகவே நீங்கள் தமிழ் மக்களின் சுயபொருளாதாரத்தை அழித்து விட்டதான குற்றச்சாட்டுக்கள் பரவலாக உண்டு.

உணவுச்சாலை உள்ளிட்ட அனைத்து உற்பத்தி நிறுவனங்கள் மீதும் உங்களின் வலை வீச்சு தமிழ் மக்களின் பொருளாதாரத்தை நிர்மூலமாக்குவதாக அமைந்துள்ளது என்ற குற்றச்சாட்டு ஒருபுறம்.

மாறாக, தென்பகுதியில் இருந்து இங்கு வருகின்ற சிற்றுண்டி வகைகள் உள்ளிட்ட உணவு உற்பத்திகள் பற்றி நீங்கள் கவனம் செலுத்துவதில்லை என்றும் கூறப்படுகிறது.

கூடவே தமிழ் மக்களின் உற்பத்தி முயற்சிகளை மையப்படுத்தி அவர்களை நீதிமன்றில் நிறுத்தி, அவர்களின் சுயதொழில் முயற்சிகளை முறியடித்து விடுகின்றீர்கள் என்றும் இதற்குப் பின்னணி வேறு என்றும் பரவலாகப் பேசப்படுகிறது என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்பதற்காக இவ்விடத்தில் பகிர்ந்து கொண்டோம்.

இந்தப் பதிவுக்கு மேலதிகமாக, கொரோனா விடயத்திலும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் சமத்துவமான நடவடிக்கைகள் இல்லையென்றும் ஒவ்வொரு சுகாதாரப் பரிசோதகர்களும் தமக்குத் தமக்கு ஏற்றாற்போல் நடந்து கொள்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

அதாவது ஒரு சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் திருமணம் ஓஹோ என்று நடக்க, இன்னொரு பிரிவில் திருமணத்தைக் குழப்புவது போல சுகாதாரப் பரிசோதகர்கள் குழுக் கட்டி நிற்கின்றனர்.

இஃதெல்லாம் நீதியா? என்று மக்கள் கேட்பது உங்கள் செவிகளை எட்டாமல் இருக்கலாம்.

எனவே மக்களின் விமர்சனங்களை அறிந்து கொள்ளுங்கள். கொரோனா விடயத்தில் பொதுக்கட்டுப்பாட்டை அனைவரும் கடைப்பிடியுங்கள்.

எதனையும் மனிதநேயத்துடன் பக்குவமாக அணுகுங்கள். இந்த இக்கட்டான சூழ்நிலையில் மக்கள் சார்பாக உங்களிடம் விடக்கூடிய கோரிக்கை இதுவாகும். ஏற்றிடுக!

# மலேரியா பரப்பும் புதிய வகை நுளம்பு வடக்கு நகர்ப்புறங்களில் கண்டுபிடிப்பு

## இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கில் நகர்ப்புறங்களில் மலேரியா பரப்பும் ஒரு புதிய வகை நுளம்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் இலங்கை மலேரியா இல்லாத தேசமாக அறிவிக்கப்பட்ட போதிலும், இந்த நோய் மீண்டும் நாட்டில் தலைதூக்கும் சாத்தியம் இருப்பதாக இலங்கை மருத்துவர் சங்கம் எச்சரித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் ஊடகங்களிடம் பேசிய இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் பேராசிரியர் அனுலா விஜேசுந்தர இந்த விஷயத்தை திறம்பட கையாளுவதற்கு முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இலங்கையின் வெப்பநிலை மற்றும் நீர்வளம் இனங்கள் இனப்பெருக்கம் செய்ய ஏற்ற நிலைமைகள் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் ஒரு புதிய வகை அனோபிலிஸ் டிபென்சி நுளம்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது முன்னர் இந்தியாவில் காணப்பட்டது.

இந்தியா மற்றும் சீனாவில் பணியாற்றுபவர்கள், குறிப்பாக கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் யாத்ரீகர்கள், இந்த நோயை மீண்டும் இலங்கைக்கு கொண்டு வர வாய்ப்புள்ளது என்றார்.

மொசாம்பிக் மற்றும் மடகஸ்கருக்குச் செல்லும் இரத்தின வணிகர்கள் தங்கள் பயணத்தின் போது முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அனுலா விஜேசுந்தர கேட்டுக்கொண்டார்.

ஐ.நா அமைதி காக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள இலங்கை படையினர் தென் சூடான் மற்றும் மத்திய ஆபிரிக்காவிலிருந்து திரும்பி வரும்போது, மலேரியா நோய்க்காவிகளாக இருக்க வாய்ப்புள்ளது என்று அவர் வலியுறுத்தினார்.

எனவே, பேராசிரியர் அத்தகைய நெருக்கடியைப் பற்றி விழிப்புடன் இருக்குமாறு அதிகாரிகளை வலியுறுத்தினார். (ம-3)

### (யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின்)

# உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியாக கண்ணதாசன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியாக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் செல்வம் கண்ணதாசன் பல்கலைக்கழகப் பேரவையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பி. ரவிராஜன் தலைமையில் இடம்பெற்றது. இந்தப் பேரவைக் கூட்டத்தில் இடம்பெற்ற உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி தெரிவில் பேராசிரியர் செல்வம் கண்ணதாசன் முன்னிலை பெற்றுத் தெரிவாகியுள்ளார். இதுவரை காலமும் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதியாக விளங்கிய பேராசிரியர் கு. மிகுந்தனின் பதவிக் காலம் கடந்த பெப்ரவரி மாதம் நிறைவடைந்தது. அதன்பின் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டு, ஒருவர் மட்டும் விண்ணப்பித்திருந்த நிலையில் மீள் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இதற்கமைய மூன்று பேர் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர்.

விண்ணப்பித்திருந்த மூவரும் நேற்று பேரவை உறுப்பினர்கள் முன்னிலையில் தமது எதிர்கால நோக்கு பற்றி விளக்கமளித்ததைத் தொடர்ந்து, தெரிவு இடம்பெற்றது. தெரிவின் நிறைவில் 26 வாக்குகளுடன் பேராசிரியர் செல்வம் கண்ணதாசன் முன்னிலை பெற்றுத் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். (ம-3,33)

# மன்னாரில் சுயதனிமைப்படுத்தப்பட்ட மின்சார சபை பணியாளர்

### தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் பதவி உயர்வு பரீட்சை எழுதினார்


(மன்னார்)

மன்னாரில் அண்மையில் கொரோனா தொற்றுடன் இனங்காணப்பட்ட மின்சார சபை பணியாளர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணிய சக பணியாளர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சுய தனிமைப்படுத்தப்பட்டவர்களில் நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தப்பட்ட ஒருவர் தனது பதவி உயர்விற்காக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (23) யாழ்ப்பாணத்தில் பரீட்சைக்காக தோற்ற வேண்டிய நிலை காணப்பட்டது.

இந்நிலையில் அவர் சுயதனிமைப்படுத்தப்பட்டதனால் தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் பரீட்சை எழுதுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு பரீட்சை எழுதினார். (ம-3,285)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



## வாக்குவாதம் வேண்டாமே

❖ வாக்குறுதி கொடுத்து, அதைக் கொண்டு செலுத்தாமல் இருப்பதைவிட, வாக்குறுதி செய்யாமல் இருப்பதே சிறந்தது.

❖ சோம்பேறியின் வழி முள்வேலிக்குச் சமம். நேர்மையானவனின் வழியோ சுத்தமான ராஜபாட்டை.

❖ ஒன்றுமில்லாதவன் தன்னை ஏதோவென்று நினைத்துக் கொள்வானாகில் அவன் தன்னைத் தானே வஞ்சித்துக் கொள்கிறான்.

❖ குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியில் தான் விழுவார்கள்.

❖ அநியாயத்தின் மூலம் கிடைக்கும் பெரும் வருமானத்தைவிட, நியாயமாகச் சம்பாதிக்கும் சொற்பமே மேலானது.

❖ மனிதனின் இருதயம் அவனுடைய வழியை வகுக்கும். ஆனால், அவனது காலடிகளை வழிநடத்துபவர் கடவுளே.

❖ வாக்குவாதம் செய்ய வேண்டாம். அதனால் கேட்கிறவர்களின் புத்தி தடுமாறுமே ஒழிய ஒரு பயனுமில்லை.

❖ உற்சாகத்துடன் கர்த்தருக்குப் பணிபுரியுங்கள். பாடிக் கொண்டே அவர் சந்நிதிக்கு வாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார வழிகாட்டல்கள் பின்பற்றாத பள்ளிகள் மூடப்படும்-வக்பு சபை தீர்மானம்

(கொழும்பு)

கொவிட்-19 செயலணி மற்றும் சுகாதார அமைச்சு வழங்கியுள்ள சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறும் பள்ளிவாசல்களை நோன்பு முடியும் வரை மூடி விடுவதற்கு வக்பு சபை தீர்மானித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் அநேகமான பள்ளிவாசல்களில் கொவிட்-19 தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் மீறப்படுவதாகவும் பெரும் எண்ணிக்கையானோர் பள்ளிவாசல்களுக்குள் சுகாதார வழிகாட்டல்களை அசட்டை செய்வதாகவும் வக்பு சபைக்கு ஆதாரங்களுடன் முறைப்பாடுகளை முன்வைத்திருப்பதனாலேயே இவ்வாறான தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளதாக வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தெரிவித்துள்ளார். (நி-4)

## கனேவத்த புகையிரத நிலையத்தில் புகையிரதம் நிறுத்தப்படாது

(கொழும்பு)

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் மறு அறிவித்தல் வரை கனேவத்த புகையிரத நிலையத்தில் எந்தவொரு புகையிரதமும் நிறுத்தப்படமாட்டாது என புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு புகையிரதத் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள ஐந்து கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் காரணத்தினாலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகப் புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-4)

# கொரோனா எந்தளவு பேரழிவு தரும் என்பதற்கு இந்தியா நல்லதொரு உதாரணம்

## உலக சுகாதார அமைப்பு

(ஜெனிவா)

**கொரோனா வைரஸால் எந்தளவுக்கு பேரழிவுகள் ஏற்படும் என்பதை இந்தியாவில் தற்போது பரவிவரும் தொற்று நோயின் இரண்டாவது அலையின் ஊடாக நாங்கள் அறிந்துகொள்ள முடிகிறது என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைக் கூறிய அவர், இந்தியாவில் தற்போது அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர் தொகை மற்றும் கொரோனா மரணங்கள் குறித்து உலக சுகாதார அமைப்பு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது எனத் தெரிவித்தார்.



இந்தியாவின் நிலைமை சிக்கலானது என்பதை நாங்கள் அறிவோம்.

இந்தத் தொற்று நோயைச் சமாளிக்க பல்வேறு நடவடிக்கைகள் தேவை.

மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கவும் தடுப்பூசி உற்பத்தியை அதிகரிக்கவும் இந்திய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை நான் வரவேற்கிறேன் எனவும் அதானோம் தெரிவித்தார். (நி-4)

# ஹரீனை வேட்டையாட முற்பட்டால் சர்வதேசத்திடம் முறையிடுவோம்

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம்விசேட ஆணைக்குழு அமைத்து ஹரீன் பெர்னாண்டோவை அரசியல் வேட்டையாட முற்பட்டால் நாங்கள் சர்வதேசத்தில் முறையிடவும் தயார் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம்இரண்டாவது நாளாக இடம்பெற்ற 2015 முதல் 2019 நவம்பர் மாதம் 19 ஆம் திகதி வரையான காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களமே குற்றம் உள்ளவர்களுக்கு எதிராக வழக்கு தொடுத்தது.

அதனால் நாங்கள் காட்டுச் சட்டத்தை பின்பற்றி செயற்படவில்லை. தொடுக்கப்பட்ட வழக்குகளுக்கு சாட்சியம் இல்லை என்றால் அதிலிருந்து விடுதலையாகலாம். அப்படி இருக்கும் நிலையில் நீதிமன்றத்துக்கு சென்று தங்களின் குற்றமற்ற தன்மையை ஒப்புவிக்க ஏன் அச்சப்படுகின்றீர்கள்.

அத்துடன் அரசாங்கத்தின் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நாட்டின் சுயாதீன நீதித்துறைக்கு பாரிய அச்சுறுத்தலாகும். அதனால்தான் இதற்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம் உட்பட பல அமைப்புகள் நீதிமன்றம் சென்றிருக்கின்றது. இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவது மக்களின் இறையாண்மைக்கு எதிராகும்.

மேலும் எமது நாடு தொடர்பில் மனித உரிமை பேரவையால் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை மேலும் உறுதிப்படுத்துவதாக இருக்கின்றது. நீதிமன்றத்துக்கு அப்பால் ஆணைக்குழுவொன்று தீர்ப்பு வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்வது நாட்டின் சுயாதீன நீதித்துறைக்கு பாரிய அச்சுறுத்தலாகும்.

அதனால்அரசாங்கம் விசேட ஆணைக்குழுஅமைத்து ஹரீன் பெர்னாண்டோ உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்களை அரசியல் வேட்டையாட முற்பட்டால். அதற்கு எதிர்க்கட்சிஎன்ற வகையில் நாங்கள் சர்வதேசத்துக்கு செல்லவும் தயார் எனத் தெரிவித்தார். (நி-4)

# மியன்மாரில் இருந்து 12 மீனவர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

மியன்மாரில் கைது செய்யப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 12 பேரும் நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளனர்.

சிங்கப்பூர் விமான சேவைக்குச் சொந்தமான SQ468 விமானத்தின் மூலம் அவர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

அத்துடன் குறித்த மீனவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 150 |
| தக்காளி | 70 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 |
| கோவா | 120 | 120 |
| கரட் | 180 | 200 |
| பூசணி | 60 | 60 |
| புடோல் | 120 | 100 |
| வாழைக்காய் | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 220 | 240 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 |
| பாகற்காய் | 200 | 240 |
| வெண்டிக்காய் | 140 | 120 |
| கருணைக் கிழங்கு | 130 | 150 |
| பயற்றங்காய் | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 |
| பீற்றூட் | 80 | 120 |
| கறிமிளகாய் | 160 | 160 |
| முருங்கைக்காய் | 700 | 600 |
| போஞ்சி | 150 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 120 |
| கீரை - 1 பிடி | 80 | 70 |
| தேசிக்காய் | 130 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 240 |
| வெங்காயப்பூ | 400 | 280 |
| முள்ளங்கி | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 |
| வல்லாரை | 70 | 30 |
| ஈரப்பலா | — | 100 |

## பாடசாலைகளை மூடுவது குறித்து இன்னும் தீர்மானமில்லை-கல்வி அமைச்சு

(கொழும்பு)

தற்போதைய கொரோனாப் பரவல் நிலைக்கு மத்தியில் பாடசாலை நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான முடிவை எட்டுவதற்கான பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. நாளை திங்கட்கிழமை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

வார இறுதியில் கொரோனா வைரஸ் நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒரு முடிவு எட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும்பாடசாலைகளை மூடுவது குறித்து இன்னும் ஒரு முடிவும் எட்டப்படவில்லைஎன்றும் பேராசிரியர் கபில பெரேரா குறிப்பிட்டார். (நி-4)

## கையிருப்பிலுள்ள தடுப்பூசிகள் போதுமானதல்ல

(கொழும்பு)

இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொண்ட அஸ்ட்ராஜெனேகா தடுப்பூசிகள் கையிருப்பிலுள்ள போதிலும் அவை எதிர்வரும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் காலாவதியாகிவிடும்.

எனவே மே மாதம்முதல்வாரத்திலிருந்து இரண்டாம் கட்டத் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் கொவிட் தடுப்பூசி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான லலித்வீரதுங்க தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிகண்டி...

நேற்று சனிக்கிழமை பிற்பகல் அப் பகுதியில் உள்ள காணியொன் றில் தோட்டம் செய்யும் ஒருவரினால் கொள் கலன் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

அதற்குள் வெடிபொருள் இருப்பது தொடர் பில் அருகில் உள்ள இராணுவ முகாமுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து அப்பகுதிக்கு சென்ற இராணுவத்தினர் அங்கு இருந்த வெடி பொருட்களை மீட்டுள்ளனர். (ம-3,60)

## 1 இலட்சத்தை...

பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 586ஆக உயர் வடைந்துள்ளது. (ம-3)

## தந்தையை...

முரண்பட்டுள்ளார். வைத்தியசாலையில் பணியாற்றும் மனைவி வீடு திரும்பிய போது தகாத வார்த்தைகளால் தந்தை கேட்டதால் ஆத்திரமடைந்த மகன் அவரை கண்மூடித்தனமாகத் தாக்கியுள் ளார்.

அத்துடன், மைத்துனர் ஒருவரும் அவரைத் தாக்கியுள்ளார். இந்தச் சம்பவம் இடம்பெற்ற நிலையில் குடும்பத் தலைவர் அசைவற்றுக் கிடந்துள்ளார்.

காலையில் அவர் உயிரிழந்தமை தெரியவந்ததையடுத்து கோப்பாய் பொலி ஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புல னாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசார ணையில் கோப்பாய் பகுதியில் பற்றைக் காணியில் மறைந்திருந்த நிலையில் மகனைப் பொலிஸார் கைது செய்தனர். சம்பவம் தொடர்பில் மைத்துனர் ஒருவரை யும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-3,18,33)

## யாழ்.சிறைக்...

சிறைச்சாலையில் 7 பேருக்கும் மல்லாவி பகுதியில் தொற்றுக்குள்ளான இராணுவ சிப்பாயுடன் தொடர்புடைய 3 இராணு வத்தினருக்கும் யாழ்.போதனா வைத் தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் உட்பட 11 பேருக்கு நேற்று தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. (ம-3,18,33)

## 4 பேர் பலி...

றால் மேலும் 4 மரணங்கள் பதிவாகி யுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் உறுதி செய்துள்ளார்.

இதற்கமைய இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 638 ஆக அதிகரித்துள் ளது. (ம-3)

## புலிகளை முறை...

நேற்று சனிக்கிழமை காலை யால வனப் பகுதிக்கு விஜயம் செய்த அவர்,

அங்கு மரத்தில் உறங்கிக் கொண் டிருந்த சிறுத்தைப் புலி இனத்தை கண்டு அதனைப் புகைப்படம் எடுத்தார்.

அதன் பின்னர் சமூக வலைத்தளத் தில் காணொளி ஒன்றை வெளியிட்ட அவர், இலங்கையில் இவ்வாறான சிறுத் தைப் புலி விலங்குகளை பாதுகாக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். (ம-3)

## குளிக்கச் சென்ற...

வரே சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலி ஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசா ரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,33)

## 702...

பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரி வித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே அவர் இந்தத் தகவலை வெளி யிட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 202 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் 83 பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத் தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார். (ம-3)

## 8 மாத கர்ப்பிணி...

ஊற்றி தன்னைத்தானே எரியூட்டினார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்ட போதும் அவரது உயிரிழப்பில் சந்தேகம் உள்ளதால் கணவனைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார், பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.


இதில் உடுப்பிட்டியைச் சேர்ந்த சிந்து ஜன் ரிசிக்கா (வயது-19) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

திருமணமாகி ஒரு வருடம் ஆகிய 8 மாதம் நிரம்பிய கர்ப்பிணிப் பெண், கடந்த 17ஆம் திகதி அவரது உடலில் மண் ணெண்ணெய் ஊற்றி எரியூட்டப்பட்ட நிலையில் எரிகாயங்களுடன் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். கடந்த 6 நாட்களாக அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உயிரிழந் தார்.

சம்பவம் தொடர்பில் திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-3,33)

# ராஜஸ்தான் அணி வெற்றி



ஐபிஎல் ரி20 தொடரில் கொல்கத்தா அணிக்கு எதிரான 18ஆவது லீக் போட்டி யில் ராஜஸ்தான் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய் தது.

இதற்கமைவாக முதலில் துடுப்பெடுத் தாடிய கொல் கத்தா அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக் களை இழந்து 133 ஓட்டங்கள் எடுத்தது.

134 ஓட் டங்களாக வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தடிய ராஜஸ்தான் அணி 18.4 ஓவர்கள் நிறைவில் 4 விக் கெட்டுக்களை இழந்து 6 விக்கெட்டுக்களால் வெற்றி யிலக்கை (134) அடைந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக ராஜஸ் தான் அணியின் கிறிஸ் மோரிஸ் தெரி வானார். (ம-3)

## ரிஷாட் மீண்டும்...

ளப்படும் விசாரணையின் அடிப்படையி லேயே அவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர், முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் பௌத்தலோக மாவத்தையில் உள்ள அவரின் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இதன் போது, தன்னை விடு தலைப் புலிகளின் தலைவர் பிரபா கரனைப் போல் கைது செய்ய வந்த தாக பொலிஸ் அதி காரியிடம் ரிஷாட் பதியுதீன் தெரி வித்தார். (ம-3)

## ராஜ...

மக்கள் காங்கிரஸ் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப் பினருமான ரிஷாட் பதியுதீனையும் அவரது சகோதர ரையும் அதிகாலை 3 மணிக்கு வீடு புகுந்து கைது செய்தமையால் ராஜபக்ஷ அரசின் கொடூர இராணுவ முகம் வெளிப்படு கிறதா? என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ரிஷாட் பதி யுதீன் அதிகாலை யில் கைது செய்யப் பட்டமை தொடர் பில் தனது முக நூல் பக்கத்தில் இவ்வாறு பதிவிட் டுள்ளார்.

மேலும் தலைமறைவாக வாழும் பாதாள உலக கேடியை இழுத்து செல் வதைபோல் கைது செய்ததன் பின் னுள்ள "ஆவேசம்" என்ன? எனவும் கேள்வியெழுப்பி யுள்ளார். (ம-3)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1114
வெற்றி இலக்கங்கள்: மீனம் 0 0 9 1 6 8
00875

மெகா பவர்
திகதி 24/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0820
M 15 46 53 54 79

மஹஜன சம்பத
திகதி 2021/04/24
சீட்டிழுப்பு இலக்கம் 4461
Q 7 0 9 1 7 4

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 24.04.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2756
N 19 23 55 60

தன நிதானய
திகதி - 2021.04.24
சீட்டிழுப்பு இலக்கம் - 498
H 35 42 69 77

சீட்டிழுப்பு வாரம் 070
சீட்டிழுப்பு திகதி 24.04.2021
வெற்றி இலக்கங்கள் 22 42 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,977,480

அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1257
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 24.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 130,418,235
வெற்றி இலக்கங்கள் 13 52 67 69 K
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3587
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி 24.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,389,636
வெற்றி இலக்கங்கள் 03 13 17 56 P
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 37,78,310/=
திகதி: 24.04.2021
வெற்றி வாரம்: 3138
வர்ணம்: இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 12 26 31 51
மேடம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,537,340

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1431
சீட்டிழுப்பு திகதி 24/04/2021
நிறம் கடும் நீலம்
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Q 22 39 59 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் 53,176,012/=

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 428
திகதி 24.04.2021
வர்ணம் சிவப்பு
H 27 52 68 7
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 12,474,588
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் சொன்னதை மெய்ப்பிக்கவே அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஆணைக்குழு

## பாராளுமன்றில் நீதியரசர் விக்னேஸ்வரன்

(கொழும்பு)

ஜெனிவாவில் தமிழர் தரப்பினரால் கூறிய விடயங்களை மெய்ப்பிப்பதாகவே, அரசாங்கம் நியமித்த அரசியல் பழிவாங் கல் தொடர்பான ஆணைக்குழு அமைந்துள்ளது. நீதியின் பயணத்தை இலங்கை அரசாங்கம் எவ்வாறு தவறான வழியில் திசை திருப்புகின்றது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம் ஆகும். நீதியானது தனது தூய பாதையில் பயணஞ் செய்ய இலங்கை அரசாங்கம் இடமளிக்கும் என்று எஞ்ஞான்றும் நாம் நம்ப முடியாது என்றோம். இதனால்தான் தமிழர்கள், மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் ஆகியன ஒரு சர்வதேச நியாயமன்றை உருவாக்குங்கள் என்று கேட்டிருக்கின்றார்கள் என தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன். நேற்று முன்தினம் பாராளுமன் றத்தில் அவர் உரையாற்றியபோது இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மதிப்பு சார்ந்த பொதுச் சேவைக்குள் அரசியலானது புக இடமளித்த காலம் தொடக்கம் பதவியில் உள்ளோரின் பழிவாங்கல் குணம் பற்றியும் தம்மவர் நலம் பேணும் தன்மை பற்றியும் எதிர்த்தரப்பார் கூறுவதும் அதன்பின் எதிர்த் தரப்பார் பதவிக்கு வந்தவுடன் தம்முடைய ஆதரவாளர்கள் முன்னைய அரசால் பழிவாங்கப்பட்டார்கள் என்று கூறுவதும் சகஜமாகி விட்டது.

பாராளுமன்றமோ அரசியல்வாதிகளோ பொதுச் சேவையின் செயற்பாடுகளில் தலையிடக் கூடாது. அவ்வாறு செய்வது அரசியல் யாப்பின் 4ஆம் உறுப்புரையில் காணப்படும் "அதிகார பிரிவினை" என்ற கோட்பாட்டை மீறுவதாக அமையும். நிறைவேற்றுத் துறையின் ஒரு அங்கமே பொதுச் சேவை. எனினும் அத்துறையின் மற்றைய அங்கத்தவர்களான ஜனாதிபதியும் அமைச்சரவையும் பொதுச்சேவை மீது வரையறுக்கப்பட்ட அதிகாரமே கொண்டுள்ளனர் என்றார். (ம-03)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், உரும்பிராய், கோப்பாய் வீதியில் மெயின் றோட்டுடன் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (கோப்பாய் வீதி கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில்.) (6705)

077 468 3354, 077 288 0152, 077 203 6402

## வேலை வாய்ப்பு

Cashier, Supervisor, Accounts Clerk, Shop Keeper, Salesman, Sales Girl, Waiter, Helper, Labor. (6689)

076 300 5506, 021 315 2500

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ். நகரில் IELTS (Academic and General ) A1 UK Exams (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை ) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். Guaranteed to 7.5 in IELTS Exams.

A1 Exam Pass Exam Center

Jaffna College Under Graduate Department

( Group and Personal Classes available ) (6659)

Please Contact :

077 780 3970, 074 007 1970

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை கிழக்கு, ஐயனார் வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

( தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 மீற்றர் தூரம் )

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.

( தரகர் தேவையில்லை ) பரப்பு 5 இலட்சம். (6697)

077 814 7389

077 614 7333

## INDIVIDUAL ENGLISH CLASSES SPOKEN & GRAMMAR

கொழும்பில் 25 வருடம் ENGLISH LANGUAGE LITERATURE கற்பித்த ஆசிரியர் தற்போது யாழ்.நகரில்

G.C.E O/L, A/L, பட்டதாரி மாணவர்கள்,பட்டதாரிகள், ஆசிரியர்கள், தொழில் புரிவோர், ENGLISH MEDIUM கற்பவர்கள் அனைவருக்கும் தனித்தனி வகுப்புகள் -யாழ்.இந்து அருகாமையில். (6633)

K.GANESH B.A(PERA.) 077 766 8725

## Software Engineer, QA, UI/UX

கொழும்பில் சில பிரபல மென்பொருள் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுக்கொடுப்பதுடன், அனுபவமற்றவர்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான 3 மாத பயிற்சியும் வழங்கப்படும். (6689)

DEWMAS

074 138 3368, 021 315 2500

51, Amman Road, Nallur. dewmasweb.com

## வேலை வாய்ப்புக்கள்

இலங்கையின் முதல்தர நிறுவனத்தில் அடிப்படைச் சம்பளத்துடன் வேலை வாய்ப்புக்கள்.

- நிதி ஆலோசகர்.
- குழு முகாமையாளர்.
- கிளை முகாமையாளர்.



ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

க.பொ.த சாதாரண தரத்தில் ஆறு பாட சித்தி.

வயது எல்லை 18 - 40 வரை.

விண்ணப்பிக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி

financialneeda@gmail.com

(C-2035)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-2024)

077 436 6704, 077 179 1963


# மரண அறிவித்தல்



பிறப்பு 20 - 06 - 1949

இறப்பு 24 - 04 - 2021

## பொன்னையா தம்பிஐயா

எழுதுமட்டுவாழை பிறப்பிடமாகவும் இராமநாதபுரம், வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தம்பிஐயா நேற்று (24.04.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.04.2021) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 3.00 மணிக்கு மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2041)

இல. 598/5, இராமநாதபுரம். வட்டக்கச்சி. கிளிநொச்சி.

077 088 7361

தகவல்:- குடும்பத்தினர்


## Job Vacancy

எமது EDM கம்பனியில் இணைந்து செயற்படுவதற்காக தகுதியும் ஆற்றலும் ஊக்கமும் உள்ளவர்களை அன்போடு அழைக்கிறோம். புதிய கிளைகள் ஆரம்பிக்கவுள்ளதால் எப்பிரதேசத்திலிருந்தும் ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தகுதிகள் : தரம் 10 தொடக்கம் O/L A/L

பயிற்சியின் போது 15,200/= - 23,000/= வரை

( விதிமுறைகள் உண்டு.)

பயிற்சியின் பின் உங்கள் பிரதேசத்தில் வேலை வாய்ப்பு. விருப்பம் உள்ளவர்கள் உங்கள் முழுப்பெயர், N.I.C என்பவற்றை SMS செய்யுங்கள். (6704)

தொடர்புகளுக்கு-077 326 0979

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

அண்ணா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-2006)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை

பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை

மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## சோ(f)பா கிளீனிங்

தங்கள் கறைபடிந்த சோ(f)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புக்களை நவீன இயந்திரம் மூலம் சுத்தம் செய்து புதுப்பொலிவுடன் பெற அழையுங்கள். (6698)

077 224 2787

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-2004)

0768226240 DHL

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள் (C-2005)

V2 TRAVELS

எமது கிளைகள்

கிளிநொச்சி சுன்னாகம்

சாவகச்சேரி மானிப்பாய்

நெல்லியடி பருத்தித்துறை

திருகோணமலை வல்வெட்டித்துறை

கோப்பாய் புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 15'000/-

பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777-068-777

v2vacancies@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 306

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 | 25.04.2021 | தொலைபேசி : 021 222 3378

## தீயே உனக்கென்ன தீராத பசியோ?









## உள் வீட்டுக்குள் உடைவு

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

எல்லாரும் முகக்கவசங்களைப் போட்டுக் கொள்ளுங்க. இப்ப கொரோனா திரிபாக அல்லோ வருகுது. வாத்தியார் வைத்திலிங்கம் அறிவிப்புச் செய்தார்.

**விதானையார்:** இந்தியாவில கொரோனா தாண்டவமாடுவதைப் பார்க்கும் போது மனதுக்குப் பெரும் கஷ்டமாக இருக்குது. நாளுக்கு நாள் அங்க ஆட்கள் இறந்து கொண்டே இருக்கினம்.

**பண்டிதர்:** என்னைப் பொறுத்தவரை இது ஊழிக்காலத் தாண்டவம் போலத்தான் இருக்குது. கடவுளை வணங்கிறது தான் ஒரேவழி.

**கங்காணி:** இந்தியாவில ஏற்பட்டிருக்கிற நிலைமை இலங்கையிலும் ஏற்படலாம் எண்டு சஞ்சய் பெரேரா எச்சரிக்கை செய்திருக்கிறார்.

**மூப்பர்:** உண்மைதான். கொழும்பின்ர புறநகரங்களில கொரோனாத் தொற்று அதிவேகமெடுத்திருக்குது. இறப்புக்களுக்கும் குறைவில்லை எண்டு அங்கிருந்து வாற செய்திகளில அறிய முடிகிறது.

**சிறாப்பர்:** தென்பகுதியில புதுவகை வைரஸ் கொரோனா பரவுது எண்டால், அதின்ர அடுத்த கட்டத் தாக்கம் எங்கட வடபகுதியாகத்தான் இருக்கும் என்பதை நாங்கள் கட்டாயம் உணர்ந்து கொள்ள வேணும்.

**சாத்திரியார்:** உண்மைதான். மேல் மாகாணத்தில கொரோனாத் தொற்று வேகமாக இருந்தபோது தென்பகுதியில இருந்து வடபகுதிக்கு வருகிறவர்கள் தொடர்பில எந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதனால்தான் யாழ்ப்பாணத்தில கொரோனாத் தொற்றுப் பரவியது.

**விதானையார்:** கொரோனாத்தொற்று பரவினாலும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு எந்த நடவடிக்கைகளையும் எடுக்கின்ற அதிகாரம் இல்லாத வடக்கு மாகாண நிர்வாகத்தால என்னதான் செய்ய முடியும்.



## கொரோனா தொற்றாளர்களை பராமரிக்க தயாராகுங்கள்

**பண்டிதர்:** அதிகாரம் இருக்குதோ இல்லையோ சில நடவடிக்கைகளை துணிந்து எடுத்துத்தானாக வேண்டும்.

**கங்காணி:** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

**பண்டிதர்:** கங்காணியார் எல்லாத்துக்கும் மத்திய அரசாங்கத்திட்ட கேட்டுக்கொண்டிருக்க முடியாது. எங்கட மக்களைக் காப்பாற்றுகின்ற உரிமை எங்களுக்கு இருக்குது. ஆகையால் வடக்கு மாகாண ஆளுநர், மாவட்ட அரசாங்க அதிபர்கள், வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் என்ற முக்கூட்டுத் தரப்பும் ஒன்றுபட்டு சில கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுத்தாக வேணும். இல்லையெண்டால் நிலைமை படுமோசமாவதை யாராலும் தடுக்க முடியாமல் போகும்.

**சாத்திரியார்:** அதோட இன்னொரு விடயத்திலும் நாங்கள் தயாராக இருக்கவேணும்.

**வாத்தியார்:** சாத்திரியார் எதையும் விளக்கமாகச் சொல்லுங்க.

**சாத்திரியார்:** கொரோனாத் தொற்று ஏற்படாமல் தடுப்பு நடவடிக்கைகளைச் செய்கின்ற அதே நேரம் திரிபுபட்ட கொரோனாத் தொற்று வேகமாகப் பரவினால், தொற்றாளர்களைப் பராமரிப்பதற்கான இடங்களைத் தெரிவு செய்து அவற்றை ஆயத்தமாக வைப்பது மற்றும் செயற்கைச் சுவாசம் வழங்குவதற்கான சிலிண்டர்களை தாராளமாக வைத்திருப்பது, தொற்றாளர்களைக் காப்பாற்றுவதற்காக மருத்துவ ஆளணியினர் தயார் நிலையில இருப்பது என்ற விடயங்களில கவனம் செலுத்தவேணும் என்பதைத்தான் சொல்லுறன்.

**சிறாப்பர்:** சாத்திரியார் சொல்லுறது முற்றிலும் சரிதான்.

ஆனால் அதற்கான நிதியுதவிகளை அரசாங்கம் வழங்குமோ.

**வாத்தியார்:** நிதியுதவி கிடைக்காவிட்டால் பரவாயில்லை. ஆளுநர், மாவட்ட செயலாளர்கள், வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோர் கூட்டாக இணைந்து, கொவிட்-19 கட்டுப்பாட்டுக்கான நிதியம் ஒன்றை உடனடியாக ஆரம்பித்து கொடைவள்ளல்களை அதற்கு உதவுமாறு அழைப்பு விடுத்தால், கோடிக்கணக்கான நிதியுதவி வந்து சேரும்.

**விதானையார்:** இதற்கு நிதிப் பிரமாணங்கள் இடம்கொடுக்குமோ?

**பண்டிதர்:** சம்பந்தப்பட்டவியள் நினைத்தால் எதையும் அதுக்கேற்றால் போல் செய்ய முடியும்.

**சிறாப்பர்:** வாத்தியார் சொன்னமாதிரி கொவிட்-19 நிதியம் ஒன்றை ஆரம்பித்தால் எங்கட ஆலயங்களே அதற்கு நிதியுதவி செய்யும். ஆகையால அரசாங்கத்தைப் பார்த்துக் கொண்டிராமல் எங்கட மக்களைக் காப்பாற்றுவதற்கு நாங்கள் சில திட்டங்களை ஏற்பாடு செய்யவேணும்.

**பண்டிதர்:** அப்ப ஆலடியில இதையொரு தீர்மானமாக நிறைவேற்றுவம்.

இவ்வாறு பண்டிதர் கூறியதும் மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் விறுக்கென எழுந்தார்.

வேகமாகப் பரவிவரும் கொரோனாத் தொற்றில் இருந்து எங்கட மக்களைப் பாதுகாப்பதற்காக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவது, தென்பகுதியில இருந்து வடக்கிற்கு வருகின்றவர்களின் விபரங்களைப் பதிவு செய்வது, கொரோனாத் தொற்று அதிகரிக்கும் பட்சத்தில் அவர்களைப் பராமரிப்பதற்குத் தயாராக இருப்பது என்ற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றுவம் எனக்கூற, அதனை மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ள, அதற்குத் தனது ஆதரவும் இருப்பது போல் ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டா மணி[illegible] ஒலிக்க, ஆலடி[illegible] ந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அசைக்க முடியாத ஆட்சி ஆட்டம் காண்கிறது

**“இனி ராஜபக்ஷக்களின் ஆட்சியை யாரா லும் அசைக்க முடியாது எனக் கூறியவர்களே ராஜபக்ஷக்களின் ஆட்சி கவிழும் எனப் பகிரங் கமாகக் கூறி வருகிறார்கள்.”**



ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது பௌதிக வளங்களை மையமாகக் கொண்டனவாகவே அமைகின்றன.

நாட்டின் பௌதிக வளம் சிறப்பாக இருக்குமெனின் அந்நாடு வளர்ச்சியை நோக்கி நகர்கிறது என்பதே கணிப்பாகும்.

நாட்டின் பௌதிக வளங்களை உருவாக்குவது அரசாங்கத்துக்குரிய முக்கிய பொறுப்பாகும்.

பௌதிக வளம் உயர உயர அது நாட்டின் கல்வி பொருளாதாரத்தில் மாற்றம் செலுத்தும்.

அதனாலேயே அரசாங்கங்கள் பௌதிக வளங்களில் அதிக கவனம் செலுத்துகின்றன.

இவ்வாறு பௌதிக வளத்தை உயர்த்த போடப்பட்ட பாரிய திட்டம் ஒன்று தற்போதைய அரசிற்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தியுள்ளது.

ஆம், கொழும்பு துறைமுக நகர விவகாரம் நாட்டின் ஆட்சியை உலுக்கும் அளவிற்கு விஸ்பரூபம் எடுத்திருப்பதை உணர முடிகிறது.

சீனாவின் நிதிப்பங்களிப்பில் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித்திட்டம் கடந்த 2014 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பிக்கப்பட்டது.

சீனாவின் பாரிய நிதிப் பங்களிப்பில் உருவாக இருந்த குறித்த இத்திட்டத்திற்கு அப்போதே பல்வேறு எதிர்ப்புகள் எழுந்த போதிலும் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தன.

இது இவ்வாறு இருக்கையில் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் நல்லாட்சி உதயமாக மைத்திரிபால சிறிசேன ஜனாதிப்தியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

நல்லாட்சி அமைந்ததும் துறைமுக நகர் திட்டத்தை உடன் நிறுத்த வேண்டும் என பல்வேறு அழுத்தங்கள் எழுந்த போதிலும் குறித்த திட்டம் நிறுத்தப்படாது எனவும் இத்திட்டம் நாட்டின் பொருளாதார வளர்சிக்கு மிக முக்கிய பங்காற்றும் எனவும் நல்லாட்சியின் ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் ஆகியோர் தெரிவித்ததுடன்,

இலங்கையில் சீனா மேற்கொள்ளும் மிகப்பெரிய முதலீடு இது என சீனாவின் அப்போதைய உதவி வெளியுறவு அமைச்சர் தெரிவித்திருந்தார்.

அதன்பின் இச் செயற்றிட்டம் தொடர்பில் யாரும் பெரிதும் பேசாதவிடத்து கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்தி முழுமூச்சில் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

நல்லாட்சி கவிழ்க்கப்பட கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன முன்னணி மிகப் பெரிய வெற்றியைப் பெற்று ஆட்சியமைத்தது.

நல்லாட்சி நல்லதாய் அமையவில்லை என மக்கள் மத்தியில் விசனம் எழ,

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விடயம் நல்லாட்சியின் கறையான தன் விளைவே ராஜபக்ஷக்களின் மீள் எழுச்சி எனலாம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற ராஜபக்ஷக்கள் இனி இந்த ஆட்சிக்கு முடிவே இல்லை எனும் தொனிப் பொருளில் ஆட்சி நடத்தத் தலைப்பட்டனர்.

உலகளவில் கொரோனாவின் தாக்கம் தலைவிரித்தாட இலங்கையில் கொரோனாக் கட்டுக்குள் இருந்ததும் அதை உலக சுகாதார அமைப்பு பாராட்டி மேலும் பல மில்லியன் நிதி உதவித்திட்டத்தை வழங்கியிருந்ததும் இங்கு கவனிக்கத்தக்க விடயம்.

அதன்பின் இலங்கையில் வெகு வீரியமாக கொரோனாத் தொற்று பரவியதை அடுத்து ஆட்சியாளர்கள் இவ்விடயத்தில் சிறப்பாகச் செயற்படவில்லை என மக்கள் கருத்துரைக்கத் தொடங்கினர்.

உலகப் பொருளாதாரத்தில் பாரிய சரிவு விழ அது இலங்கைப் பொருளாதாரத்தை ஆட்டிவிட்டது என்றே கூற வேண்டும்.

இதன் விளைவு ரூபாவின் விலை தொடந்து வீழ்ச்சி கண்டு கொண்டே இருந்தது.

இது இவ்வாறிருக்கையிலேயே யாராலும் அசைக்க முடியாது என நினைக்கப்பட்ட ஆட்சி கொழும்பு துறைமுக நகர் விவகார வடிவத்தில் ஆட்சியை ஆட்டம் காணும் அளவிற்கு மாற்றியுள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்திட்டத்தை எதிர்ப்பது எதிர்க்கட்சி எனின் சர்வசாதாரணமாக ஆட்சியாளர்கள் அதைக் கையாண்டிருப்பார்கள்.

அட, இத்திட்டத்திற்கு பெரும் எதிர்ப்பை வெளியிடுவது யாரெனின்,

யார் ராஜபக்ஷ ஆட்சி மலர வேண்டும் என இரவு-பகலாகப் பாடுபட்டார்களோ அவர்களே அவர்களின் வாயால் ராஜபக்ஷக்களின் ஆட்சி கவிழும் என்று கூறுகின்றனர்.

நிலைமையின் வீரியத்தை உணர்ந்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாட கடந்த 19 ஆம் திகதி பொதுஜன பெரமுன முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

மகிந்த ராஜபக்ஷ மிக அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி. அவர் இந்தப் பிளவை சரி செய்து விடுவார் என அனைவரும் எதிர்பார்த்திருக்க, அக்கலந்துரையாடலும் தோல்வியில் முடிவடைந்தது.

குறித்த கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்த விமல் வீரவன்ச, வாசுதேவ நாயக்கார, கம்மன்பில ஆகியோர் கூட்டத்தைப் புறக்கணித்துவிட்டு இடைநடுவில் வெளியேறியமை ராஜபக்ஷக்களின் ஆட்சி தொடர்பில் பல விமர்சனங்களை எடுத்தியம்பியிருக்கிறது.

வெளிநடப்புச் செய்த மூவரும் அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற அமைச்சர்கள் என்பதை இங்கு ஈண்டு கவனிக்க வேண்டும்.

இந்நிலையில் ஜயவர்த்தன பல்கலைக்கழக விரிவுரையாளர் தம்பல அமில தேரர்,

தமிழீழம் அமைந்திருக்குமானால் அதை ஆறுதல் வார்த்தையினாலாவது தேற்றியிருப்போம். ஆனால் துறைமுக நகரத்தினூடே சீனாவின் காலனி அமைவதை ஒரு போதும் ஏற்கமாட்டோம் எனத் தெரிவித்திருந்தார்.

இது இவ்வாறிருக்க அஸ்கிரிய பீடமும் ராஜபக்ஷ ஆட்சி மீது கடும் தணலைக் கொட்ட ஆரம்பித்துள்ளது.

இனி யாராலும் ராஜபக்ஷக்களின் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது என கர்ஜனை செய்தவர்களே நாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் செயற்றிட்டங்களை அரங்கேற்றினால் அது ராஜபக்ஷக்களின் ஆட்சி கவிழ்க்கப்படும் செய்தியை உணர்த்தி நிற்கும் எனப் பகிரங்கமாக கூறுகின்றனர்.

எனின், வாழ்க்கை ஒரு வட்டம் என்பதை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## குரு பக்தி



இதைப் பார்த்த அர்ஜூனன் திகைத்து நின்றான். தன் குருவைச் சந்தேகத்தோடு பார்த்தான். "தன்னினும் சிறந்த வில்வீரன் ஒருவன் உள்ளான். அவன் விட்ட பாணமே இதற்குச் சாட்சி.

இந்தக்கலையை அறிந்தவர் துரோணர் ஒருவரே. இன்று மற்றொருவர் உள்ளார் எனில் இதைக் கற்பித்தவர் தனது குருவே. இவ்வாறு அர்ஜூனன் எண்ணம் ஓடிற்று.

அப்போது வில்லும் கையுமாக அங்கு வந்தான் அன்று வந்த வேடுவச் சிறுவன். துரோணரைக் கண்டதும் மண்டியிட்டு வணங்கினான். "ஏ சிறுவனே! உனக்கு இக்கலையைக் கற்பித்தவர் யார்? உன் குரு யார்?" சற்றே கோபமாகக் கேட்டார் துரோணர்.

தாங்கள்தான் எனது குருநாதர். தினமும் நான் உங்கள் முன்னிலையில் தானே பயிற்சி மேற்கொள்கிறேன்.

"பொய் சொல்லாதே! ராஜகுமாரர்களைத் தவிர நான் யாருக்கும் கற்பித்ததில்லை. உண்மையைச் சொல்."

"என்னுடன் வாருங்கள்." என்று அழைத்த சிறுவனுடன் அனைவரும் அவன் இல்லம் சென்றனர். காட்டின் நடுவே ஒரு குடிசை. அதன் முன்னே ஒரு திறந்த வெளியில் நாடு நாயகமாக துரோணரின் சிலை அமர்ந்த நிலையில் அமைக்கப் பட்டிருந்தது.

அச்சிலையை வணங்கிய சிறுவன் "இவர் தான் என் குருநாதர். இவர் முன்னால் தான் நான் பயிற்சி செய்கிறேன்." என்றான் பணிவோடு.

"இது எனது உருவம் போல் உள்ளதே" "ஆம் குருதேவா. தங்களின் பாதம் பதித்த மண்ணைக்கொண்டு வந்து அதைச் சேர்த்து ஒரு சிலை செய்து தாங்களே அமர்ந்து எனக்குப் பாடம் சொல்வதாக நினைத்துக் கொண்டேன். தங்களை என் மனதில் குருவாக எண்ணிக் கொண்டு தினமும் வணங்கி வருகிறேன்" (தொடரும்)

# மகாபாரதம்




**யட்சன்**

பன்னிரண்டு கால வனவாசம் நெருங்கியது. அதற்குள் பாண்டவர்களுக்கு ஒரு சோதனை வந்தது. வேள்விக்கு உதவும் அரணியுடன் கூடிய கடைகோல் ... முனிவர் ஒரு ...ந்தார்.

அது ஒரு மானின் கொம்பில் ஒட்டிக் கொள்ள மருண்ட மான் அதனுடன் ஓட்டம் பிடித்தது.

தமது வேள்வி தடைப்படாமல் இருக்க அதை மீட்டுத் தரும் படி பாண்டவர்களை அம்முனிவர் கேட்டார்.

மானைத் தொடர்ந்து பாண்டவர்களும் ஓடினர். ஆயினும் மானைப் பிடிக்க இயலவில்லை. மானும் ஓடி மறைந்தது. முனிவருக்கு உதவ முடியவில்லையே ஏன் இந்த இழிவு நமக்கு எனப் பாண்டவர்கள் எண்ணினர்.

பாஞ்சாலியை அவையில் அவமானப் படுத்தியவனை அன்றே கொன்றிருக்க வேண்டும். அதனால்தான் இந்த இழிவு என்றான் பீமன்.

அன்று நாக்கில் நரம்பின்றி பேசினானே கர்ணன் அவனை அன்றே கொன்றிருக்க வேண் டும். அதனால் தான் இந்த இழிவு என்றான் பார்த்தன்.

சகுனி மாயச் சூதாடும் போது அப்போதே அவனை கொன்றிருக்க வேண்டும். அதனால் தான் இந்த இழிவு என்றான் சகாதேவன்.

இந்நிலையில் தாகம் ஏற்பட நகுலனை தண்ணீர் எடுத்து வரக் கூறினார் தருமர்.

தண்ணீரைத் தேடி அலைந்த நகுலன் வெகு தொலைவில் ஒரு தோப்புக்கு நடுவே ஒரு குளம் இருப்பதைக் கண்டான். அதன் அருகே சென்று நீரை மொண்டு பருக ஆரம்பிக்கையில் "நில்" என்ற குரல் கேட் டது. அதை அலட்சியம் செய்துவிட்டு நகுலன் நீரைப் பருக அவன் சுருண்டு வீழ்ந்து மாண்டான்.

நீண்ட நேரம் ஆகியும் நகுலன் வராததால் சகாதேவனை தருமர் அனுப்ப அவனுக்கும் நகுலனுக்கு ஆன கதியே ஆயிற்று.

பின்னர் அனுப்பப் பட்ட பார்த்தன், பீமன் ஆகியோரும் இக்கதிக்கு ஆளாகினர். நீண்ட நேரம் எவரும் திரும்பாததால் தருமர் அனைவரையும் தேடிச் சென்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விவேக்கின் மறைவை தாங்க முடியவில்லை வியாசரே?

**தாரு — யாழ்ப்பாணம்**

**பெண் அடிமை என்பது இப்போதும் நடந்து கொண்டுதானே இருக்கிறது வியாசரே?**

ஒருவர் என்னிடம் கேட்டார் பெண்கள் காலுக்கு மேல் கால் போட்டு உட்கார்ந்தால் கருப்பைப் பாதிப்பு ஏற்படுமா என்று. அதற்கு நான் சொன்னேன்…அது என்னமோ எனக்குத் தெரியாது. ஆனால் பெண்கள் அப்படி உட்கார்ந்தால் மேலாதிக்க குணம் கொண்ட ஆண்களுக்கு வயிறெரிவு , வயிறு குடைச்சல், அல்சர் போன்ற நோய்கள் வர வாய்ப்பிருக்கிறது என.

**எஸ்.சௌமியன் — கிளிநொச்சி**

**நாஸ்திகத்தின் மேல் உங்கள் பார்வை எப்படிப்பட்டது?**

நாஸ்திகர் என்பது கடவுள் இல்லை என்ற கோட்பாடு உடையவர்.

நான் நாஸ்திகவாதி, முன்னொரு காலத்தில். காலம், சூழல், நேரம் என்பன எம்மை மாற்ற வல்லன.

வீட்டில் இரவுவேளை தனியே இருக்கும் போது அறையில் இருந்த பொருட்கள் கீழே விழுந்து விட ஏற்பட்ட பதற்றம் பூனையைக் கண்டதும் அடங்கிவிடும்.

இதற்கு நாஸ்திகவாதி விதிவிலக்கல்ல.

**சசி — நெல்லியடி**

**பிறர் மீது நம்பிக்கை குறைவாக இருக்கிறதே. காரணம் என்ன?**

எல்லோரையும் நல்லவர் என நினைத்து செயற்பட்டு நாம் யாரிடமோ தோற்றுப் போவோம்.

அந்த ஏமாற்றம் எவரையும் நம்ப மறுத்து விடும்.

இவரும் கெட்டவரா? எம்மை ஏமாற்றி விடுவாரா? என்ற எண்ணம் எம்மில் இழையோட ஆரம்பித்து விடும்.

அதனால் அனைவரையும் கெட்டவர்களாகப் பார்க்கும் நோய் ஏற்பட்டு விடும்.

அனால் நம்மைப் புரிந்து கொண்டவர்களை நாம் நம்பலாம். அதில் தவறேதும் இல்லை.




**சுதன் — குப்பிழான்**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பாப்பரசர் மன்னிப்புக் கூறியது போல முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்கு பௌத்த தேரர்கள் மன்னிப்பு கோருவார்களா?**

என்னது மன்னிப்புக் கோருவதா? அது நடக்காது தம்பி.

இது பௌத்த நாடு. இங்கு நாம் வைத்தது தான் சட்டம். இங்கு பௌத்தத்திற்கே முதலிடம். வேறு யாரும் வாழ விரும்பினால் வாழ்ந்து விட்டுப் போகலாம். ஆனால் இது பௌத்த நாடு.

இங்கு தோண்டும் இடமெல்லாம் பௌத்த சின்னங்களே வெளிவரும்.

இப்பேற்பட்ட மனம் கொண்டவர்கள் மன்னிப்புக் கேட்பார்களா என்ன?

**நிக்சனா — பருத்தித்துறை**

**படிக்கும் மாணவர்களுக்கு தினமும் காலையில் எழுவதற்கு ஏதாவது ஐடியா இருக்கா?**

பிள்ளைகளைப் படிக்கச் சொல்லி பெற்றோர்கள் குத்தி முறிவதைவிட பிள்ளைகளுக்கு படிப்பின் மீது பற்று வர அறிவுரை சொல்வது மேலானது.

காலை 4 மணிக்கு விழித்து படிக்க வேண்டும் என பிள்ளைக்குப் பணித்தால் அது வெறும் படம் பார்ப்பாக மட்டுமே இருக்கும். பணித்தலை பிள்ளை மீது பிரயோகிப்பதிலும் பார்க்க படிப்பில் அவருக்கு அக்கறை வரச் செய்யுங்கள்.

அது அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.



## பெண் அடிமை என்பது இப்போதும் நடந்து கொண்டு தானே இருக்கிறது வியாசரே?

**காயத்திரி — வத்தளை**

**கொரோனா முடியுமா? தொடருமா வியாசரே?**

ஒரு நாடகம். அதில் இருவருக்கிடையில் வாள் சண்டை நடைபெறுகிறது.

வாள் சண்டை உக்கிரம். வில்லனான சிங்கன் கதாநாயகனின் வாள்வெட்டில் இறந்து போகிறான்.

திரை மூடுகிறது. சிங்கன் இறந்து விட்டார் என அறிவிப்பு கேட்டதுதான் தாமதம் திரையை வாளால் கிழித்த சிங்கன் மக்கள் பக்கம் தலையை நீட்டி ‘‘மயிரைச் செத்தான் சிங்கன்’’ என்றான்.

சிங்கனைப் போலத்தான் இந்த கொரோனாவும் முடிந்து விட்டது என நினைக்க 2, 3,4 என அலையாய் ஆட்டிப் படைக்கிறது.

**முகுந்தன் — புலோலி**

**விவேக்கின் மறைவை தாங்க முடியவில்லை வியாசரே?**

நகைச்சுவையினூடே சமூக சிந்தனையைப் பரப்பியவர் நடிகர் விவேக். அவரின் வெற்றிடத்தை யாராலும் நிரப்பி விட முடியாது. அவ்வளவிற்கு தன் ஒவ்வொரு நகைச்சுவைகளிலும் சமூக சிந்தனைகளை விதைத்திருப்பார் விவேக்.

மரம் மனித இனத்தைப் பாதுக்கும் என்று தமிழ்நாடு முழுவதும் மரம் நடும் செயற்றிட்டத்தை இறுதி வரை செயற்படுத்திக் கொண்டே வந்தவர். அவரின் இழப்பு பேரிழப்பே.

**சிவா — யாழ்ப்பாணம்**

**துறைமுக நகர சட்டமூலம் வருமா?**

துறைமுக நகர விவகாரம் ஆட்சி கவிழும் அளவில் நிற்கிறது. என்னது சீனாவின் காலனி இலங்கையிலா என பேரினம் தூங்கி விழித்தது போல கேட்டுக் கொண் டிருக்கிறது. பௌத்த தேரர்கள் அரசைக் கடுமையாகத் தாக்குகிறார்கள். சட்டமூலம் நிறைவேறுமா என்று கேட்கிறீர்களா என்ன?

**திஷா — மானிப்பாய்**

**மறுபடியும் லொக்டவுனா? நினைக்கவே பயங்கரமா இருக்கு வியாசரே?**

பேச்சுப் பேச்சாத்தான் இருக்கனும் தொட்டுப் பேசுற வேலை வச்சுக்கக் கூடாது. எப்பவும் நாலடி தள்ளியே நில்லு என மறுபடியும் சொல்ல வைத்துவிட்டதே இந்த கொடிய கொரோனா.



**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை **021 567 1532** எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புத்தி சொல்லும் புத்தகம்



கற்பனைகள் கருக்கொண்டு
சிந்தனைகள் சிற்பமாகி
உணர்வுகள் ஊற்றுக்களாகி
உயிரற்றுக் கிடப்பதைப் பார்

பயனற்ற பேச்சால்
உலகின் செவி செவிடாக
ஊமைப்புத்தகங்களோ
உண்மை உரைப்பதை பார்

பேசும் மொழிகளோ
அர்த்தம் ஒன்று சொல்ல
பேசாத மொழிகளோ
அமைதியாய் சிரிப்பதை பார்

பட்டமரமாய் பயனற்று
போனாயோ?
இங்கே மீண்டெழ புத்திசொல்லும்
புத்தகத்தை பார்

**வ.யட்ஷாயினி, கந்தர்மடம்**

## கவனமெடுக்கவில்லை

மழை வருமென்று குடையை எடுத்தேன்
வெயில் வருமென்று தொப்பியை எடுத்தேன்
தாகம் எடுக்குமென்று தண்ணீரை எடுத்தேன்
பசி எடுக்குமென்று உணவை எடுத்தேன்
பொருட்களை வைப்பதற்கு பையை எடுத்தேன்
வீதியில் செல்வதற்கு வாகனத்தை எடுத்தேன்
பயணத்திற்கு தேவையான அனைத்தையும் எடுத்தேன்
விபத்து வருமென்று கவனமெடுக்கவில்லை

**அராலியூர் ப.தர்மகுமாரன்**

## சான்றோனாய் வாழ்ந்திடு

நான்கு வகை மனிதருண்டு
நானிலத்தில் காண்பீர்- அதை
நன்கறிந்தே நீயும் வாழ
நாடு போற்ற இன்று

நன்மையே புரிபவர்க்கும்
தீமையே புரிவான்- இவனை
அதமாதமன் என்று நீயும்
விலகி வாழ்வாய் என்றும்

தீமையே என்றும் புரியும்
மனிதர்களைக் காண்பீர் இவனை
அதமன் என்று புரிந்து நீயும்
உணர்ந்து கொள்வாய் நன்கே

நன்மையே என்றும் நல்கும்
பெரியோரும் உண்டு- இவரை
உத்தமன் என்று நீயும்
உதவிபெற்று வாழ்வாய்

தீமையே புரிந்திடினும்
நன்மையையே செய்வார்- இவரை
உத்தமோத்தன் என்று
போற்றி வாழ்க என்றும்

நான்கு வகை மனிதர்களும்
நானிலத்தில் வாழ்வார்-நீயும்
சான்றோனாய் வாழ்ந்திடிலே
நாடே என்றும் போற்றும்

**எஸ்.சிவானந்தராஜா**
பண்டத்தரிப்பு

## முயற்சித்திடு



காலவெளிகளில் தொலைத்துவிட்ட
தம் இளமைக்கால முயற்சிகளைத் தேடி
அழுகின்றது முதுமைகள் சில
கிழட்டிப்போன பசுமுலையில்
பால்குடிக்க
வாலைப்பிடித்து முறுக்குது
இளமைகள் சில

செத்துப்போகும் பாடையில் மட்டுமே
வரலாறு எழுதிட
பகலையும் இரவாக்கி
படுக்கையாய் இருக்கிது இளமைகள் சில
வேண்டாம் தம்பி
வெட்டியாய் திரியும் பட்டியால் உனக்கும்

சாதனைகள் நிகழ்ந்திடு
சரித்திரங்கள் பரணி பாடட்டும்
சாதனைகளின் சாத்தியங்கள்
உன்னை நீ காப்பதே நிச்சயம்

இனி
சிறுமதியாவது விட்டுச் சிந்தி
பார் உவக்கும் வெகுமதிகள்
உன் உழைப்பினில் தெரியும்

**கொற்றை**
**சிவ-யாதகி**

## மௌனத்தின் தேடல்- 525



## அன்னை

அன்னையவள் ஆகாரம் தேட
அன்பால் பின்னால் நின்று
அரவணைத்திடும் பிள்ளை
இதற்கிங்கு ஈடேதுமில்லை
பிள்ளையின் பசிபோக்க
அன்னை துடித்திட
உண்பதற்காக உணவையாக்கிட
ஆக்கிடமுன் அவதியுறும்
பிள்ளை நிலை பாராய்

**சி.திவ்வியா**
**யா/ப.மெ.ம.வி**

## ஏற்படும் இன்பமதை எவ்வாறு சொல்வேன்

உருவம் அறியாக் கருவினிலே
என்னைக் காதல் செய்த என் அம்மா
அன்பு ஊற்றாய் நிறைந்த உன்
முதுகுமீது சாயும் போது ஏற்படும்
அந்த இன்பமதை எவ்வாறு சொல்வேன்
என்றும் உன் அணைப்பு வேண்டும் அம்மா

**ந.காமினி, நாவலர் வீதி**

## முதுகில் சாய்ந்தால்

கருவறையில் சுமந்தாய்
காலமெலாம் மடிமீதும்
இடுப்பிலுமாய் காவியதாய்
முதுகில் சாய்ந்தால் மட்டுமா
பாரமாகிவிடும் அம்மா
ஆண்டவன் போல் நீயும் தான்
அடுக்களையில்
நெருப்பிடையிலும்
குளிர் இதயம் கொட்டும்
பாசப்பரிவு நீ

**கார்வண்ணன்**
**காவலூர்**

## மூன்று

அன்னை எனும்
மூன்றுக்குள்
அடங்கும் அன்பு
பாசம் கருணை
கனிவு பரிவு நலம்
நட்பு பொறுமை
அமைதி ஊற்று
ஊறணிக்குள்
அம்மாவும்தான்
அடங்குவதால்
உலகமே வாழுதம்மா
நிலையாய்

**சாயிபக்திரன்**
**நல்லூர்**

## மௌனத்தின் தேடல்- 526



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## முதல் தெய்வம்

நம் உலகில் பல உறவுகள் இருந்தாலும்
தன் குழந்தையை இப்படி அன்போடு முதுகில்
தாங்கும் முதல் தெய்வம்
சட்டியில் பலகாரம் சுடும் இந்தத் தாயும்
தந்தையும் ஆம் அதைத்தான் நம் ஔவையும்
அன்று சொல்லிச் சென்றாள் உலகில்
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென்று

**சுப்பிரமணியம் ஜெயரூபன், பருத்தித்துறை**

## செல்வம்

அம்மா மடி மஞ்சம் அணைத்திட முதுகு தஞ்சம்
கைபட செல்லக்கதை பகிர்ந்திட வாழ்வில் தாய்க்கேது பஞ்சம்
உதிரத்தை பாலாக்கி ஊட்டி
மனையில் நடமாடும் பெரும் செல்வம்

**ப. திருவரதராசா, மில்வீதி, வவுனியா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று உயிர்களை காவுகொண்ட இடி மின்னல்



தண்ணிமுறிப்பு வயல்வெளியில் மூன்று உயிர்கள் மின்னல் தாக்கி அநியாயமாக இறந்ததை நினைக்கும் போது மனதில் துயரம் சுமையாகியது. வயலுக்கு தண்ணீர் பாய்ச்சி பின் உரமிட வேண்டும் என்ற நினைப்பில் அன்று காலை 10 மணிக்கு இரட்டைச் சகோதரிகளின் இரண்டு கணவர்மார்களும் அவர்களோடு இணைபிரியாத நண்பனும் சென்றிருந்தனர்.

கோடை மழையிருள் எங்கும் சூழ்ந்திருந்த வேளை தண்ணிமுறிப்பை அண்டிய வயல் பிரதேசம் கனத்த மழையை வாங்கி நின்றது.

## யார் அந்த மூன்று உயிர்கள்?

### யோகராசா சுஜீபாகரன்

1977 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இரண்டாம் திகதி பிறந்த இவர் வீட்டின் பொறுப்புக்களை நேர்த்தியாக செய்து முடிப்பார். இவரது துணைவியார் ஓர் ஆசிரியர். இவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். முள்ளிவாய்க்காலில் நச்சுக்காற்றை சுவாசித்ததன் காரணமாக நோய்வாய்ப்பட்டு மூத்த மகனை 2013 ஆம் ஆண்டு இழந்தார். ஏற்கனவே இரண்டு சகோதரர்களையும் நாட்டுக்காக இழந்தார். எட்டு வயது நிரம்பிய மகன் தந்தையை இழந்த சோகத்தில் மூழ்கிப் போயிருக்கிறான்.

### சிவசிதம்பரம் யுகந்தன்

இவர் 1990 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி பிறந்தார். இவருக்கு 2019 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்று பத்து மாதக் குழந்தை உண்டு. இவரது துணைவியார் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் ஆவார்.

### கணபதிப்பிள்ளை மயூரன்

1988 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 28 ஆம் திகதி பிறந்த இவருக்கு எட்டு வயது, இரண்டரை வயது பிள்ளைகள் உள்ளனர். இவரது துணைவியார் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தராகப் பணியாற்றுகின்றார். குடும்பத்தின் பொறுப்புக்களையும் வேலைகளையும் ஆர்வமாக எடுத்துச் செய்பவர்.

தெய்வேந்திரராசா- வசந்தா தம்பதியருக்கு மூன்று பிள்ளைகள். ஒரு பிள்ளை இறுதியுத்தததில் காணாமல் போய்விட்டார். யுகந்தன்- மதனா, மயூரன்- மிதுலா இருவரும் இரட்டைப் பிள்ளைகள். இவர்கள் இருவரின் கணவர்மார் இருவரும் இடி, மின்னல் தாக்கி கடந்த 15 ஆம் திகதி உயிரிழந்துள்ளனர்.

எமது தமிழர் பண்பாட்டில் இறந்தவரை சனிக்கிழமை எடுத்துத் தகனம் செய்யமாட்டார்கள். “சனிப்பிணம் தனிப் பிணமாய்ப்போகாது” என்ற ஐதீகம் எம் மண்ணின் மரபில் மாறாமல்இருந்து வருகிறது. ஆனால் இங்கு யுகந்தனின் பிணத்தைச் சனிக்கிழமையே எடுத்துள்ளார்கள். அந்தளவிற்கு உடல் ஊதியும் துர்நாற்றமும் வீச ஆரம்பித்துவிட்டது.

இறந்த உடல்கள் மறுநாள் இரவு 8.30 மணியளவில்தான் வீட்டாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இங்கு சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளின் நடவடிக்கை தாமதமானதால் வீட்டில் உடல்களை வைத்து அழக்கூட முடியவில்லை.

## என்ன நடந்தது?

காலையில் அண்ணன் எழும்பி வற்றாப்பளையில இருக்கிற வெங்காயக் காணிக்கு தண்ணீர் இறைத்து விட்டு தனது வீட்டிற்கு வந்து சாப்பிட்டு 9.30 மணியளவில் தண்ணிமுறிப்பு வயலுக்கு வெளிக்கிடுகிறார். முதல் நாள் சித்திரை வருடம். அதற்குச் சுட்ட பலகாரங்களுடன் வயலுக்கு வருகின்றார். எனது 3 கண்டம் வயல், அண்ணாட 4 கண்டம் வயல். இந்த ஆண்டு அண்ணாட வயலுக்கு தண்ணி காட்டுற முறை. நான் என்ர வயலில நிண்டனான். அண்ணா எனக்கு ஒரு பத்து மணி போல போன் பண்ணி வா தேத்தண்ணி குடிப்பம் என்றார். நானும் அண்ணாட வயலுக்கு பக்கத்துக் கொட்டிலுக்குப் போய்ச்சேர்ந்து பலகாரங்களும் தேத்தண்ணியும் குடிச்சு சாப்பிடுறம்.

ஒரு 11 மணிபோல மழை சாதுவாகத் தூறுது. நான் மெதுவாக தூற்றலுக்கு நனைந்துகொண்டு என்ர வயலுக்கு ஓடிப்போய் வேலை செய்தன். நான்போனபோது அண்ணா இரண்டு வயலுக்கு தண்ணி பாய்ச்சிட்டாரு. ஒரு மணி தொடக்கம் 2.45 மணிவரை இடி மின்னலுடன் கூடிய கடும் மழை. நான் போனை ஓப் பண்ணி [illegible] மட்டம் தட்டிப் [illegible] வயல் தெரியவே இல்லை. நெஞ்சளவு தண்ணி பாயுது. மழை எல்லாம் விட்டப் பிறகு அண்ணாக்குப் போன் எடுத்தன். போன் ஓப் ஆகி இருந்தது. சிறிது நேரம் கழிச்சு அப்பாக்கும் அண்ணிக்கும் போன் பண்ணிச் சொன்னன் அண்ணாட போன் வேலை செய்யல என்று. சொல்லிட்டு நான் வீட்ட சாப்பிட வந்திட்டன்.

இரவு ஏழு மணிவரை அண்ணாக்கள் விடு திரும்பவில்லை. நான் பிறகு ஓராளையும் கூட்டிக் கொண்டு சீனா வெடிகளும் வாங்கிக் கொண்டு போறம். மூன்று கிலோ மீற்றர் நடந்து தான் வயலுக்குப் போகனும். நடந்து போய் அண்ணாட வயலைச் சென்றடைந்து தேடிப் பார்த்தோம். ஒருத்தரும் இல்லை. சிலவேளை காடு மாறிப் போயிட்டினமோ என்று வெடிகளைக் கொளுத்திப் பார்த்தோம். அதற்கும் ஒருத்தரும் வரவில்லை. பிறகு பக்கத்து வயல் காட்டிற்குப் போனம்.

ஒரு ஐம்பது மீற்றர் துாரத்தில் அண்ணா வீழ்ந்தபடி கை தெரியுது. நான் அங்கு ஓடிப்போனன். அங்கு போனால் மூவரும் உயிரற்று காதாலும் கண்ணாலும் இரத்தம் கசிந்தபடி அங்குமிங்குமாகக் கிடந்தார்கள். மின்னல் தாக்கித்தான் உயிரிழந்துள்ளார்கள் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

அப்போது நேரம் கிட்டத்தட்ட 8.30 இற்கு மேல் இருக்கும். பின்னர் விதானைக்குப் போன் பண்ணி உறவினர்களுக்கும் போன் பண்ணிச் சொன்னன். இதில யுகந்தனின் உடல் வயல் தண்ணிக்குள்ள இருந்ததால் மிகவும் சேதமடைந்திருந்தது. கொட்டிலில் எலி வெட்டினது போல சிறிய அடையாளம் இருக்கிறது. அதில தான் மின்னல் பட்டது தெரியுது என்று சுஜீபாகரனின் சகோதரன் யோகராசா சதீஸ்வரன் தெரிவித்தார்.

தனது கணவன் வருவான் என எதிர்பார்த்தபடி மனைவியும் தந்தை [illegible] காத்திருந்த பிள்[illegible] துயரச் செய்தி காதில் எட்டியதும் துவண்டு போனார்கள். உற்றார், உறவினர்களும் திகைத்துப் போனார்கள். எதிர்பாராத அனர்த்தங்கள் எத்தனை குடும்பங்களின் வாழ்வில் பெரும் பேரிடியாய் விழுந்திருக்கிறது.

இக்குடும்பங்களின் எதிர்காலமென்ன? அனர்த்தங்களுக்கு வலுவான நிவாரணம் கிடைக்குமா? இடி மின்னல் காலங்களில் விவசாயிகளும் பொதுமக்களும் காலநிலைகளுக்கு ஏற்ப இயங்கும்போது உயிரிழப்புக்களில் இருந்து விடுபட முடியும். மின்னல் ஏற்படும் போது இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாட்டை முற்றாகக் குறைத்துக்கொள்வது எமக்கும் மற்றவர்களுக்கும் பயனளிக்கும். அனர்த்த முகாமைத்துவம் சார்ந்த விடயங்களில் அக்கறை காட்டவேண்டும்.

சூம் வகுப்பில் கலந்துகொள்ளும் மாணவர்கள் அவதானமாக இருக்க வேண்டும். குறித்த பிரதேசத்தில் மின்னல் தாக்கம் இருப்பதை ஆசிரியர் அறியமாட்டார். ஆனால் அந்தச் சூழலை எதிர்கொள்கின்ற மாணவர்கள்தான் சூம் வகுப்பிலிருந்து தற்காலிகமாக விலகவேண்டும்.

“எனது இரட்டைப் பிள்ளைகளின் வாழ்வும் போச்சு. ஒரு பெண்பிள்ளையைக் கரைசேர்க்க எவ்வளவு கஷ்டப்படுவோம். இப்பதான் ஒருவாறு இரண்டு பிள்ளைகளையும் கரைசேர்த்திட்டம் என்று பெருமூச்சு விட்டு சந்தோசப்பட்டு ஒருவருட முடிவில இப்படி ஒரு சோக முடிவை விதி தந்திட்டுது. மருமகன் யுகந்தனின் உடலைப் பார்க்கமுடியாது. இருபது மணித்தியாலத்திற்கு மேல் தண்ணீரில் இருந்ததனால் உடல் ஊதிப் போட்டுது என்று தெய்வேந்திரராசா வசந்தா கண்ணீர் மல்க கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடிதாங்கிகள் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. மக்கள் கூடுமிடங்கள், பொது இடங்கள், மின்னல் தாக்கக் கூடிய இடங்களில் இடிதாங்கிகளை அரசாங்கம் அமைக்க வேண்டும். ஆண்டுதோறும் ஏதோவொரு வகையில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுக்கொண்டு மக்கள் இருக்கின்றார்கள். இதில் உடைமைகள், உயிர்கள், வளங்கள் கூட இழக்கப்படுகின்றன. சரியான இடர் முகாமைத்துவம் மூலம் இழப்புக்களைக் குறைக்க முடியும். காலநிலைகளின் அவதானிப்புக்களின்படி செயற்படுவது சிறப்பானதாகும்.

உயிர்கள்ளக் காப்போம். அதற்காக நாம் எம்மிடம் இருக்கின்ற நல்ல சிந்தனைகளை பகிர்வோம். அந்தப் பகிர்வு செயல் வடிவமாக மாறட்டும்.

ஜெயம் ஜெகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் தாண்டவமாடும் -கொரோனா-



ஒரு நாளில் இரண்டே முக்கால் இலட்சத்துக்கும் மேற்பட்ட புதிய நோயாளிகள்... இந்தக் கட்டுரையை நீங்கள் படிக்கும் நேரத்தில் இந்த எண்ணிக்கை இன்னும் கூடியிருக்கலாம். உலகில் கொரோனாவால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட இரண்டு நாடுகள், அமெரிக்கா மற்றும் பிரேசில். அந்த இரண்டு நாடுகளிலும் தினமும் கண்டறியப்படும் புதிய நோயாளிகளைவிட இரண்டு மடங்கு அதிகம் பேர் தினந்தோறும் இந்தியாவில் கொரோனா பாதிப்புக்கு ஆளாகிறார்கள். ஒன்றரை மாத இடைவெளியில், உலகிலேயே மிக மோசமாக பாதிக்கப்பட்ட தேசமாக இந்தியா மாறிவிட்டது. ஆனால், எல்லா உண்மைகளையும் மத்திய அரசு மறைக்கப் பார்ப்பதுதான், நோயைவிடத் தீவிரமான பிரச்சினையாகியுள்ளது.

● இந்தியாவில் இரண்டாவது அலையாக கொரோனா தீவிரம் எடுத்திருப்பதற்கு, அந்த வைரஸ் இரட்டை உருமாற்றம் பெற்றதே காரணம் என்று கூறப்படுகிறது. பீ.1.617 என்று இந்த உருமாறிய கொரோனா வைரஸ் அடையாளப்படுத்தப்படுகிறது. பிரிட்டிஷ் வைரஸ், தென்னாபிரிக்க வைரஸ் போல இது இந்திய வைரஸ். மகாராஷ்டிராவில் அண்மையில் எடுக்கப்பட்ட சுமார் 61 சதவிகித மாதிரிகளில் இந்த உருமாறிய கொரோனா வைரஸ் இருப்பது தெரியவந்துள்ளது. அசோகா பல்கலைக்கழகத்தின் வைரஸ் நிபுணரான டாக்டர் ஷாகித் ஜமீல், 'வுஹானில் ஆரம்பத்தில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ்'க்கும் இதற்கும் 15 வித்தியாசங்கள் இருக்கின்றன. இந்த மாற்றங்கள் அதனை எளிதில் மனித செல்களுக்குள் நுழைபவையாக மாற்றியுள்ளன. அதுவே அதிக தொற்றுக்குக் காரணம்" என்கிறார்.

இந்த உருமாறிய கொரோனா இந்தியாவிலிருந்து பல நாடுகளுக்குப் பரவியுமிருக்கிறது. ஆனால், இது குறித்து வெளிப்படையான தகவல்கள் எதையும் அரசு வெளியிடவில்லை. 'இந்தியாவின் 18 மாநிலங்களில் கவலையளிக்கக் கூடிய புதிய உருமாறிய கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது' என்று மட்டும் சொன்னது மத்திய சுகாதாரத் துறை. வைரஸின் மரபணு இழையை சோதனை செய்து இந்த மாற்றங்களைக் கண்டறிவது வழக்கம். இந்த மாற்றங்களைச் சரியாக அறிந்தால்தான், தடுப்பூசி இதிலிருந்தும் பாதுகாப்பு அளிக்குமா? என்பதைப் புரிந்துகொள்ள முடியும். தேவைப்பட்டால், இதற்கு ஏற்றபடி தடுப்பூசியிலும் மாற்றங்கள் செய்ய முடியும். இந்தியாவில் இந்த சோதனை சரியாகச் செய்யப்படுவதில்லை.

● கொரோனா உச்சம் தொடும் இந்த நேரத்தில், இந்தியாவில் கடுமையான தடுப்பூசிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்தியத் தயாரிப்புத் தடுப்பூசிகளை நம் மக்களுக்குத் தருவதைவிட அதிகமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததே இந்த நிலைக்குக் காரணம். தடுப்பூசிகளை மொத்தமாக மத்திய அரசே வாங்கி, மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கிறது. கடுமையாக பாதிக்கப்பட்ட மகாராஷ்டிரா, சத்தீஸ்கர், டில்லி, தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் தடுப்பூசிக்காகக் கூட்டம் அலைமோதுகிறது. ஆனால், 'ஸ்டொக் இல்லை' என்ற போர்டு பல இடங்களில் தொங்குகிறது. முதல் தவணை தடுப்பூசி போட்டுக்கொண்ட பலர், 'இரண்டாவது தவணை கிடைக்குமா' என அச்சம் கொண்டனர். கிராமப்புறங்களில் இன்னும் நிலைமை மோசம்.

ஆனால், 'இந்தியாவில் தடுப்பூசித் தட்டுப்பாடு இல்லை' என முதலில் மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன் சொன்னார். அடுத்த சில நாட்களில் ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசிக்கு அவசரகால அனுமதி அளித்தது மத்திய அரசு. இன்னும் மூன்று வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்தும் தடுப்பூசிகளைக் கேட்டிருக்கிறது. இதுதவிர, இந்தியாவில் உள்ள மூன்று பொதுத்துறை தடுப்பூசித் தயாரிப்பு நிறுவனங்களுக்கும் நிதியுதவி செய்துள்ளது. இவை எல்லாம் கைக்கு வந்துசேர நீண்ட அவகாசம் பிடிக்கும். இந்த எல்லாவற்றையும் திட்டமிட்டு ஜனவரி மாதமே செய்திருந்தால், இப்போது தடுப்பூசித் தட்டுப்பாடே இருந்திருக்காது என்பதுதான் உண்மை.

● ரெம்டெசிவிர் என்ற மருந்து, தீவிர கொரோனா பாதிப்பிலிருந்து மீள்வதற்கு உதவுகிறது. இதற்கும் கடுமையான தட்டுப்பாடு இருப்பதாகப் பல மாநிலங்கள் கூறின. ஆனால், "அப்படி ஒரு தட்டுப்பாடே இல்லை" என மத்திய சுகாதாரத் துறைச் செயலாளர் ராஜேஷ் பூஷண் சொன்னார். அடுத்த நாளே ரெம்டெசிவிர் தயாரிக்க ஆறு புதிய நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. சில நாட்களிலேயே அதன் ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்தது. என்றாலும் இன்னமும் தட்டுப்பாடு தீரவில்லை.

இந்த மருந்தை விற்கும் ஏழு நிறுவனங்களிடம் பேசி, இதன் விலையையும் கணிசமாகக் குறைத்தது மத்திய அரசு. ஆனால், பிளாக் மார்க்கெட்டில் அதிக விலைக்கு இது விற்கப்படுவதாகப் புகார்கள் உள்ளன.

● ஒட்சிசன் விவகாரத்திலும் இதேபோன்ற குரல்தான் மத்திய அரசிடமிருந்து எழுந்தது. ஒட்சிசன் பற்றாக்குறையால் நிறைய மருத்துவமனைகள் நோயாளிகளை அட்மிட் செய்ய மறுத்தன. ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்பட்டு சில மருத்துவமனைகளில் கொரோனா நோயாளிகள் இறந்த துயரங்களும் நிகழ்ந்தன. ஆனால், "இந்தியாவில் ஒட்சிசன் தட்டுப்பாடு இல்லை" என வழக்கம் போல அறிவித்தார் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன். அடுத்த சில நாட்களில், 50,000 மெற்றிக் தொன் ஒட்சிசனை இறக்குமதி செய்வதாக அறிவிப்பு வந்தது. தொழிற்சாலைகளுக்கான ஒட்சிசன் சப்ளையைக் கட்டுப்படுத்தி, மருத்துவத் தேவைகளுக்குத் திருப்பிவிட்டது.

● மருத்துவமனைகள் நிரம்பிவழிவதால், நோயாளிகளுக்கு இடம் கிடைப்பதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது. கர்நாடக முன்னாள் முதல்வர் குமாரசாமிக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டது. அவருக்கு பெங்களூர் மணிப்பால் மருத்துவமனையில் இடம் கிடைக்கவில்லை. "சமூகத்தில் செல்வாக்கான மனிதர்களுக்கே இந்த நிலைமை என்றால், ஏழைகளின் நிலைமை என்ன என்று சொல்ல வேண்டியதில்லை" என குமாரசாமியின் சட்டத்தரணி கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். இந்தியா முழுக்க இருக்கும் சூழலுக்கு இது ஒரு சோற்றுப் பதம்.

தற்காலிக மருத்துவமனைகளை உருவாக்குவதில் கடந்த ஆண்டு போல இம்முறையும் வேகம் காட்ட அரசுகள் தவறிவிட்டன என்பதே உண்மை.

●எல்லாப் பற்றாக்குறைகளையும் மறுத்தது போலவே மரணங்களை மறைக்கும் கொடுமையும் நிகழ்கிறது. உத்தரப்பிரதேசத்தில் மைதானங்களில் சடலங்களை எரியூட்டுகிறார்கள். இதை மற்றவர்கள் கண்பார்வையிலிருந்து மறைக்க, தகரத் தடுப்புகள் வைத்திருக்கிறார்கள். குஜராத் மாநிலம், அங்கு கடந்த ஏப்ரல் 16 ஆம் திகதி வெறும் 78 மரணங்களே கொரோனாவால் நிகழ்ந்ததாகப் புள்ளிவிபரம் தந்தது. ஆனால், குஜராத்தின் ஏழு மாநகரங்களில் மட்டுமே அன்று 689 சடலங்கள் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளின்படி எரிக்கப்பட்டன. சூரத் போன்ற பல நகரங்களின் மின்மயானங்களில் தொடர்ச்சியாக சடலங்கள் எரிக்கப்படுவதால் சூடு தாங்காமல் மயான இரும்புக்கம்பிகளே உருக்குலைந்து போயிருக்கின்றன. குஜராத் உயர்நீதிமன்றம் இதுதொடர்பான வழக்கைத் தானாகவே எடுத்து, "என்ன சூழல் என்பதை வெளிப்படையாகச் சொல்லுங்கள். உண்மைகளைச் சொல்வதில் உங்களுக்கு என்ன தயக்கம்?" என மாநில அரசைக் கேட்டிருக்கிறது.

● கொரோனாவைத் தடுக்கும் சமூகத் தடுப்பூசி, முகக்கவசமும் தனிமனித இடைவெளியும்தான். ஆனால், இந்த எதையும் பின்பற்றாமல் ஐந்து மாநிலங்களில் தேர்தல்கள் நடைபெற்றன. இதுபற்றி மருத்துவர்களும் சமூக ஆர்வலர்களும் கேள்வி எழுப்பியபோது, 'தேர்தலே நடக்காத மாநிலங்களில்தான் தொற்று அதிகம்' என மகாராஷ்டிரா, சத்தீஸ்கர் மற்றும் டில்லி புள்ளிவிபரங்களைக் காட்டினார்கள் பா.ஜ.கவின் ஐ.டி பிரிவினர். தொழில் மயமான மாநிலங்களில் வெளித்தொடர்புகள் அதிகம். அதனால் தொற்று பரவவும் வாய்ப்புகள் அதிகம். தமிழகமும் குஜராத்தும் அதனால்தான் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், கூட்டம் சேர்ப்பதை இதை வைத்து நியாயப்படுத்துவது சரியா?

ஒரு பெருந்தொற்றுக் காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்பதையும், என்னவெல்லாம் செய்யக் கூடாது என்பதையும் கடந்த ஆண்டு கொரோனா நாட்களிலும் ஊரடங்கு காலத்திலும் கற்றுக்கொண்டோம்; ஊரடங்கு எளிய மக்களின் வாழ்வில் எப்படிப்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்தியது என்பதையும் கண்டோம். மீண்டும் அப்படிப்பட்ட ஒரு சூழல் ஏற்படாமல் தடுக்க வேண்டியது அரசின் கடமை. அதிலிருந்து தவறுவதும், தங்கள் தவறுகளை மறைப்பதும் கொரோனாவை அடக்க ஒரு போதும் உதவாது.

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது சாதனை?

சாதிக்க வேண்டும் என்று நினைப்பது தவறில்லை. ஆனால், அது எப்படிப்பட்ட சாதனை என்பதில் மட்டும் தெளிவு இருக்க வேண்டும். உதாரணமாக, ஜப்பானைச் சேர்ந்த தாகேரு கோபயாஷியை (Takeru Kobayashi) எடுத்துக்கொள்வோம். இவர் 2014 ஆம் ஆண்டு, கனடாவில் நடந்த பீட்ஸா சாப்பிடும் போட்டியில் 62 ஸ்லைஸ் பீட்ஸாக்களை 12 நிமிடங்களில் தின்று தீர்த்திருக்கிறார்.

இவரைப்போலவே, வெகு நீளமாக தாடி வளர்த்து, மீசை வளர்த்து, நகம் வளர்த்து கின்னஸ் சாதனை படைத்தவர்களும் உண்டு. அதேநேரத்தில், உலகில் வளர்ச்சி அடையாத நாடுகளிலிருந்து வந்து ஒலிம்பிக் போட்டிகளில் சாதித்து தங்கள் நாட்டுக்குப் பெருமை சேர்த்தவர்களும் உண்டு. ஆக, எதில் சாதனை புரிகிறோம் என்பது முக்கியம்!

இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேச மொழிக் கதை இது...

ஒரு சீடன் குருவைத் தேடி வருகிறான். முகமெல்லாம் பரவசம். குரு கேட்கிறார்...

"என்னப்பா இவ்வளவு சந்தோஷம்...?"

"நான் பதினாலு வருஷம் தவம் செஞ்சதுக்கு எனக்கு ஒரு சித்தி கிடைச்சிருக்கு"

"அப்படியா... என்ன அது?"

"தண்ணியில நடக்குற சித்தி. நம்ம ஊரு ஆற்றை தண்ணி மேல நடந்தே கடந்துடுவேன்."

இதைக் கேட்டு குரு புன்முறுவல் பூத்தார். "ஏம்பா... இதுக்குப் போய் ஏன் பதினாலு வருஷம் தவம் இருக்கணும். பத்து ரூபா கொடுத்தா ஓடக்காரன் அக்கரைக்குக் கொண்டுபோய் சேர்த்துடப் போறான்." குருவின் பதிலைக் கேட்டு விதிர்விதிர்த்துப் போனான் சீடன்.

ஆக, சாதனை என்பதன் ஆரம்பப்புள்ளி நம் விருப்பத்திலிருந்தே ஆரம்பிக்கிறது. மற்றவர்களுக்குப் பயனளிக்கும் என்றால்தான் அது சாதனை, மற்றபடி அது சுயநலம், சுயதம்பட்டம்.

ஒரு சீன நாடோடிக்கதை. ஒருவன் தன் நண்பனையும், தான் வளர்க்கும் நாயையும் அழைத்துக்கொண்டு ஏரிக்கரைக்குப் போனான். தன் கையிலிருந்த பந்தை ஏரியை நோக்கி விட்டெறிந்தான்.

அவனுடைய நாய் தண்ணீரின் மேல் ஓடிப் போய் அந்தப் பந்தை தன் வாயில் கவ்விக்கொண்டு வந்தது. மறுபடியும் அவன் பந்தை எறிந்தான். நாய் தண்ணீரின் மேல் நடந்து போய் அந்தப் பந்தை எடுத்து வந்தது. நண்பன் சொன்னான்:

"அடடா... உன் நாய் என்ன பிரமாதமா தண்ணி மேல நடக்குது..."

இவன் சொன்னான்... "நீ வேற... அந்த நாய்க்கு நீந்தத் தெரியலை!"




## நீங்களும் எழுத்தாளரே!

உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்.

• அரசியல் • ஆன்மிகம் • பொழுதுபோக்கு • "வியாசர்" கேள்விகள்
• வாழ்வில் மறக்க முடியாத விடயங்களை எழுதுங்கள்.

தரம் கண்டு பிரசுரிக்கப்படும். "உங்களை உலகறிய செய்கிறோம் நாம்"

முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.
சிறு "பத்தி" எழுத்துக்கள் வரவேற்கத்தக்கது.

ஆசிரியர், வலம்புரி,
இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


# கேக் என்றால் நம்புவீரோ?



இது வைரல் யுகம். எந்த நேரத்தில் எது வைரலாகும் என்றே தெரிவதில்லை. இப்போது ஹைப்பர் ரியல் கேக் டிரெண்டிங்கில் இருக்கிறது. பிரிட்டனில் உருவான இந்த கேக் பற்றித்தான் வலைத்தளமெங்கும் கமெண்ட்டும் எமோஜிக்களும் சுழன்று கொண்டிருக்கின்றன. மருத்துவமனையின் படுக்கையொன்றில், நோயாளிக்கான உடையுடன் ஆண் ஒருவர் சிரித்த முகத்துடன் படுத்துக்கொண்டிருக்கிறார். இது முதல் படம். அடுத்த படத்தில் அவருடைய கால்கள் துண்டு துண்டாக வெட்டப்பட்டிருக்கின்றன. மூன்றாவது படத்தில் அந்த ஆணின் வலது கை குளோசப்பில் காட்டப்பட்டிருக்கிறது. நான்காவது படத்தில் அந்தக் கை துண்டு துண்டாக இருக்கிறது. இந்தப் படங்களை சமூக வலைத்தளத்தில் "ஆமாம் இதுவொரு கேக்தான்" என்ற வார்த்தைகளுடன் பகிரப்பட்டிருக்கிறது. "மைகாட். இதை என்னால நம்பவே முடியல", "இது நிஜமாவே கேக்தானா", "பயங்கரமா இருக்கு" என்பது போன்ற பின்னூட்டங்களுடன் இந்த ஹைப்பர் ரியல் கேக் வைரலாகிக்கொண்டிருக்கிறது.

தூத்துக்குடியைச் சேர்ந்த கேக் ஆர்ட்டிஸ்ட் திவ்யா, "நானும் அந்த ஹைப்பர் ரியல் கேக்கைப் பார்த்தேன். முன்பெல்லாம் கேக்கில் விதவிதமான ஃபிளேவர்ஸ்தான் வரும். இப்போது ரியல் கேக்ஸ் ரொம்ப பிரபலமாகிட்டு வருது. உதாரணத்துக்கு, உங்க கல்யாண நாள் ஏப்ரல் 12 ஆம் திகதின்னா, அந்த மாசத்துக்கான கலண்டர் ஷேப்லேயே கேக் செய்வோம். இந்த ஹைப்பர் ரியல் கேக் இப்போ டிரெண்டிங்ல இருந்தாலும், கடந்த சில மாசங்களா பினாட்டா (Pinata) கேக்ஸ்தான் கஸ்டமர் மத்தியில அதிகமா விரும்பப்பட்டு வருது. இந்தக் கேக்கை கத்தியால கட் பண்ணிப் பார்த்தா அதுக்குள்ள சர்ப்ரைஸ் கிஃப்ட் இருக்கும். சில மனைவிகள் தங்களோட கர்ப்பம் உறுதியான பிரக்னென்ஸி கிட்டை கேக் உள்ளே வைச்சு கணவருக்கு சர்ப்ரைஸ் பண்றாங்க.

தவிர, வளைகாப்புக்குக் குழந்தையின் பின்பக்கம் மாதிரி கேக்கை செஞ்சு, அதுல இருந்து க்ரீம் வழியற மாதிரி பரிசு கொடுக்கிறாங்க. இன்னும் சிலர் ஹைப்பர் ரியல் கேக்குல வெஸ்டர்ன் டாய்லெட் மாதிரியெல்லாம் செய்யுறாங்க. சிலது கற்பனைத் திறமையோட பார்த்தவுடனே சாப்பிடத் தோணும். சிலது "உவ்வே" சொல்ற மாதிரியும் இருக்குது என்கிறார்.

இதுமாதிரியான கேக்குகள் உடனடியாக கவனத்தை ஈர்த்து வைரலானாலும் சாப்பிடும் உணவுப்பொருள்களில் ஒரு எல்லைக்கு மேல் சென்று, இப்படி முகம் சுளிக்கும் விடயங்களை செய்வது சரியல்ல என்றும் இந்த ட்ரெண்டிற்கு கமெண்ட்கள் வந்தவண்ணம் இருக்கின்றன.

# பசுமையான நினைவுகளின் தேடலே... நம் பாடசாலை நாட்கள்

காலை தினமும் காவலாளிக்கு தலை அசைத்துவிட்டு சிறைக்குள் செல்லும் கைதியாய் கம்பிக் கதவை தாண்டியவுடன் "கணீர்" என ஒலிக்கும் மணியும் எனக்கு நண்பன்தான். சில படிகள் தாண்டி ஒரு வகுப்பை கடந்த உடன் பூட்டி வைத்த பங்களாவை திறந்து ஓடும் சுண்டெலிகளாக வணக்கம் சொல்லிவிட்டு செல்லும் சிலர் நான் முகத்திற்கு பவுடர் பூசுவதில்லை என நினைத்து நான் வரும் சமயம் கரும்பலகை துடைப்பானை சுவரில் அடிக்கும் சிலர், கூட்டுமுறை என கூட்டிவிட்டு நான் வந்து குப்பை அள்ள காத்திருக்கும் சிலர், சாப்பாட்டுப் பெட்டியுடன் பழைய கதைகளை சுவாரசியமாக பேசும் சிலர் என பலரைக்கடந்து என் கதிரையில் புத்தகப்பையை வைத்துவிட்டு திரும்பும்போது மாணவி பிரதித் தலைவி என்ன, கடமைக்கு செல்லவில்லையா? எனக் குரல் கொடுத்தவுடன் நான் விரும்பி ஏற்ற சின்னத்தை மாட்டிக்கொண்டு என் கடமைக்கு போனால் அன்றைய விடியல் அமோக வரவேற்புத்தான் எனக்கு. அங்கு ஒரு தொலைக்காட்சி நாடகமே ஓடும். எல்லாவற்றையும் அடக்கி முடிப்பதற்குள் நான் ஆரம்பத்தில் சொன்னேனே என் நண்பன் "மணி" என்று அவன் "கணீர் கணீர்" என ஒலித்துவிடுவான். இங்கு தான் அவனுக்கு என் மேல் என்ன ஆத்திரமோ? தொடங்கிவிடும் எனக்கு அங்கு பாடம், ஆயிரம் தான் இருந்தாலும் ஊருக்கு புலியாய் இருந்தாலும் வீட்டுக்கு எலிதானே என்பது உண்மைதான். பாவம் என்ன செய்வது என்று தெரியாமல் சோடி சேர்ந்து வகுப்பிற்குள் சென்று குழுவாக மாட்டி அதை சமாளித்துவிட்டு நிம்மதியாக அமரப்போகும் போது ஐயோ! நான் என்னதான் செய்வேன்...என் அன்னை கிள்ளிய நாட்களை விட அந்தக் கதிரை கிள்ளிய நாட்கள் தான் அதிகம். இப்படி பல சுமைகளை தாங்கிக் கொண்டு என் சக மாணவிகளை பார்க்கும் போது அந்த நாளே இறந்து போய்விடும் நாங்கள் 24 பேரும் 24 மணித்தியாலம் போல் இருப்போம்.

நிருஷினி கியூபேட் ஆனந்தராஜன்
சிறாம்பியடி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிவரை இளவரசர்

பிரிட்டிஷ் மகாராணிக்குக் கணவராக இருந்தும் அவரை 'மன்னர்' என்று அழைக்க சட்டம் இடம் தரவில்லை. 'எடின்பரோ கோமகன்' என்பது அவருடைய இன்னொரு பட்டம். இங்கிலாந்தின் எலிசபெத் மகாராணியின் கணவர் இளவரசர் பிலிப், கடந்த 9 ஆம் திகதி லண்டன் அருகேயுள்ள வின்ட்சர் கோட்டையில் காலமானார்.

இளவரசர் பிலிப்பின் உடல், கடந்த 17 ஆம் திகதி புனித ஜோர்ஜ் தேவாலயத்தின் "ரோயல் வோல்ட்" பெட்டகத்தில் முறைப்படி இறுதிச் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவருக்கு வயது 99. அவர்களது திருமண வாழ்க்கைக்கு வயது 73. மிக நீண்ட காலம் காதல் உணர்வு மங்காமல் இணைந்து வாழ்ந்த பிரிட்டிஷ் அரச குடும்பத் தம்பதி அவர்கள்தான்!





கொரோனாக் கட்டுப்பாடுகள் காரணமாக சுமார் 30 பேர் மட்டுமே இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ளமுடியும் என்ற நிலை. பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜோன்சன் கூட கலந்து கொள்ளாத ஒரு சாதாரண குடும்ப நிகழ்வாக இளவரசர் பிலிப்பின் இறுதிச் சடங்குகள் நடக்கின்றன.

பல நிகழ்ச்சிகளை (சில நெடுந் தொடர்கள் உட்பட) ரத்து செய்து அரச குடும்பம் பற்றியும் இறந்த இளவரசர் பிலிப் பற்றியும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பியதால் முக்கிய தொலைக்காட்சி நிறுவனமான பி.பி.சிக்குப் புகார்கள் குவிந்துள்ளன. அரச குடும்ப ஆதரவாளர்கள் மற்றும் எதிர்ப்பாளர்கள் என இரு பிரிவாய் பெரியதொரு டுவிட்டர் யுத்தமும் நடந்தது.

எலிசபெத் பிரிட்டிஷ் மகாராணி ஆனதே தனிக்கதை. இங்கிலாந்து மன்னரான எட்வர்ட், விவாகரத்தான அமெரிக்கப் பெண் வாலிஸ் சிம்ப்சனைக் காதலித்தார். அவரைத் திருமணம் செய்வதற்காகத் தன் அரசர் பதவியைத் துறந்தார். மன்னர் எட்வர்ட் பதவியைத் துறந்ததால், அவரின் தம்பி ஜோர்ஜ் பிரிட்டிஷ் அரசரானார். ஜோர்ஜ் காலமானவுடன் எலிசபெத் 1953இல் மகாராணியானார். அப்போது அவரது வயது 27.

மன்னர் ஜோர்ஜின் இறுதிச் சடங்கிற்கு வாலிஸ் சிம்ப்சன் வரவில்லை. முன்னாள் மன்னரான எட்வர்ட் மட்டுமே வந்தார். இன்றைக்கு சில முரண்பாடுகள் காரணமாக அமெரிக்காவில் வசிக்கும் இளவரசர் பிலிப்பின் பேரனும் டயானாவின் மகனுமான ஹாரி மட்டுமே வரவிருக்கிறார். அவரின் மனைவியும் அரச குடும்பத்தின் இன்னொரு அமெரிக்க மருமகளுமான மேகன் வரப்போவதில்லை. 'மேகன் கர்ப்பமாக இருக்கிறார். தவிர, மருத்துவர்கள் ஆலோசனைப்படி அவர் நீண்ட பயணம் மேற்கொள்ளமுடியாது' என்று காரணம் சொல்லப்பட்டாலும், சரித்திரம் திரும்புகிறது என்றே சொல்லவேண்டும்.

கிரேக்க நாட்டின் அரச குடும்பத்தில் பிறந்தவர் இளவரசர் பிலிப் என்றாலும், கிரீஸ் நாட்டிலிருந்து அவரது குடும்பம் வெளியேற்றப்பட்டதால், நாடும் அதிகாரமும் இல்லாத இளவரசராக தன் பாட்டி வீடான இங்கிலாந்து அரச குடும்பத்திற்கு வர நேரிட்டது. விடுதியில் தங்கிப் பள்ளிப் படிப்பை முடித்த பின்னர் இங்கிலாந்துக் கடற்படை அகடமியில் சேர்ந்தார்.

இந்தியாவின் முதல் ஆளுநர் ஜெனரலாக இருந்த மௌண்ட்பேட்டன், இளவரசர் பிலிப்பின் மாமா. அவர் ஏற்பாடு செய்த ஒரு நிகழ்வின்போது அன்றைய இளவரசி எலிசபெத்தை பிலிப் சந்திக்க நேர்ந்தது. 13 வயதுச் சிறுமியாக இருந்த எலிசபெத், பிலிப்மீது காதல் வயப்பட்டார். பிலிப்பின் புகைப்படம் ஒன்றைத் தன் கட்டிலுக்கு அருகே வைத்துக் கொண்டு எப்போதும் அதைப் பார்த்தபடி இருந்தார்.

18 வயதில் தன் காதலை அவர் சொன்னபோது, அரச குடும்பத்துக்கு அதிர்ச்சி. முரட்டுத்தனம் நிரம்பிய இளைஞராகக் கருதப்பட்ட பிலிப்பை மருமகனாக ஏற்பதற்கு மன்னர் ஜோர்ஜ்'க்குத் தயக்கம். எலிசபெத் உறுதியாக இருந்ததால், 1947இல் திருமணம் நடந்தது. அப்போது எலிசபெத்துக்கு வயது 21.

திருமணம் முடிந்ததும், மால்டா நாட்டில் பிரிட்டிஷ் கடற்படைப் பணியைச் செய்வதற்குக் கிளம்பினார் பிலிப். ஒரு சாதாரண குடும்பத் தலைவியாக அவருடன் சென்றார் எலிசபெத். ஆறே ஆண்டுகளில் மன்னர் ஜோர்ஜ் மரணமடைய, எலிசபெத் மகாராணி ஆனார்.

பல எதிர்ப்புகளுக்கு இடையில் அவரின் முடிசூட்டு விழா தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டதில் இளவரசர் பிலிப்புக்கு பெரும்பங்கு உண்டு. பிரதமர் சர்ச்சிலுக்கும் அதில் விருப்பமில்லை.

ஆனால் அந்தக் காலகட்டத்தில் கனடா உட்பட பிரிட்டனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பல நாடுகளில் இலட்சக்கணக்கான மக்களால் அந்த விழா பார்த்து ரசிக்கப்பட்டது. பின்னர், 1960களில் இளவரசர் பிலிப் எடுத்த முயற்சியின் காரணமாக ஒரு தொலைக்காட்சிக் குறும்படம் தயாரிக்கப்பட்டது.

அரண்மனைவாசிகளான அரச குடும்பத்தினரும் சாதாரண மக்கள் போல் வாழ்கின்றனர் என்பதைச் சொல்ல வந்தது இந்தப் படம். ஆனால், அது உருவாக்கிய சர்ச்சைகளினால் மறு ஒளிபரப்பிற்குத் தடை விதிக்கப்பட்டது.

பிரிட்டன் அரச குடும்பத்தில் சர்ச்சைகளுக்கும் சண்டைகளுக்கும் குறைவே இல்லை. சார்லஸ்-டயானா விவாகரத்து, கமீலாவுடனான சார்லஸின் காதல் மற்றும் மறுமணம், பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளான இளவரசர் ஆண்ட்ரு, விவாகரத்தான அமெரிக்க நடிகையான மேகனும் இளவரசர் ஹாரியும் திருமணம் செய்துகொண்டது, அரச குடும்பத்தின் கட்டுப்பாடுகளும் நெருக்கடிகளும் தாங்க முடியாமல் ஹாரி இளவரசர் பட்டத்தைத் துறந்து அமெரிக்கா சென்று குடியேறியது என இன்று வரை சர்ச்சைகள் ஓயவில்லை.

'ஜனநாயகம் கொடிகட்டிப் பறக்கும் இந்த 21ஆம் நூற்றாண்டில் எதற்கு அரச குடும்பம், எதற்கு மக்களின் வரிப்பணம் அவர்களுக்குச் செலவு செய்யப்பட வேண்டும்' எனக் கேள்வி கேட்கும் ஒரு பகுதியினர், கடவுளுக்கு சற்று அருகே அவர்களை வைத்துப் பார்க்கும் மற்றொரு பகுதியினர் என பிரிட்டன் மக்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

சில வருடங்களாக நெட்ஃபிளிக்ஸில் பிரபலமான தொடர் 'கிரௌன்.' பிரிட்டன் அரச குடும்பக் கதை. மன்னர் எட்வர்ட் முடிதுறத்தல், மன்னர் ஜோர்ஜ் பதவியேற்பு, அவரது மரணம், எலிசபெத் மகாராணியாகப் பதவியேற்றது, இளவரசி டயானா மரணம், அரச குடும்பம் மற்றும் அரசியலில் ஏற்படும் சிக்கல்கள், சர்ச்சைகள் என விறுவிறுப்பான பல நிஜ சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட கதை. அரச குடும்ப ஆதரவாளர்கள் மற்றும் எதிர்ப்பாளர்கள் இடையே தத்தம் ஆதரவு மற்றும் எதிர்ப்பை இன்னும் உறுதிப்படுத்திக்கொள்ளும் விதமாய் இந்தத் தொலைக்காட்சித்தொடர் அமைந்தது.

'சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியம்' எனப் பேசப்பட்ட பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் அதிகாரம் கண்ணெதிரே காணாமல்போனது உட்பட பல சரித்திரச் சம்பவங்களுக்கு சாட்சியாய் இருந்த பிலிப், கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு (99 வருடங்கள்) வாழ்ந்து கடைசிவரை இளவரசராகவே இருந்து விடைபெற்றிருக்கிறார்.

ஒருபுறம் அவருடைய மரணத்திற்கு அனுதாபச் செய்திகள் குவிய, மறுபுறம் அவருடைய நக்கல் மற்றும் இனவெறித்தனமான பல பேச்சுகள் நினைவுகூரப்பட்டு விமர்சனத்துக்குள்ளாகியுள்ளன.


அவர்மீது ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம். இருப்பினும் வெற்றிகரமான எலிசபெத் மகாராணி என்ற பெண்ணுக்குப் பின்னால் 'உண்ணும் உணவு, பருகும் நீர், உண்ணும் சாண்ட்விச் எல்லாம் எலிசபெத்' எனத் தன்னையே ஒப்புக் கொடுத்தார் என்ற பெயரே நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## தோப்பில் தெரிந்த தீபம்

காலத்தின் பதிவு 67



சாண்டில்யன்

“ஆம்”

“அதன் தலைவனிடம் இருபது புரவிகள் வாங்கப் போகிறோம்.”

“அரசர் குதிரைச் சாலையில் புரவி விற்கிறார்களா?”

“இல்லை. விற்பதில்லை”

“பின் எதற்கு இருபது புரவிகள்?”

“மாற்றித் தர”

இதைக் கேட்ட காவலன் விவரம் புரியால் விழித்தான். அவன் விழிப்பதைப் பார்த்த அமீர், “குதிரைச் சாலையிலுள்ள புரவிகள் சில பயனற்றுவிட்டன. நாளை அரபு நாட்டுக் கப்பல் ஒன்று புரவிகளுடன் வருகிறது. அவற்றில் வரும் புரவிகளுக்கு இவற்றை மாற்ற வேண்டும். இதைப்பார்” என்று மேலும் இரண்டு ஓலைகளை எடுத்து அமீர் காவலர் தலைவனிடம் சமர்ப்பித்தான்.

அந்த ஓலைகள் இரண்டிலும் பாலூர் அரண்மனைக் குதிரைச் சாலைத் தலைவனின் கையொப்பம் இருந்ததையும் அமீர் சொன்ன செய்திக்கும் அவற்றிலிருந்த விபரத்துக்கும் மிகுந்த பொருத்தமிருந்ததையும் கவனித்த காவலர் தலைவன் அவர்களிருவரையும் அதற்கு மேல் கேள்விகள் கேட்காமல் அரச விடுதிக்கும் செல்ல அனுமதித்தான். வீதிக்குக் குறுக்கேயிருந்த காவல் தடை நீங்கிப் புரவிகள் அரச வீதிக்குள் நுழைந்ததும், “அப்பாடா!” என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட அநபாயன், “அமீர்! அந்தச் சீலையைப் பற்றி என்னிடம் ஏதும் சொல்லவில்லையே!” என்று வினவினான்.

“அநபாயரே! அரபு நாட்டிலிருந்து சீனம் சென்று, அங்கிருந்து கலிங்கம் வந்து வாணிபம் செய்தும் நான் வாழ்க்கையில் எத்தனை சோதனைகளிலிருந்து தப்பியிருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே சதா ஏதாவது இடுக்கண்களையே எதிர்பார்க்கிறேன். அதற்கு அவ்வப்பொழுது வேண்டிய பாதுகாப்புகளையும் செய்து கொள்கிறேன். சீலையும் ஓலைகளும் அத்தகைய பாதுகாப்புக் கருவிகள். ஆனால்..” என்று இழுத்தான் அமீர்.

“என்ன ஆனால்?”

“ஓலையிலிருந்த கையெழுத்துகள் குதிரைச் சாலைத் தலைவனுடையதல்ல.”

“வேறு யாருடையது?”

“அடியேனுடையதுதான்.”

அநபாயன் பிரமித்து அமீரை நோக்கினான். “கையெழுத்துப் பொய்யென்று கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்?” என்று வினவினான்.

“என் சக்தியில் அநபாயருக்கு நம்பிக்கையில்லை போலிருக்கிறது. அவசியமானால் கலிங்கத்துப் பீமன் கையெழுத்தைக்கூடப் போட என்னால் முடியும். தேவையில்லாததால் போடவில்லை என்று அடக்கத்துடன் பதில் கூறினான் அமீர்.

மிகுந்த ஆபத்து சூழ்ந்து கிடந்த அந்த நிலையிலும் சற்று இரைந்தே நகைத்துவிட்ட அநபாயன் மேற்கொண்டு ஏதும் கேள்வி கேட்காமல் அமீரைத் தொடர்ந்தான். அநபாயனைப் பின்னால் வரச்சொல்லி முன்னால் தன் புரவியைச் செலுத்திய அமீர், அரச வீதியின் நடுவுக்கு வந்ததும் அங்கிருந்த அரச மாளிகையின் கிழக்கு வாயிலுக்குள் நுழைந்தான். ஒவ்வோர் இடத்திலும் காவலரால் தேக்கப்பட்டாலும் உத்தரவுச் சீலையின் மந்திரத்தால் காவலர் பணிந்து விட அரண்மனையைச் சுற்றிச் சென்ற அமீர் அரண்மனையின் பின்புற வாயிலையும் கடந்து அதற்கு நேர்ப் பின்னாலிருந்த பெரும் தோப்பிற்கு வந்து சேர்ந்தான்.

சந்திர வெளிச்சத்தில் பிரம்மாண்டமான அந்தத் தோப்பு மிகவும் கவர்ச்சியாகத் தெரிந்தது. தோப்பைச் சுற்றியிருந்த பெரும் மதிலுக்கு முன்புறத்தில் காவல் இல்லையென்றாலும் அதன் வாயிலுக்குப் பின்னால் இரண்டு வீரர்கள் காவல் புரிவது அவர்கள் எச்சரிக்கைக் கோஷங்களிலிருந்தே புரிந்தது. அந்தக் கோஷத்தைத் தூக்கியடித்துக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான புரவிகளின் கனைப்புச் சத்தம் வீரனான அநபாயன் காதுக்கு ரம்மியமாயிருந்தால் அவன் மனதிலிருந்த ஆபத்து, கவலை முதலியன மறைந்து அவை இருந்த இடத்தில் பெரும் இன்பம் புகுந்து கொண்டது. ‘பல சாதிக் குதிரைகள்! பல நாட்டுக் குதிரைகள்! எத்தனை விதம்! எத்தனை ரகம்! எத்தனை விதமான கனைப்புகள்! எத்தனை விதமான உடற்கட்டுகள்! இத்தனை வித்தியாசத்திலும் புரவியென்ற ஒரு பொதுச் சாதிதானே இருக்கிறது. ஈசுவர சிருஷ்டியில் எது பொது? எது தனி? அப்பப்பா! என்ன விந்தை!’ என்று சிந்தித்துக்கொண்டே அமீரைத் தொடர்ந்தான் அநபாயன்.

அமீர் குதிரைச் சாலைத் தோட்டத்தின் அந்தப் பெருவாயிலைக் கண்டதுமே சிறிது ஏதோ சிந்தித்தான். பிறகு தலையை வேண்டாமென்பதற்கு அறிகுறியாக ஆட்டிவிட்டு மதிலை வலப்புறமாகச் சுற்றிச் சென்று ஒரு சிறு திட்டி வாசலுக்கு வந்து புரவியிலிருந்து கீழே குதித்து அநபாயனையும் இறங்கச் சொன்னான். அவன் சொற்படி அநபாயன் இறங்கச் சொன்னான். அவன் சொற்படி அநபாயன் இறங்கியதும், “அநபாயரே! இனிமேல் தான் நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இந்தக் குதிரைச் சாலைகூடக் கண்காணிப்பில்தான் இருக்கும் என்று நினைக்கின்றேன்” என்று அமீர் எதிரேயிருந்த திட்டிவாசலை நோக்கி மெள்ள நடந்தான். மெள்ளத் திட்டி வாசற் கதவில் காதை வைத்துச் சில விநாடிகள் உற்றுக் கேட்டான், பிறகு அந்த வாயிற்கதவை மும்முறை லேசாகத் தட்டினான்.

சிறிது நேரம் பதில் ஏதுமில்லை. ஆளரவமும் கேட்கவில்லை. அநபாயன் மனதிலும் மெள்ள மெள்ளச் சந்தேகம் எழுந்தது. “குதிரைகளின் இந்தக் கனைப்பில் நீ மெள்ளத் தட்டியது யாருக்குக் காது கேட்கும்” என்றும் வினவினான்.

“சற்றுப் பொறுங்கள் அநபாயரே!” என்ற அமீர் திட்டி வாசலின் கதவிடுக்கின் மூலமாக உள்ளே நோக்கிவிட்டு அநபாயனையும் அழைத்து “இதோ பாருங்கள்” என்றான்.

திட்டிவாசற் கதவின் பலகைகள் இடங்கொடுத்த இடத்தில் ஒரு கண்ணை வைத்து உள்ளே நோக்கினான் அநபாயன். தூர இருந்த மாளிகையின் வாசலில் திடீரென இரண்டு தீபங்கள் தெரிந்தன. அவற்றிலொன்று திட்டி வாசலை நோக்கி நகரவும் தொடங்கியது.

### பரிசுகள் இருபது

தெங்கலிங்கத்து மன்னன் அரண்மனைக்கு நேர்ப் பின்புறத்திலிருந்த குதிரைச் சாலைத் திட்டிவாசல் கதவிடுக்கு வழியாகத் தூரத்தே தீபங்கள் இரண்டு தெரிந்ததையும் அந்தத் தீபங்களில் ஒன்று தாங்கள் இருந்த இடத்தை நோக்கி நகரத் தொடங்கியதையும் கண்ட அநபாயன் பெரும் ஆச்சரியத்திற்குள்ளாகிக் கதவிடுக்கிலிருந்து கண்ணை எடுத்துத் தலை நிமிர்ந்து உள்ளேயிருந்த வியப்பு முகத்திலும் ஒளிவிட அமீரை நோக்கினான்.

பாலூரையும் அதன் மக்களையும் அங்கிருந்த அரசாங்க அதிகாரிகளையும் சர்வ விளக்கமாக அறிந்தவன் நானொருவனே என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த அநபாயருக்குத் தன்னை மீறி விவகாரங்கள் அறிந்தவன் ஒருவனிருக்கிறானென்பதே பெரும் வியப்பாயிருந்ததால் அந்த வியப்பைச் சொற்கள் மூலம் காட்ட முற்பட்டு, “அமீர், உன் திறமை இன்றுதான் எனக்கு முழுவதும் புலப்படுகிறது” என்று கூறினான்.

இதழ்களில் லேசான புன்முறுவலொன்று தவழ அநபாயனை நோக்கிய அமீர் சற்று விஷமத்துடனேயே கேட்டான், “ஏன் இதுவரை புலப்படவில்லையா?” என்று. அநபாயன் பதிலுக்குச் சிரித்தான். “புலப்பட்டது அமீர், புலப்பட்டது. நீ திறமைசாலியென்பதும் எந்த நிலைமையையும் சமாளிக்கும் வல்லமை உனக்கு உண்டென்பதும் எனக்கு ஏற்கனவே தெரியும்” என்று பதிலும் சொன்னான் அநபாயன்.

“தெரிமா? அமீரின் கேள்வியில் ஏளனத்தின் சாயை நிரம்ப இருந்தது.


அதைக் கவனித்தும் கவனிக்காதவன்போல் பதில் சொன்ன அநபாயன், “தெரியும் அமீர், தெரியாவிட்டால் உன்னிடம் என்னுடைய அருமை நண்பர்களின் உயிரையும் மாபெரும் கடாரத்தின் பிற்காலத்தையும் ஒப்படைப்பேனா? உன் திறமையைப் பற்றி நான் சந்தேகிக்கவில்லை. இந்தப் பாலூரின் முக்கிட இடங்களிலெல்லாம், நீ ஆட்களை உன் வாணிபத்துக்கு அனுகூலமாக வைத்திருப்பதும் எனக்குத் தெரியும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : ரிக்ஷாக்காரன்
இயற்றியவர் : வாலி
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும்
அது ஆணவ சிரிப்பு
இங்கே நீ சிரிக்கும் புன்சிரிப்போ
ஆனந்த சிரிப்பு
நல்ல தீர்ப்பை உலகம் சொல்லும்
நாள் வரும் போது
அன்று சிரிப்பது யார்
அழுவது யார்
தெரியும் அப்போது

அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும்
அது ஆணவ சிரிப்பு ஆணவ சிரிப்பு...

வயிறு வலிக்கச் சிரிப்பவர்கள்
மனித ஜாதி
பிறர் வயிறெரிய சிரிப்பவர்கள்
மிருக ஜாதி
மனிதன் என்ற போர்வையில்
மிருகம் வாழும் நாட்டிலே
நீதி என்றும் நேர்மை என்றும்
எழுதி வைப்பார் ஏட்டிலே
எழுதி வைப்பார் ஏட்டிலே

அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும்
அது ஆணவச் சிரிப்பு
இங்கே நீ சிரிக்கும் புன்சிரிப்போ
ஆனந்த சிரிப்பு

நாணல் போல வளைவதுதான்
சட்டம் ஆகுமா
அதை வளைப்பதற்கு வழக்கறிஞர்
பட்டம் வேணுமா
தர்மத் தாயின் பிள்ளைகள்
தாயின் கண்ணை மறைப்பதா
உண்மை தன்னை ஊமை ஆக்கித்
தலைகுனிய வைப்பதா
தலை குனிய வைப்பதா

அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும்
அது ஆணவச் சிரிப்பு ஆணவச் சிரிப்பு

தோட்டம் காக்க போட்ட வேலி
பயிரைத் தின்பதோ
அதைக் கேள்வி கேட்க ஆளில்லாமல்
பார்த்து நிற்பதோ
நானொரு கை பார்க்கிறேன்
நேரம் வரும் கேட்கிறேன்
பூனை அல்ல புலிதான் என்று
போகப் போகக் காட்டுகிறேன்
போகப் போகக் காட்டுகிறேன்

# கொரோனா வைரஸ் தாக்கம் இல்லாத இந்த ஐந்து நாடுகள்

கொரோனாவால் பாதிக்கப்படாத சில நாடுகள் உள்ளன. அங்கு கொரோனாத் தொற்றால் பத்துக்கும் குறைவானவர்களே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் நம்ப முடிகிறதா?

இந்தியா மட்டும் அல்ல சர்வதேச அளவில் பல நாடுகள் இன்னும் கொரோனாவுடன் போராடிக் கொண்டிருக்கின்றன. எல்லாம் 2021 இல் சரியாகிவிடும், உலகம் மீண்டும் பழைய இயல்புக்குச் சென்றுவிடும் என அனைவரும் நினைக்க வேறொரு புதிய இயல்புக்கு உலகம் மெல்ல நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால், இந்தச் சூழலிலும் கொரோனாவால் பாதிக்கப்படாத சில நாடுகள் உள்ளன. அங்கு கொரோனாத் தொற்றால் பத்துக்கும் குறைவானவர்களே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் நம்ப முடிகிறதா?

கொரோனாவால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் கடைசி ஐந்து இடங்களில் இருக்கும் நாடுகள் குறித்து மட்டும் இங்கே தொகுத்துள்ளோம்

**மைக்ரோனேசியா (Federated States of Micronesia)**

இங்கு கொரோனாவால் ஒருவர் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளார் என்கிறது கொரோனா தொற்று குறித்த தகவல்களைத் தொடக்கத்திலிருந்து வழங்கிக் கொண்டிருக்கும் ஜான்ஸ் ஹாஃப்கின்ஸ் பல்கலைக்கழக இணையத்தளம்.

மேற்கு பசிபிக் பெருங்கடலில் இருக்கும் தீவு தொகுப்புகளின் நாடு மைக்ரோனேசியா. இங்கு 600 இற்கும் அதிகமான தீவுகள் உள்ளன. இந்த நாட்டின் மக்கள் தொகை ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம். இந்நாட்டின் பரப்பளவு 700 சதுர கி.மீ.

கொரோனா சார்ந்த ஓர் இறப்புக்கூட அங்கு பதிவாகவில்லை.

**வனுவாட்டு (Vanuatu)**

ஜான்ஸ் ஹாஃப்கின்ஸ் தரும் தகவல்களின்படி இங்கு கொரோனாவால் மூவர் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவும் தீவுகளின் தொகுப்புதான். ஏறத்தாழ 80 தீவுகள் அங்கு உள்ளன.. அவுஸ்திரேலியா பக்கத்தில் இந்நாடு அமைந்துள்ளது.

ஒரு சமயத்தில் இந்நாடு பிரான்ஸ் மற்றும் பிரிட்டனின் காலனி நாடாக இருந்தது.

**சமோஆ**

சமோஆ இதுவும் பசுபிக் பெருங்கடலில் அமைந்திருக்கும் ஒரு நாடுதான். இங்கு 3 பேர் மட்டுமே கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு காலத்தில் நியூசிலாந்தின் காலனி நாடாக இருந்த இந்த நாடு 1961 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. இந்நாடும் தீவுகள் கூட்டம்தான். இந்நாட்டின் மக்கள் தொகை இரண்டு இலட்சம்.

**மார்ஷல் தீவுகள் (Marshall Islands)**

வெறும் 55,000 பேர் வசிக்கும் தீவு நாடு இது. இங்கு இதுவரை நான்கு பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

போர்த்துக்கேயர்கள், ஜேர்மன், ஸ்பெயின், ஜப்பான், அமெரிக்கா என பல்வேறு நாடுகள் பல்வேறு காலகட்டங்களில் இந்த நாட்டை ஆக்கிரமித்து இருந்தனர்.

இந்நாடு தனிநாடாக இருந்தாலும் இப்போதும் அமெரிக்கக் கட்டுப்பாட்டில்தான் இந்த நாடு உள்ளது. பசுபிக் பெருங்கடலில்தான் இந்நாடும் அமைந்துள்ளது.

**சாலமன் தீவுகள் (Solomon Islands)**

பப்புவா நியுகினீயாவுக்கு தென் கிழக்கே அமைந்துள்ள தீவுகளின் கூட்டம் இது. இப்போது வரை அங்கு கொரோனாவால் 20 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறது ஜான்ஸ் ஹாஃப்கின்ஸ் பல்கலைக்கழக தரவுகள். இந்நாட்டின் மக்கள் தொகை ஏறத்தாழ 7 இலட்சம். மீன்பிடி தொழில்தான் இந்நாட்டின் பிரதான தொழிலாக உள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ் திரையுலகில் பல திரைப்படங்கள் பல தடைகளை தண்டி வெளியாகியுள்ளது. அப்படி இன்று திரையரங்குகளில் விஷ்ணு விஷால் மற்றும் ராணா டகுபதி நடிப்பில் பிரபு சாலமன் இயக்கத்தில் வெளியாகியுள்ள திரைப்படம் தான் காடன். மக்களின் பிரச்சினைகளை மட்டுமே படங்களில் பேசி வரும் நேரத்தில், வனத்தில் வாழும் விலங்குகளின் பிரச்சினைகளை பற்றியும் காடன் படம் பேசியுள்ளது. அப்படி உருவாகியுள்ள இப்படம் ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்துள்ளதா? இல்லையா? என்று பார்ப்போம்.

### கதைக்களம்

கோயம்புதூர் அருகே உள்ள ஒரு குறிப்பிட்ட காட்டு பகுதியில் இருக்கும் இலட்சகணக்கான மரங்களுக்கும், யானை உள்ளிட்ட பல விலங்குகளுக்கு காவலனாக இருக்கிறார் காடன் ராணா. ஆனால் தனது அதிகாரத்தை பயன்படுத்தி அமைச்சர் அங்கே டவுன்ஷிப் ஒன்றை உருவாக்க முயற்சி செய்கிறார்.



அதனை எதிர்க்கும் காடன், சட்டப்படி தடை வாங்குகிறான். அதனால் அவனை மீது வீண் பழி சுமத்தி சிறைக்குள் அடைகிறார்கள். காடுகளை சற்று டவுன்ஷிப்காக சுவர்களை எழுப்புகின்றனர். சிறையில் இருந்து விடுதலையாகி வந்த காடன், டவுன்ஷிப்பிற்கு எதிராக களமிறங்கி போராடுகிறான். அந்த போராட்டத்தில் காடன் வெற்றிபெற்றானா, இல்லையா என்பது தான் படத்தின் மீதி கதை.

### படத்தை பற்றிய அலசல்

நடிகர் ராணாவின் நடிப்பில் மிகவும் இயல்பாக உள்ளது. ஆனால் இவரது உடல்மொழி நடிப்பு, நடிகர் விக்ரமின் பிதாமகன் கதாபாத்திரத்தை ஞாபகப்படுத்துகிறது.

விஷ்ணு விஷால் கும்கி யானை வளர்க்கும் நபராக நடித்துள்ளார். சில காட்சிகளில் தனது நடிப்பின் மூலம் படத்தை பார்க்கும் அனைவரின் கண்களையும் கலங்க வைக்கிறார் விஷ்ணு விஷால்.

ஒரு பக்கம் பத்திரிகையாளராக ஒரு கதாநாயகி, மறுபுறம் காட்டில் திரியும் தீவிரவாதியாக இரண்டாம் கதாநாயகி நடித்துள்ளார்.

இதுவரை தமிழ் திரையுலகில் வெளியான பல திரைப் படங்களில் பார்த்த Templet இருக்கும் வில்லன் கதாபாத்திரத்தில் ஆனந்த் மகாதேவன்.

விஷ்ணு விஷால், ராணா இருவரை தவிர, மற்றவர்களின் கதாபாத்திரங்கள் தேர்வில் இயக்குநர் பிரபு சாலமன் கவனம் செலுத்தி இருந்திருக்கலாம்.

காட்டிற்குள் இருக்கும் காட்சிகள் அனைத்துமே அருமையாக ஒளிப்பதிவு செய்துள்ளார், ஏ.கே. அசோக் குமார். படத்தின் கதை பாராட்டுக்குரியது. ஆனால் திரைக்கதையில் கொஞ்சம் கவனம் செலுத்தி இருக்கலாம்.

## இந்தியன் 2 இல் விவேக்கின் கதாபாத்திரத்தில் நடிக்கப்போவது யார்?





காமெடி நடிகர் விவேக் கடந்த ஏப்ரல் 17ஆம் திகதி நம்மைவிட்டு பிரிந் தார்.

அவரது மறைவு யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக உள்ளது. விவேக்கிற்கு நடிகர் கமல் ஹாசனுடன் இணைந்து ஒரு படம் நடித்துவிட வேண்டும் என்பது ஆசை.

அதுவும் இந்தியன் 2 படம் மூலம் நிறைவேறியது. இதுவரை பாதி படம் நடித்து முடித்துள்ளார்.

படத்தில் அவரது காட்சிகள் வரும் என்று எதிர் பார்த்தால் அது நடக்காதாம். காரணம் விவேக் பொலிஸ் அதிகாரியாக படத்தில் நடித்திருப்பது முக்கிய வேடமாம்.

இதனால் அவருக்கு பதிலாக வேறொரு நடிகரை வைத்து முழு கதாபாத்திரம் எடுக்க இருக்கிறார்களாம். தற்போது விவேக்கிற்கு பதிலாக படத்தில் நடிக்க சில இளம் நடிகர்களின் பெயர் அடிபடுகின்றன.

விரைவில் அதற்கான அறிவிப்பு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## விஸ்வாசம் படத்தையே மிஞ்சுமளவு வலிமை படத்தில் உள்ள ஒரு ஸ்பெஷல் விடயம், என்ன தெரியுமா?

தல அஜித்குமார் தற்போது திரைப்படங்களில் நடிப்பது மட்டுமின்றி தனக்கு பிடித்த பல்வேறு விடயங்களை செய்து வருகிறார்.

மேலும் கடைசியாக இவர் நடிப்பில் வெளியான விஸ்வாசம் மற்றும் நேர் கொண்ட பார்வை உள்ளிட்ட திரைப்படங்கள் மிக பெரிய வசூல் சாதனை படை த்தது.

அதனை தொடர்ந்து தல அஜித் இயக்குநர் எச்.வினோத் இயக்கத்தில் வலிமை திரைப் படத்தில் நடித்து வந்தார். இப்படத்தின் முதல் பார்வை மே முதலாம் திகதி வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பர்ஸ்ட் லுக் வெளியீடு தேதி தள்ளி வைக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது வலிமை திரைப்படம் குறித்து ஒரு சுவாரஸ்யமான தகவல் வெளியாகியுள்ளது.

ஆம், மிடுக்கான பொலிஸ் கதாபாத்திரத்தில் அஜித் இதில் நடிக்கின்றார். படத்தில் அம்மா, அண்ணன், தங்கை, மகன் என செண்டிமெண்ட் விடயங்கள் அதிகமாம்.

விஸ்வாசம் படத்தை மிஞ்சுகிற அளவு மனதை உருகும் குடும்ப செண்டிமெண்ட் காட்சிகள் வலிமை படத்தில் உள்ளதாம்.

## வெளியானது அரண்மனை 3 முதற்பார்வை




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏ.பி.டி வில்லியர்ஸ் வந்தால் மைதானம் அனல் பறக்கும்

**“தோற்றுவிடுவோமோ என்கிற பயம்தான் என்னை ஒவ்வொரு முறையும் ஆட்டத்தில் அதிக கவனம் செலுத்த வைக்கிறது என மும்பைக்கு எதிரான போட்டிக்கு பிறகு டி வில்லியர்ஸ் கூறியிருந்தார். ஒய்வுபெற்று விட்ட பிறகும் இன்னமும் தன் மீது தானே அழுத்தத்தை போட்டுக் கொண்டு தன்னுடைய தரநிலைகளை உயர்த்திக் கொண்டிருக்கிறார் டி வில்லியர்ஸ்.”**

இயந்திரங்களால் எப்போதுமே நாம் எதிர்பார்க்கும் 100 சதவிகித செயற்றிறனை கொடுக்க முடியாது என்பது அறிவியல் உண்மை. அதே மாதிரியே, மனிதர்களுமே கூட எல்லா சூழல்களிலும் யாருடைய எதிர்பார்ப்பையும் 100 சதவிகிதம் பூர்த்தி செய்து விட முடியாது. இது மனித இயல்பு. ஆனால், எல்லாவற்றுக்கும் விதிவிலக்கு இருப்பது போல, கிரிக்கெட் உலகில் இந்த விடயத்தில் விதிவிலக்காக ஒரு வீரர் இருக்கிறார்.


ஏ.பி.டி வில்லியர்ஸ் எனும் அந்த வீரர் தன்னுடைய அணி எப்போதெல்லாம் அவரிடமிருந்து மட்ச் வின்னிங் இன்னிங்ஸை எதிர்பார்க்கிறதோ அப்போதெல்லாம் அடித்து துவம்சம் செய்கிறார். ஆர்சிபி “ஈ சாலா கப் நம்தே” என ரிப்பீட் மோடில் சொல்லி சொல்லி ஏமாற்றினாலும் இந்த ஏலியன் டி வில்லியர்ஸ் மட்டும் ஒருமுறை கூட ரசிகர்களை ஏமாற்றியதில்லை.

இந்த சீசனில் ஆர்.சி.பி.அணி நடைபெறும் ஆரம்பலீக் போட்டிகளிலும் சிறப்பாக ஆடி நல்ல வெற்றியை பெற்றிருக்கிறது. இந்த வெற்றிகளில் டி வில்லியர்ஸின் பங்கு அளப்பரியதாக இருக்கிறது. மும்பை அணிக்கு எதிராக சேஸிங்கின் போது அழுத்தமிக்க சூழலில் 27 பந்துகளில் 48 ரன்கள் அடித்து வெற்றிபெற வைத்தார். கொல்கத்தாவுக்கு எதிராக 34 பந்துகளில் 76 ரன்கள் அடித்து அணியின் ஸ்கோரை 200+ ஆக உயர்த்த உதவினார்.

இந்த இரண்டு போட்டிகள் குறித்து பேசும் போது இன்னும் சில விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. இவையனைத்துமே சென்னை சேப்பாக்கத்தில் வைத்து நடைபெற்ற போட்டிகள். மற்ற அணிகளும் முக்கியமான வீரர்களும் சேப்பாக்கத்தில் வைத்து கடுமையாக திணறுகின்றனர். குறிப்பாக, டெத் ஓவர்களில் 20-30 ரன்களை அடிப்பதே சிரமமாக இருக்கிறத். ஆனால், டி வில்லியர்ஸ் டெத் ஓவர்களில்தான் அதிரடி சூறாவளியாக வெளுத்து வாங்குார். அதே மாதிரி, டெத் ஓவர்களில் ரஸலுக்கு எதிராக மற்ற அணியின் பட்ஸ்மன்கள் கடுமையாக சொதப்பியிருந்தனர்.

பிக் ஹிட்டர்களுக்கு பெயர் போன மும்பை இந்தியன்ஸ் அணி கூட ரஸலின் டெத் ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து பணிந்தது. ஆனால், டிவில்லியர்ஸ் ரஸலின் இரண்டு ஓவர்களில் 38 ரன்களை பிரித்து மேய்ந்திருந்தார். மற்ற வீரர்களுக்கு அசாத்தியமான இலக்காக தெரியும் விடயங்கள் டிவில்லியர்ஸ்க்கு மட்டும் மிகச்சாதாரணமாக தெரிகிறது. இத்தனைக்கும் டி வில்லியர்ஸ் டுபாயில் நடந்த கடந்த ஐ.பி.எல்.சீசனுக்கு பிறகு இப்போதுதான் மீண்டும் கிரிக்கெட் ஆட வந்திருக்கிறார். இடையில் 5 மாதங்கள் அவர் கிரிக்கெட்டே ஆடவில்லை என சொன்னால் யாரும் நம்பவே மாட்டார்கள்.

2018 ஆம் ஆண்டு யாரும் எதிர்பார்க்காத சமயத்தில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார் டி வில்லியர்ஸ். அதன்பிறகு, முழுக்க முழுக்க உலகமெங்கும் நடைபெறும் ப்ரிமியர் லீக் போட்டிகளில் மட்டுமே கவனம் செலுத்தினார். அதிலும், குறிப்பாக ஐ.பி.எல்.இற்கு மட்டும் கூடுதல் கவனம் செலுத்தினார். 2019 சீசனில் ஆர்.சி.பி.அணிக்காக 442 ரன்களை சேர்த்திருந்தார். இதில் ஆச்சரியம் ஒன்றுமே இல்லை. 2020 சீசனில் 454 ரன்களை சேர்த்திருந்தார். இது தான் மிகப்பெரிய ஆச்சரியம்.



2020 இல் கொரோனா பாதிப்பினால் உலக நாடுகள் மொத்தமாக முடங்கியிருந்தன. எந்தவிதமான கிரிக்கெட் போட்டிகளும் சில காலங்களுக்கு நடைபெறவில்லை. நிலைமைகள் கொஞ்சம் சரியாகத்தொடங்கிய நேரத்தில் கிரிக்கெட் போட்டிகளும் மெது மெதுவாக தொடங்கின. ஐ.பி.எல்.போட்டிகளும் டுபாயில் நடைபெறப்போவதாக திட்டமிடப்பட்டது. ஆனால், நீண்ட நாட்கள் ஓய்விலிருந்ததால் பெரும்பாலான வீரர்கள் தங்களுடைய போர்மை இழந்திருந்தனர். பலருக்கும் பிட்னஸிலும் பெரிய பிரச்சினைகள் இருந்தது.

தற்போது சர்வதேச அணிகளுக்கு ஆடிக்கொண்டிருக்கும் வீரர்கள் கூட அதிக எடையுடன் காணப்பட்டனர். செட் ஆவதற்கு முதல் ஒன்றிரண்டு போட்டிகளை எடுத்துக்கொண்டனர். ஆனால், டி வில்லியர்ஸ்க்கு அப்படி எதுவுமே தேவைப்படவில்லை. 2019 சீசனில் என்ன பிட்னஸோடு, என்ன போர்மோடு தென்னாப்பிரிக்கவுக்கு ப்ளைட் ஏறினாரோ அதே பிட்னஸோடு அதே போர்மோடு டுபாயில் காலடி எடுத்து வைத்தார். சன்ரைசர்ஸ்க்கு எதிராக முதல் போட்டியிலேயே அரைச்சதத்தோடுதான் சீசனை தொடங்கினார். உனத்கட்டின் ஓவரில் ஹட்ரிக் சிக்ஸர்களை அடித்து சேஸிங்கில் சம்பவமெல்லாம் செய்திருந்தார். ஆர்சிபி அவரிடம் என்ன எதிர்பார்த்ததோ அதில் துளிகூட குறைவில்லாமல் செய்து கொடுத்தார்.

சர்வதேச போட்டிகளில் ஆடாமல் ஐபிஎல் மாதிரியான போட்டிகளில் மட்டுமே ஆடும் வீரர்கள் இப்போது பெரிதாக சோபிப்பதில்லை. டோனியை கூட உதாரணமாக சொல்லலாம். நான்கைந்து வருடத்திற்கு முன்பு பார்த்த டோனி இப்போது இல்லை. காரணம், அவர் சர்வதேச போட்டிகள் உள்ளூர் போட்டிகள் என எதிலும் ஆடுவதில்லை. ஐ.பி.எல்.இல் மட்டுமே ஆடுகிறார். ஆண்டு முழுவதும் கிரிக்கெட்டிலிருந்து ஒதுங்கியிருந்துவிட்டு இரண்டு மாதங்களில் மட்டும் கிரிக்கெட் ஆடி போர்முக்கு வர வேண்டும் என்பது சாத்தியமற்றது. ஆனால், டோனிக்கு கூட கைகூடாத அந்த வித்தை டி வில்லியர்ஸ்க்கு கை கூடியிருக்கிறது.

டி வில்லியர்ஸ் நீண்ட நாட்கள் கிரிக்கெட் ஆடாவிட்டாலும் தன்னுடைய டெக்னிக்கை மங்கவிடாமல் வைத்திருக்கிறார். மூன்று வருடங்களுக்கு முன்புள்ள டி வில்லியர்ஸின் ஷொட் ஆடும் திறனும் இப்போதுள்ள டி வில்லியர்ஸின் ஷொட் திறனும் ஒரே மாதிரியாகவே இருக்கிறது. காரணம், அந்த அடிப்படையான டெக்னிக். பின்னங்காலை க்ரீஸ்க்குள் முழுமையாக ஊன்றி தலையை திடகாத்திரமாக வைத்து பந்தை கடைசி நொடி வரைப்பார்த்து ஏதுவான ஷொட்டை தேர்வு செய்வார்.

டெக்னிக்கலாக எவ்வளவு பலமாக இருந்தாலும், 37 வயதான ஒரு வீரர் இவ்வளவு சிறப்பாக ஆடுகிறார் எனில் அவருடைய மனோபலமும் இங்கே விவாதிக்கப்பட வேண்டும். “தோற்றுவிடுவோமோ என்கிற பயம்தான் என்னை ஒவ்வொரு முறையும் ஆட்டத்தில் அதிக கவனம் செலுத்த வைக்கிறது” என மும்பைக்கு எதிரான போட்டிக்கு பிறகு டி வில்லியர்ஸ் கூறியிருந்தார். ஓய்வுபெற்றுவிட்ட பிறகும் இன்னமும் தன் மீது தானே அழுத்தத்தை போட்டுக் கொண்டு தன்னுடைய தரநிலைகளை உயர்த்திக் கொண்டிருக்கிறார் டி வில்லியர்ஸ்.

இப்படி ஒரு வீரர் இல்லாமல் உலகக்கோப்பையை எதிர்கொள்ளக்கூடாது. டி வில்லியர்ஸை உடனே தென்னாபிரிக்க அணிக்கு அழையுங்கள் என குரல்கள் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. டி வில்லியர்ஸ்மே மீண்டும் தென்னாபிரிக்க அணிக்கு உலகக் கோப்பையில் ஆடுவதற்கு தயாராகவே இருக்கிறார். காலம் எப்போதாவது தான் ஏ.பி.டி வில்லியர்ஸ் மாதிரியான வீரர்களை பரிசாக அளிக்கும். அவரை பயன்படுத்திக் கொண்டு இதுவரை கோப்பையையே வெல்லாத ஆர்.சி.பியும் தென்னாபிரிக்கவும் வெற்றி வாகை சூடினால் அது வரலாற்று நிகழ்வாக மாறி நிற்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிச்சென் இட்சா (மெக்சிகோ)

இன்றைக்கு புதிய உலக அதிசயங்கள் தேர்வுப்பட்டியலில் இடம் பெற நடந்த வாக்கெடுப்பில் கிஸா பிரமிடுகள் இருப்பதை அவமானமாக எகிப்தியர்கள் கருதினர் என்பதை முன்பே அறிந்திருக்கிறோம்.

வாக்கெடுப்புக்கெல்லாம் அப்பாற்பட்ட அற்புதம் அவை என்று எகிப்தியர்கள் கருதியதுதான் அவர்களின் எதிர்ப்புக்குக் காரணம். அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து வாக்கெடுப்பில் இருந்து கிஸா பிரமிடுகளை நீக்கினர்.

மதிப்புமிக்க புராதனச் சின்னமாக கிஸா பிரமிடுகளைத் தேர்வுக்குழுவினர் அறிவித்தனர்.

ஆனால் ஆண்டிபாட்டருக்குப் பிறகு ஃப்ருவர் தேர்வு செய்த பட்டியலில் கிஸா பிரமிடுகள் இடம் பெறவில்லை என்பதனை எகிப்தியர்கள் ஏன் கவனிக்க மறந்தார்கள் என்று தெரியவில்லை.

கிஸா பிரமிடுகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு பட்டியலில் இடம்பிடித்தது மெக்சிகோவிலுள்ள சிச்சென் இட்சா பிரமிடுகள்.

சிச்சென் இட்சா இன்றைய மெக்சிகோவின் யுகாட்டன் மாகாணத்தின் தலைநகரம் மெரிடாவிலிருந்து சுமார் 75 மைல் தொலைவில் உள்ள கலை மற்றும் பண்பாட்டுச் சிறப்புமிக்க நகரம்.

சிச்சென் இட்சா நிர்மாணிக்கப்பட்டதும் அங்குள்ள வனப்புமிக்க



பிரமிடுகளை உருவாக்கியதும் கி.பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த மெசோ அமெரிக்கப் பழங்குடியினரான மாயன்கள் தான்.

தொல்பொருள் ஆய்வாளர்கள் அள்ளஅள்ளக் குறையாத அற்புதங்களைத் தங்களுக்குள் புதைத்து வைத்திருந்தவர்கள் மாயன்கள்.

மாயன்களின் மொழியில் சி (வாய்) சென் (கிணறு) இட்சா (மாயன்களின் ஒரு பிரிவான இட்சா இனம்) என்று பொருள்படும்.

பிரமிடுகள் அமைந்துள்ள பகுதியின் மையப்பகுதியில் புனிதக் கிணறு ஒன்று இருக்கும். அந்தத் தண்ணீர் மந்திர சக்தி உடையது என்பது அவர்களின் நம்பிக்கை. அந்தக் கிணற்றை சென்றடையும் வாசல் பகுதியாக அந்தப் பிரமிடுகள் அமைக்கப்பட்டதால் அந்தப் பெயர் வந்தது. செவ்வியல் நாகரீகக்காலம் என்று அழைக்கப்பட்ட கி.பி.600 இற்கும் 800 இற்கும் இடைப்பட்ட காலம் உலகமெங்கும் அறிவியலும் கலைப் படைப்புகளும் செழித்தோங்கிய வருடங்கள் என்று கருதப்படுகிறது.

இயல்பாகவே மாயன்கள் கலை நேர்த்தியில் மேன்மைமிக்கவர்கள். பயணிகள் வழி அறியப்பட்ட நுட்பங்கள் பிற குழுக்களின் ஆக்கிரமிப்பினால் பெறப்பட்ட அறிவினால் செய்யப்பட்ட முயற்சிகள் மாயன்களின் கட்டடக்கலையில் புதிய எழுச்சியை ஏற்படுத்தின.

அதன் உச்சபட்ச வெளிப்பாடுகளை சிச்சென் இட்சா பிரமிடுகளில் நாம் காண முடியும்.

மாயன் பழங்குடியினர் இன்றைய மெக்சிகோவின் தென்பகுதி, மத்திய அமெரிக்க நாடுகளான குவாட்டமாலா, ஹோண்டுராஸ், எல்சல்வடோர் ஆகிய பகுதிகளில் வசித்தவர்கள். சுமார் 60 இலட்சம் பேராக இருந்த மாயன்களின் மக்கள் தொகை ஸ்பானிஷ் ஆக்கிரமிப்புக்குப்பிறகு சுருங்கத் தொடங்கியது.

மாயன் மொழியின் உட்பிரிவுகள் பலவும் இன்று முற்றிலும் அழிந்துவிட்டன. பிற இனத்தவரின் கலப்பு காரணமாக அவர்களின் இனமும் மொழியும் இன்று அரிதாகி விட்டது. மாயன்கள் ஒன்றுபட்ட சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆண்டவர்கள் இல்லை. அவர்களுக்குள்ளாகவே பல்வேறு இனக்குழுக்கள் அந்தக் குழுக்களின் ஆளுமைகளுக்கு ஏற்ப சிறு சிறு நிர்வாகம்.

இவ்வாறு பிரிந்து கிடந்ததன் காரணமாக அவர்களுக்குள் பல்வேறு குழுச்சண்டைகள், பிற இன மக்களின் ஆக்கிரமிப்புகள் என நிலையற்ற வாழ்வு அவர்களிடையே இருந்து வந்தது.

(தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2294

**ஜனந்தன்**


உனக்கு வேற வேலையே இல்லையா எப்பாரு காசு கடன் கேட்டுட்டு இருக்கே?



என் கையில காசு இருந்தா நா ஏன்டா உன்னிடம் கேட்கப்போறேன்...

**விஜய்**

மதியம் கொஞ்ச நேரம் தூங்கினதுக்கு



நைட்டு பூராவும் தூக்கம் வராம இருக்கிற வேதனை இருக்கே வேதனை...

**இந்துஷா**

"நம்பிக் கட்டினோம்"
"நன்றாக இருக்கிறோம்"



மாமனார் வீட்டுல டிவி பாக்கும்போது இந்த விளம்பரம் அடிக்கடி வந்தா கடுப்பாகுமா இல்லையா...

**குந்தவி**

காதலித்து வெற்றி பெற்றவனுக்குத்தான் தெரியும்...



வெற்றி எவ்வளவு கொடுமையானது என்று...

**காந்தன்**

தனிமையில் இருப்பவனை பைத்தியம் என்று சொன்ன உலகம்...



இன்று தனிமையில் இருப்பதே வைத்தியம் என்கிறது.

**சாங்கர்**

அது வேணும் இது வேணும் என்று நச்சரிக்காத மனைவிக்கு தான்...



கஷ்டப்பட்டு சம்பாதிச்சு நிறைய செய்யணும் என்று கணவன் ஆசைப்படுவான்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 250

# தொற்றா நோய்கள்

ஒரு சில தசாப்தங்களாக எமது உடலில் நிகழும் உடற் தொழிற்பாட்டு மாற்றங்களால் ஏற்படும் நோய் நிலைமைகளே தொற்றா நோய்கள் என அழைக் கப்படுகின்றன.

தொற்றா நோய்கள் பிரதானமாக நான்கு பிரிவுகளாப் பிரிக்கப்படுகின்றன. அவையாவன.

1. குருதிக்குழாய் தொடர்பான நோய்கள்
   உ+ம்: மாரடைப்பு, பாரிசவாதம்
2. புற்றுநோய்
3. சுவாச நோய்கள்
   உ+ம்: நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் (COPD)
   சுவாசப்பை அழற்சி - BA
4. நீரிழிவு
5. Fathylirev → NAFLD → NASH → Cirrhoti

● இவை உலகளவில் 68% இறப்பிற்கு காரண மாகின்றன. இவற்றுள் 40% இற்கும் அதிகமான இறப்புகள் குறைந்த வயதில் அதாவது 70 வயதிற்கும் குறைந்தவர்களில் ஏற்படுகின்றது.

● இவ்விறப்புகளில் 75% இற்கும் அதிகமான தொற்றா நோய் இறப்புகள் குறைந்த மற்றும் மத்திய வருமான நாடுகளில் ஏற்படுகின்றன.

● குறிப்பாக குருதிக்குழாய் தொடர்பான நோய்கள் மற்றும் நீரிழிவு ஆகியன முதலாவது காரணமாக விளங்குகின்றன. அதாவது 41%.

இரண்டாவது காரணமாக புற்று நோயும் (27%). மூன்றாவது காரணமாக சுவாச நோய்களும் (8%) விளங்குகின்றன.


சர்வதேச சலரோக கூட்டமைப்பின் கொள்கைகளின் படி I(DF)

2015 - 415 மில்லியன்-நீரிழிவு
2040 -640 மில்லியன்- நீரிழிவு

உலக சுகாதார ஸ்தாபன அறிக்கை - 2014 இன்படி உயர் குருதி அமுக்கம் (>140/90)-22%.

18 வயதிற்கும் அதிகமானவர்களில் உடற்பருமன் கூடியவர்களின் சதவீதம்
2014-39%

**இலங்கையில் (2019)**



>60 வயதுக்கு மேற்பட்டோரில் 2014 ஆம் ஆண்டில் இரு நபர்களில் ஒரு நபருக்கு ஏதாவது ஒரு நீண்டகால நோய் இருப்பதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

**தொற்றா நோய்களை ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு காரணிகள்**

1. சீரற்ற உணவுப் பழக்க வழக்கங்கள் -72.5%
2. உடற்பயிற்சியின்மை-30.4%
3. புகைத்தல் - 15%
4. மதுப்பாவனை -34.5%

**உடற்தொழிற்பாட்டு மாற்றங்கள்**

1. அதிகரித்த குருதிக் குளுக்கோஸ் மட்டம்
2. அதிகரித்த உடற்பருமன்
3. உயர்குருதியமுக்கம்.
4. அதிகரித்த கொலஸ்ரோல்

**தொற்றா நோய்களுக்கான முற்கூட்டிய பரீட்சித்துப் பார்த்தல் பரிசோதனைகள்.**

**முற்கூட்டிய பரீட்சித்துப் பார்த்தலின் முக்கியத்துவம்**

1. தேற்றா நோய்கள் -நோய் நிர்ணயம் ஏற்படுவதற்கு முன்னரான நீண்டகால குணங்குறிகள் அற்ற காலப் பகுதியைக் கொண்டிருத்தல் (Pre symplomavic Phaser)

2. நோய்நிலைகளைக் கண்டறிய மிக எளிதான மற்றும் இலகுவில் அணுகக் கூடிய சோதனைகள் காணப்படுகின்றமை.

3. நோய்களால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளை வுகள் அந்நோய்களின் கண்டறியப்பட்ட காலப்பகுதியில் தங்கியுள்ளது.

4. நோய்களைத் தடுக்கக் கூடிய, அவற்றின் பாதிப்பு வீதத்தை குறைக்கக் கூடிய மற்றும் நோய்களால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளைக் கட்டுப்படுத்தக் கூடிய வினைத்திறன் மிக்க பொறிமுறைகள் காணப்படுகின்றமை

**முற்கூட்டி பரீட்சித்துப் பார்ப்பதற்கான வரைமுறைகள்**

1. வயது >40Yr
2. வயது 30-40
   -1. புகைத்தல்
   -2 உடற்திணிவுச் சுட்டி >25
   -3. இடுப்புச் சுற்றளவு
      ஆண் >90 சென்றிமீற்றர்
      பெண் >80 சென்றிமீற்றர்
   -4. அதிகரித்த குருதியமுக்கம் >140/90
   -5. நீரிழிவு நோய்க்கான அறிகுறிகள்
   -6. 1ம் தலைமுறை உறவினர்களுக்கு குருதிக்குழாய் நோய்கள் இருத்தல்.
   -7. 1ம் தலைமுறை உறவினர்களுக்கு நீரிழிவு இருத்தல்.

**தொற்றா நோய்களுக்கான சிகிச்சை முறை - வாழ்க்கை முறையில் ஏற்படுத்தக் கூடிய மாற்றங்கள்**

-பொதுவாக தொற்றா நோய்களுக்கு ஆயுட்கால சிகிச்சை தேவைப்படுகிறது.

-80% மான தொற்றா நோய்கள் சரியான உணவுப் பழக்க மற்றும் வாழ்க்கை முறைகளால் தடுக்கப்படக் கூடியவை.

- அநேகமான தொற்றா நோய்களைத் தடுக்க வழி கோலாக அமைவன எமது நடத்தையில் மற்றும் மன ரீதியில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் ஆகும்.

உணவுப் பழக்க வழக்கங்கள், உடற்பயிற்சி, மன அழுத்த சிகிச்சை, புகைத்தல் மற்றும் மதுபாவனை என்பன இதில் அடங்குகின்றன.

நடத்தை ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான முக்கிய படிநிலைகள் - '5As'

1. ஆராய்வு (Assess)

நடத்தை ரீதியாக மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதான நடத்தை சார் ஆபத்துக் காரணிகளை ஆராய்தல்.

2 அறிவுரை (Advise)

தெளிவான, விஞ்ஞான ரீதியான மையப்படுத் தப்பட்ட நடத்தை சார் மாற்றங்களை அறிவுறுத்துதல்.

3. ஒத்துக் கொள்ளல் (Agree)

நோயாளியின் விருப்பத்திற்கேற்ற சரியான சிகிச்சை முறையை தேர்வு செய்தல்

4. உதவிசெய்தல் (Assist)

5. ஒழுங்குபடுத்துதல் (Arrange)

**ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களை ஊக்கவித்தல்**

1. இலகுவான, இயலுமான வழிமுறைகளைப் பின் பற்றுதல்
   உ+ம்: சாப்பாட்டுத்தட்டு முறைமை

   -இலகுவான முறைமைகளை கடைப்பிடித்தல்-
   1. சிறிய சாப்பாட்டுத் தட்டு மற்றும் சில உணவுக ளுக்கு கரண்டியை பாவித்தல்.
   2. முழுக் குடும்பமும் இம்முறைமைகளை நடை முறைப்படுத்தல்.

2. வீட்டுத் தோட்டம் அமைத்தலை ஊக்குவித்தல்.

3. ஆரோக்கியமான உணவு முறைமை பற்றிய வாசகங்கள் மற்றும் ஆலோசனைகளை சமையலறை மற்றும் சாப்பாட்டறையில் காட்சிப்படுத்தல்.

4. பொதி செய்யப்பட்ட உணவுகளின் கலோரிப் பெறுமானம் மற்றும் போசணைக் கூறுகளை வாசிப்பதை ஊக்கப்படுத்தல்.

5. உணவுப் பொருட்களில் சீனி அடங்கியுள்ள வீதம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தல் (Traffic Light System)

போசணை சமநிலை (Energy Balance)

-குருதியின் குளுக்கோஸ் அளவு, கொலஸ்ரோல் மற்றும் குருதி அமுக்கம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டிற்கு 5-10 % நிறை குறைப்பு நன்மை பயக்கிறது.

சாப்பாட்டு முறைமை - (Eating patreon)
புரதம் 10-35%
கொழுப்பு 20-25%
காபோவைதரேற்று 40-65%

நார்ச்சத்து கூடிய மற்றும் கிளைசீமிக் சுட்டி குறைந்த காபோவைதரேற் உணவுகளாவன.

1. மரக்கறி, பழங்கள், பருப்பு வகைகள்.
2. குறைந்தளவிலான உப்புச் சேர்க்கை

உணவுக் கொழுப்பு

1. ஒமேகா-3 கொழுப்பு அடங்கிய உணவுகளை உள்ளெடுத்தல்
   உ+ம்: பச்சைப்பயறு, கௌப்பி, பட்டாணி.

2. நிறைவுற்ற கொழுப்பு - 7%
   டிரான்ஸ் நிறைவுற்ற கொழுப்பு - 1%

3. டிரான்ஸ் நிறைவுற்ற கொழும்பு அடங்கியுள்ள உணவுகளாவன,
   கேக், குக்கீஸ், பிஸ்கட், மாஜரீன், பொப்கோன், பொரித்த துரித உணவுகள் இவற்றை குறைத்தல் அல்லது எடுக்காமல் விடுதல்.

4. எண்ணெய் மற்றும் கொழுப்பை குறைந்த அளவில் சேர்த்து உணவுளை தயாரித்தல்.

● நுண் போசணைக் கூறுகள் மற்றும் மூலிகைகள் போதுமான நன்மை பயக்கும் இயல்புகள் கண்டறியப் படவில்லை.

● சோடியத்தின் அளவு- <5g/நாள்

உடற்பயிற்சி தொடர்பான ஆலோசனைகள்.

1. சிறுவர்கள் - குறைந்தது 60 நிமிடங்கள்/நாள்.
   வயது வந்தவர்கள் குறைந்தது 30 நிமிடங்கள்/ நாள்
   நிறையை குறைப்பதற்கு 60 நிமிடங்கள்/நாள்
2. புகையிலை பாவனையை குறைத்தல்/தவிர்த்தல்.
3. மதுபாவனையை தவிர்த்தல்.

Dr.T. பேரானந்தராசா
பொது வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org